Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டி.ச.30–ஜன.05, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 440

## இந்தியாவை நம்பும் இருபக்கத் தந்திரம்

## சர்வதேச அழுத்தங்களும் சமாதான முயற்சியும்



வந்துபோன வருடமெல்லாம் வரவில்லை சமாதானம்
வரப்போகும் புதுவருடம் தரப்போகும் வரமென்ன?

வாசக நெஞ்சங்களுக்கு
இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள்!!

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்



## துயில் எழுப்பும் சுப்ரபாதம்

பக்திப் பரவசத்துடன் பாடல்களைப் பாடி தெய்வங்களைத் துயில் எழுப்புவது திருப்பள்ளி எழுச்சி எனப்படும். இதனை வட மொழியில் சுப்ரபாதம் என்பர். "கௌஸல்யா சுப்ரஜா ராமா பூர்வா ஸந்த்யா பிரவர்த்ததே உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமாத்மிகம்"என்ற வரிகள் இனிமையாக எம்காதுகளில் ஒலிப்பது போன்ற உணர்வு தோன்றும். ஏனெனில் இலட்சக்கணக்கான இந்துக்களின் வீட்டில் தினமும் அதிகாலையில் ஒலிக்கும் வெங்கடேச சுப்ரபாதத்தின் முதல் வரிகள் இவை. இத் தெய்வீக மந்திரங்களாகிய சுப்ரபாதத்தை முதன் முதலில் உருவாக்கியவர் விசுவாமித்திர முனிவர். தன்னுடைய வேள்வியைக் காக்க தன்னுடன் வனத்திற்கு அழைத்துச் சென்ற இராம லட்சுமணர்களுக்காகவே உருவாக்கினார். இந்தச் சுப்ரபாதத்தைப் பாடித்தான் தினமும் அதிகாலையில் அவர்களைத் துயில் எழுப்பினார்.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

## அருள் மறை வழங்கும் மாமருந்து

திருமறை இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட அற்புத மறை. அதிலே என்ன வளங்கள் இல்லை என்ன விடயங்கள் இல்லை. அதனது அமைப்பு அது போதிக்கும் விடயங்கள் மனிதனை மனிதப்பிணிதனாக மாற்றியமைக்கும் தன்மை கொண்டது. அந்த அற்புத. மறை நோய் அகற்றும் மாமருந்தாகவும் பயன்பட்டுக் கொண்டிருப்பதை நம்மில் அனேகர் அறிந்திருக்கவில்லை.

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

இதனை ஒருவன் ஓதிவந்தால், அவனை விட்டும் எழுபது இன்னல்களை இறைவன் நீக்குவான். அவற்றில் முக்கியமானவை "துக்கம்-விசனம்-விபத்து முதலியவை. இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**அல்ஹமீது சுளா**

இந்த சூறாவை பிஸ்மியுடன் 41 முறை ஓதி நோயாளியின் மீது ஊதினால் அவனது நோயை இறைவன் நீக்கிவிடுவான். இது பரிசோதனை செய்யப்பட்டதொன்று. ஒவ்வொரு பர்ளான தொழுகைக்குப் பின்னாலும் ஏழு தடவை வீதம் ஒருவன் ஓதி வந்தால் அவனுக்கு இறைவன் நன்மைக்கான வழியைக் காண்பிப்பான். ஈருலகக் காரியங்களையும் சிறப்பாக நிறைவேற்றிவைப்பான்.

இப்படியாக அல் குர்ஆனிலுள்ள ஒவ்வொரு சூறாவிலும் ஏகப்பட்ட மருத்துவப் பண்புகள் காணப்படுகின்றன. நாம் அனைவரும் அல்குர்ஆனை ஓதி நல்லபயனைப் பெறுவோம். அல்ஹம்துலில்லாஹ் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

மஸீனா நளீர்-மூதூர்-06.

## ஏழைகளுக்கு உதவுங்கள்

"நீ என்னுடையவன் நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்;

நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை.."

ஏசாயா 43:1-2


கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே;

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து செல்வந்தர்களை அல்ல, ஏழை, எளியவர்களைத் தேடி வந்தார்.

பெலவீனர்களையும், அற்பமாய் எண்ணப்பட்டவர்களையும், குறைவுடையவர்களையும் தமது சீடராக தெரிந்து கொண்டார் "ஏழைகளுக்கு பெலன் கொடுப்பவர்" என்று ஏசாயா 25:4ல் சொல்லப்பட்டுள்ளது. "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்." என்று சங்கீதம் 34:6ல் பார்க்கிறோம். ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் என்று நீதி 19:17ல் சொல்லப்பட்டு உள்ளது. ஏழைகளின் நியாயத்தை விசாரிக்கிறவர் என்று ஏசாயா 11:4, சங்கீதம் 72:2ல் பார்க்கிறோம். ஏழைகளைக் குறித்து கரிசனைக் கொண்டவர் நம்முடைய கர்த்தர். இன்று நான் ஒன்றுமில்லாதவன் என்று கலங்குகிறவர்களின் பெருமூச்சைக் கேட்கிற தேவன். இவர் ஏழை, எளியவர்களுக்கு விரோதமாக சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்து சுகமாயிருக்கப் பண்ணுவேன் என்று இப்பகுதியில் வாக்கு கொடுத்திருக்கிறார்.

டி.ஜேசுராஜா-ஹட்டன்.

## கவிதைப் போட்டி இல.440



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.01.2002

கவிதைப் போட்டி இல.440
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.437

**பரிசுக்குரிய கவிதை**

### சிறுபான்மை

அதிகார வலைக்குள்
சிக்கிய சந்ததிகள்
கதி கறியாவதா?
கடல் சேர்வதா?

பாத்திமா மிஷாரா-அக்குறணை-08.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### இப்படியும் சில மனிதர்கள்!

அலைகடல் மீதிலே
ஆனந்தக் களிப்புடன்
துள்ளிக் குதித்தாடிய
என்னை
வலை வீசி விலை பேசி
என்னுயிரையே
பறித்து விட்டாயே..!?
மனிதனே..!
உனக்கு
திருப்திதானா...?

சஹறுல் எம்.சலாஹுடீன்-உக்குவெல.

### உறுதி

தரம் வாய்ந்த மீனே
தவித்திடு கொஞ்சம்
தரணியில் மடிவது
உறுதியாகிவிட்டது...

ப.விநாயகமூர்த்தி-மஸ்கெலியா.

### உயிர்ப்பிரிவு

கடலிடைப் பிறந்த அமுதே!
கரிய நிறப் பாம்பு
கருடன் வாய்ப்பட்டுத்தப்ப
முடியாததைப் போன்று
நீயும் இனித்தப்பமுடியாது!

கிருஸ்னன் சிவா-மஸ்கெலியா.

### கவனம்!

மீனைவேட்டையாட
வலைவிரிக்கிறாய்-அந்தோ!
உனை வேட்டு வைக்க
வலைவிரிக்கிறார்கள் பார்!

சோ.சங்கரலிங்கம்-திருப்பழுகாமம்-02.

### பாட்டாளி!

உதிரிகள் கிடையாது
உழைப்பில்!
'உழைப்பில் விளைந்தவை
மண்ணளவானாலும்
வீணாக்காதே அவை
பொன்னானது!'

ஏ.எப்.எம்.றியாட்-முள்ளிப்பொத்தானை.

### பரிதாபம்

என்
வாழ்நாளோ
உன்னை நம்பி
காலை முதல்
மாலை வரை
காத்திருந்தேன்
கைக்கெட்டியதோ
ஒன்றே ஒன்றா!

துரைராஜா பரிமலாதேவி-திக்கனபத்தனை.

### கவனம்

காலம் கெட்டுவிட்டது
கவனமாய் கை வையும்
கடல் மீனோ- அன்றி
கடல் கண்ணியோ இது?

பி.சி.அன்ரன்-மட்/கூளாவடி.

### நீயும்! நானும்! ஒன்றே(ா)!?

நூல் வலையில்
சிக்கிவிட்டதினால்-நீ
தவிக்கின்றாய்...!
குடும்பச்சங்கிலியால்...
பின்னப்பட்ட
பாசவலைக்குள்-நான்
அகப்பட்டுவிட்டதனிலால்...!
நிதமும் தவிக்கின்றேன்...!
மொத்தத்தில்....

மும்தாஜ் வ.முத்தலிப்(f)-அனுராதபுரம்.

### வாக்கு

வலைபோட்ட
வாலிபனோ-பயனாய்
மீன் பிடிக்கிறான்
ஆனால்
வாக்குப் போட்ட
நாமோ...?

ஆனந்-மன்னார்.

### காலத்தின் கோலம்

வலை விரித்து
மீன் பிடித்து
ஊருக்கெல்லாம்
வினியோகிக்கிறாய்.
காலம் உனக்கு
வலை விரித்து
மண்ணுக்கு
உரமாக்குகிறது.

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.

### தனிமை வாக்கு!

உங்கள் எல்லோருக்கும்
வாக்காளர் அட்டையினை
வலையிலே தந்தோமே!
நீ மட்டுமா வந்தாய்
வாக்களிப்பதற்கு?

எஸ்.மூக்கன் ஞானசுந்தரி-பசறை.

### தமிழரெம் நிலைபோலே....

தவிக்கிறது ஒரு ஜீவன்-அதை
புடைந்திடவே துடிக்கிறது மறுஜீவன்!
காத்திட இங்கே
மறுஜீவன் ஒன்றில்ல..
தமிழரெம் நிலை போலே!

சி.மதியழகன்-அல்வாய்.

## வாசக[ர்] சாலை


**சுவைக்கின்றேன் உனை!**

முரசே!

தித்திக்கும் தெவிட்டாத தீங்கனியாம் தினமுரசே! பார் எத்திக்கும் பவனி வரும் சுவை அமுதே! உன்னில் அற்புதக் கை வண்ணமாம், "அற்புதராஜா"வின், அற்புதப் படைப்புக்கள் இல்லா விட்டாலும். இன்று அத்தனையும் தேனாக கண்டு சுவைக்கின்றேன் உனை.

"வாழ்க உன் பணி! வளர்க உன் பாணி."

றோயல் யாழினி-பிரான்ஸ்



**என் சிநேகிதி முரசே!**

உன்னை நான் வாரவாரம் என் பார்வைக்கு தென்படும்வரை வழி மேல் விழி வைத்து பார்க்கின்றேன். சிநேகிதி நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிகவும் அருமையானவை. உன்னை வாழ்த்துகிறேன். புதிய வருடத்தில் மென் மேலும் வளர வேண்டும்.

வாழ்க! வளர்க!

எஸ்.ராதிகா-சிலாபம்.

என் இதயம் கவர்ந்த இனிய தினமுரசே! நீயே எனது சொர்க்கம். உலகெங்கும் தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தில் என்றும் ஒளி வீசி பல பல அம்சங்களை இதயத்தில் ஒட்டவைக்கும் என் இனிய முரசே என்றும் நிலைத்து உனது பணி தொடர்ந்து நடைபெற எனது இனிய வாழ்த்துக்கள்.

சி.ரமேஷ்ஹஜந்தா-கொழும்பு-11.

**என் ப்ரிய முரசே!**

வாரம் தோறும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சமும் என்னை கவர்ந்தவை. அதில் 'பாப்பா முரசு', 'லேடீஸ் ஸ்பெஷல்', 'கவிதைகள்', 'நில்-கவனி-முன்னேறு' என்று நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் சுவையாகவும், அறிவுக்கு விருந்தாகவும் அமைகின்றன. அது போல் உன் சேவை என்றும் தொடர என் வாழ்த்துக்கள்.

கே.யோகாப்ரியதர்ஷனி,
ஹேயஸ் எஸ்டேட்.

**தினமுரசுக்கு**

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகளை தொடர்ந்தும் விமர்சித்து வருகிறீர்கள். 'அவர்கள இவ்வாறு செய்வது தவறு' என்று கூறுவதை மட்டுமே முரசு தனது பணியாக கொண்டு செயற்படுகின்றது. தமிழ்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் பெற்றிருக்கும் வெற்றியை பயன்படுத்தி உருப்படியாக என்ன செய்ய முடியும் என்ற வழி காட்டலை முரசு மேற்கொள்வதில்லை. தாம் தேர்ந்தெடுத்திருக்கும் தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தமிழ் மக்கள் அறியாதவர்கள் அல்ல. புலிகள் சொன்னதற்காக வாக்களித்திருக்கிறார்கள். அவர்களின் தெரிவு நோக்கம் நிறைவேறாவிட்டால் மக்கள் மௌனமாக இருந்தாலும் இயக்கத்தினரின் மலர் வளையம் கிடைக்கும்!

ஆர்.பிரதீப்குமார்- ஆரையம்பதி.

**அன்பின் முரசே**

கடல் கடந்து வந்து தொழில் புரியும் எமக்கு இருக்கும் ஒரு ஈடுசெய்யமுடியாத ஆறுதல் நீதான். இலங்கையில் இருக்கும் போது வியாழன் அதிகாலையிலேயே உன்னை வாங்கிப் படித்திடுவேன் இங்கு ஓரிரு நாட்கள் தாமதித்து தான் நீ வந்து சேருகிறாய். உன் வரவுக்காக இங்கே காத்திருக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் இலங்கையர்கள் மட்டுமன்றி, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் இருந்து வந்து தொழில் புரியும் தமிழ் வாசகர்களும் அடங்குவர். வாழ்க உன் பணி!

முகமட் அன்வர்-சைப்பிரஸ்.

**தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,**

உங்கள் பத்திரிகையின் நீண்ட கால அபிமான வாசகி நான். தேன் கிண்ணம் பகுதிக்கு பல கவிதைகள் அனுப்பியும் எதுவும் பிரசுரமாகவில்லை. சிலரது கவிதைகள் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படுகின்றன. சிறு கதைகளும் அதேபோல்தான் மிகச்சிலருக்கு மாத்திரமே தொடர்ந்தும் இடம் வழங்கப்பட்டு வருகின்றது. அன்று முதல் இன்று வரை தினமுரசு மூலமாக இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர்களின் எண்ணிக்கை மிகவும் நீளமானது என்பதை நாம் அறிவோம். அதேபோல் இலை மறைகாயாக இருக்கும் இன்னும் பலரையும் அடையாளம் கண்டு அறிமுகம் செய்ய வேண்டிய பொறுப்பு முரசுக்கு இருக்கிறது. எவ்வாறெனினும் தரம் பேண வேண்டும் என்பதற்காக எமது படைப்புகளை முரசு நிராகரிப்பதையிட்டு நாம் விசனப்பட நியாயமில்லை. ஆயினும் புதியவர்களுக்கு கூடுதல் இடம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

எஸ்.பிரமிலாதேவி,
சேனையூர்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தி யான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## மின்சார அரசியல்

மக்களின் எந்தவொரு நெருக்கடியையும் அரசியலாக்கிப் பாழக்கப்பட்டு விட்டு இந்த நாட்டுத் தலைவர்களுக்கு அண்மைக்காலத்தில் இலவசமாக மெல்லக்கிடைத்த அவல் மின்சாரப் பிரச்சனை!

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்று ஓரிரு மாதங்களில் மின்வெட்டு ஆரம்பமானது. தாம் ஆட்சியை கைப்பற்றிய புதிதில், என்பதால் அப்போதைய மின் நெருக்கடிக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியை குற்றம் சொல்வதில் நியாயமில்லை. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிட்ட வகையில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படாததன் காரணமாகவே தமக்கு மின்சாரத்தை ஒழுங்காக வாங்க முடியவில்லை என்று 1994ம் ஆண்டு கூற ஆரம்பித்த பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த 7 வருடங்களாக அதாவது பதவி விலகிச் செல்லும் வரை அதே குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சிமீது சுமத்திக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாக மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க 7 வருட காலத்திலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு எதையும் செய்யாதிருந்தது மாத்திரமன்றி இந்த நிலை தோன்ற பழைய ஐ.தே.க அரசாங்கம்தான் காரணம் என்று கூறிக்கொண்டிருந்தது. இறுதியில் அரை மணி நேரத்தில் தொடங்கி 8 மணித்தியாலம் வரை இந்த ஆண்டு மின்வெட்டு அமுல் செய்யப்பட்டது. தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியாமையினால் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்து நாட்டை விட்டு வெளியேறியதும் உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்பட்டதுமாக ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் ஒரு புறமிருக்க இலங்கை மின்சார சபைக்குள் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் பெருவாரியான ஊழல் குறித்தும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

கடந்த 7 வருடகாலத்திலும் எரிபொருள் மின்சக்தி அமைச்சராக ஜெனரல் அனுருத்தரத்வத்த கடமையாற்றினார். மழை பெய்தால் மின்சாரம் கிடைக்கும் என்று அவர் அடிக்கடி கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மழை பெய்தால் மின்சாரம் தருவதாகக் கூறுவதற்கு ஒரு அமைச்சரும் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் அப்போது மருந்து தேவைப்படாது என்று கூறுவதற்கு இன்னொரு அமைச்சரும் அவசியமில்லை. மக்கள் வாழ்வின் அத்தியாவசிய தேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்குத்தான் அரசாங்கம் இருக்கிறது.

முன்னைய அரசாங்கத்தை திட்டிக்கொண்டு காலம் கடத்திய சந்திரிகா அரசு தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் நாட்டு மக்கள் மீது திடீர் கரிசனை தோன்றி மின்வெட்டை முழுமையாக நீக்கியதுடன் மின்சார நெருக்கடியை தீர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக பிதற்றியது.

இப்போத அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொதுஜன ஐக்கிய முன்னணிதான் மின்சார நெருக்கடிக்கு காரணம் என்று பழைய அரசாங்கத்தின்மீது குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளது. ஐ.தே.க.வின் குற்றச்சாட்டில் உண்மையிருந்தாலும் இதை இவர்கள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு கூறிக்கொண்டிருக்கப்போகிறார்கள் என்பதுதான் இன்றுள்ள கேள்வி. புதிய மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய, மின் நெருக்கடியை 6 மாதகாலத்துக்குள் தீர்ப்பதாக வாக்களித்திருக்கும் அதேவேளை பிரச்சனை தோன்ற சந்திரிகா அரசாங்கத்தின் செயற்பாடே காரணம் என்று கூறியிருக்கிறார்.

இப்படி ஆட்சியாளர்கள் ஒருவரை மாற்றி ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டு தேர்தல் இலாபங்களுக்காக மின்சார நெருக்கடியை தொடர்ந்தும் பயன்படுத்துவார்களாயின் இனி மேல் இலங்கைக்கு மின்சாரம் கிடைக்க கடவுளாகப் பார்த்து வழிசெய்தால்தான் உண்டு!

அதாகப்பட்டது வருடம் முழுவதும் நீரேந்துப் பகுதிகளில் மழை கிடைத்தால் மட்டும்தான் வீடுகளில் மின் விளக்கெரியும்.

ஊற்று

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான பொருளாதாரத் தடை 15ம் திகதி முதல் நீக்கம்!

# போதியளவு மருந்துப்பொருட்களைக் கொண்டு செல்லவும் அனுமதி!

**வி**டுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முன்னர் நல்லெண்ண நடவடிக்கையாக ஒரு மாத கால மோதல் தவிர்ப்பை அறிவித்திருக்கும் அரசாங்கம் எதிர்வரும் 15ம் திகதி முதல் வடபகுதிக்கான பொருளாதாரக் கட்டுப்பாடுகளை தளர்த்தப்போவதாக அறிவித்துள்ளது.

கடந்த 24ம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் இந்திய விஜயத்தின் முடிவில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது இதனை தெரிவித்திருக்கிறார்.

இதன்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல தடை செய்யப்பட்டிருக்கும் உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் என்பன அந்தப் பகுதிகளுக்கு அனுமதிக்கப்பட இருக்கின்றது.

முன்னைய காலங்களில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்ததற்கான காரணங்களை ஆழமாக ஆராய்ந்து அவற்றில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு புதிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியில் சமாதான போச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

நிபந்தனைகளுக்குள் மாத்திரம் அகப்பட்டுக் கிடக்காது மனிதாபிமான அடிப்படையில் இனப்பிரச்சனைக்கான தீர்வைக் கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடப்போவதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இதேவேளை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் தொடர்புகளை ஏற்படுத்துமாறும் நோர்வே அரசுக்கு அடுத்த ஓரிரு தினங்களில் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்படவிருக்கிறது.

மத்தியஸ்த முயற்சியில் மீண்டும் எரிக் சொல்ஹெய்ம் ஈடுபடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும் இது தொடர்பான இறுதி முடிவு நோர்வே அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

## மடவளை கொலைகளுடன் தொடர்புடைய இருவர் பிரதேச இளைஞர்களால் கைது செய்யப்பட்டு இரகசிய இடமொன்றில் தடுத்து வைப்பு!

**க**டந்த தேர்தல் தினத்தன்று கண்டி மடவளை பகுதியில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் கொலை தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் அதேவேளை இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேரைப் அந்த பிரதேச இளைஞர்கள் சிலர் கைது செய்து இரகசிய இடமொன்றில் மறைத்து வைத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பயணம் செய்ததாகக் கூறப்படும் ஜீப் வண்டிகள் இரண்டையும் செலுத்திய சாரதிகளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நபர்களுக்கு முகமூடி அணிவிக்கப்பட்டு கையில் விலக்கு மாட்டப்பட்ட நிலையில் அடையாளங் காணப்படாத இடமொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் புகைப்படமொன்றை கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையொன்று அதன் ஞாயிற்றுக்கிழமை பதிப்பில் பிரசுரித்திருந்தது.

இதேவேளை இவ்வாறு சந்தேக நபர்கள் சட்டவிரோத ஆயுதக் குழுக்களால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து ஜே.வி.பி. உட்பட சில அமைப்புக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

எவ்வாறெனினும் இந்த நபர்களை வழக்கு விசாரணை செய்யப்படும் உரிய தினத்தில் தேவை ஏற்படின் நேராக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யத் தயாராக இருப்பதாக இவர்களைத் தடுத்து வைத்திருக்கும் இனந்தெரியாதவர்கள் கூறியுள்ளதாகவும் குறிப்பிட்ட பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையும் அவரது மகன்மார் இருவரும் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதற்கான போதிய ஆதாரங்கள் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இராணுவ பயிற்சியில் இருந்துகொண்டே புலிகளுக்காக உளவு பார்த்தவர் புத்தளத்தில் கைது

**இ**ராணுவத்தில் இணைந்து பயிற்சி பெற்றுவந்த புலிகளின் உளவுப் பிரிவு அங்கத்தவர் ஒருவர் புத்தளம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட இந்த நபர் கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் புத்தளம் பகுதியில் குடியேறி வசித்து வந்துள்ளார்.

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பின்போது இராணுவத்தில் இணைந்துகொண்ட இவர் பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளார். படையில் சேர்வதற்காக இவர் புத்தளம் மாம்புரி பாடசாலையில் கல்வி கற்றதாக போலி ஆவணம் ஒன்றை சமர்ப்பித்திருக்கிறார். இது தொடர்பாக இராணுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

வில்பத்து காட்டு வழியாக வந்து கற்பிட்டி கடற்படைத் தளம், புத்தளம் இராணுவமுகாம் போன்ற இடங்களை எவ்வாறு தாக்கியழிப்பது என்பது குறித்து இவர் புலிகளின் உளவு பிரிவுக்கு தகவல்களை வழங்கி இருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

## ஜனாதிபதியும் எஸ்.பி.திஸாநாயக்காவும் அமைச்சரவைக் கூட்டத்தில் சூடான வாக்குவாதம்

**க**டந்த 19ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கும் விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்குமிடையில் சூடான வாக்குவாதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலின்பின்னர் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற வன்முறைகளில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் பலர் தாக்கப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி அமைச்சரைவைக் கூட்டத்தில் பிரஸ்தாபித்துள்ளார்.

ஜனாதிபதியின் உரையில் குறுக்கிட்ட எஸ்.பி.திஸாநாயக்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்த்து இப்போது புத்தரைப்போல் அஹிம்சா வாதம் பேசுபவர்கள் தேர்தலுக்குமுன்னர் பொலிஸாரின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை தாக்கியது மட்டுமன்றி சில சமயங்களில் பொலிஸாருக்குக் கூட அச்சுறுத்தல் விடுத்தவர்களென்றும் அதனால் அவர்களுக்கு இப்போது பொலிஸுக்கும் போகமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் கூறியுள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்காவின் இந்தக் கருத்தினால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி "இந்த நபருடன் எனக்கு பேச்சுவார்த்தை கிடையாது" என்று கோபமாக கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த திஸாநாயக்கா "இந்தப் பெண்மணியுடனும் எனக்கு பேச்சு இல்லை. நான் எமது பிரதமரிடமே கூறினேன். அதைவிட இத்தகைய பொய்களை கேட்டு நாம் தாராளமாக பழக்கப்பட்டிருக்கிறோம்" என்று மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்த்து கூறியுள்ளார்.

இவ்வாறு அன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இவ்விருவருக்குமிடையில் தொடர்ச்சியான வாக்குவாதம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இறுதித் தாக்குதல்

**பு**லிகளும் அரசும் தீர்மானித்த யுத்த நிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் அமுலாகுவதற்குப் 12 மணிநேரத்திற்கு முன்னதாக மன்னார்-பள்ளிமுனையில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

புலிகளின் பிஸ்டல் குழுவினரே சுட்டுவிட்டுத் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்தைச் சுற்றி வளைத்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்திய போதும் எவரும் கைது செய்யப்படவில்லை. திங்கள் பகல் 12.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை வாழைச்சேனை பஸார் பகுதியில் மதுபான விற்பனை நிலையம் ஒன்றிற்குப் பின்னாலும் திங்கள்பகல் 10 மணியளவில் கைக்குண்டொன்று வீசப்பட்டது. எனினும் அவ்விடத்தில் நின்ற பாதுகாப்புப் படையினருக்கோ பொதுமக்களுக்கோ எதுவித பாதிப்பு மேற்படவில்லை.

## அமெரிக்க விமானத்தில் குண்டுவைக்க முயற்சித்தவர் இலங்கையரா என்பது தொடர்பில் உறுதியற்ற தகவல்கள்

**க**டந்த வாரம் பிரான்சின் தலைநகரமான பாரிசில் இருந்து அமெரிக்காவின் மியாமி நகரை நோக்கி பயணம் செய்த அமெரிக்க பயணிகள் விமானத்தை குண்டு வைத்து தகர்க்க முற்பட்ட தரிக்ராஜா அல்லது அப்துல் ரஹீம் அல்லது றிச்சட் றீட் என்ற நபர் இலங்கையில் பிறந்தவர்என வெளியாகும் அறிக்கைகள் குறித்து பொலிஸ் தலைமையகம் அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 3 பெயர்களில் அடையாளங் காணப்பட்டிருக்கும் 28 வயது நபர் 197 பயணிகளுடன் சென்ற அமெரிக்க விமானத்தில் வைத்து தனது பாதணியில் பொருத்தியிருந்த குண்டை வெடிக்கச் செய்ய முற்பட்டபோது விமான சிப்பந்திகளின் முயற்சியினால் அது தடுத்து நிறுத்தப்பட்டு பெரும் அநர்த்தம் தவிர்க்கப்பட்டது.

பாதணியில் இருந்த டெட்டநேட்டர் கருவியின் இரப்பர் வயரில் தீ மூட்டிய போது அதனை பார்வையுற்ற பெண் விமான சிப்பந்தி ஒருவர் இந்த நபர்மேல் பாய்ந்து தீயை அணைத்து அவரது முயற்சியை தடுத்து நிறுத்தியுள்ளார். 6 அடி 4அங்லகும் உயரமும் 200 இறாத்தல் பாரமும் கொண்ட இந்த மனிதனை விமானத்தில் இருந்த பலரும் பலத்த சிரமத்துக்கு மத்தியில் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

எவ்.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணைகளின் போது தான் 1973ம் ஆண்டு இலங்கையில் பிறந்ததாக இவர் கூறியிருக்கிறார். தனது இயற்பெயர் தரிக்ராஜா என்றும் அப்துல் ரஹீம் என்ற வேறொரு பெயரில் அழைக்கப்பட்டதையும் ஒப்புக் கொண்டுள்ளார்.

எனினும் கைது செய்யப்படும்போது அவரிடம் பிரித்தானிய கடவுச் சீட்டு காணப்பட்டுள்ளது. அதில் ரிச்சட் றீட் என்ற பெயர் பதிவாகியுள்ளது.

இந்தநபர் தான் இலங்கையில் பிறந்ததாக தெரிவித்திருப்பது குறித்து அதிர்ச்சி வெளியிட்டிருக்கும் பிரதி பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியா இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதம் தற்கொலையாளிகளை உருவாக்கும் அளவு வளர்ச்சி அடையவில்லையென தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறெனினும் இந்த நபர் குறித்த உறுதியான தகவல்கள் இன்னமும் வெளிவரவில்லை.

## ஆயுதக் களைவு இல்லை!

**வ**டக்கு கிழக்கில் ஆயுதங்களுடன் செயல்படும் சில இயங்களின் ஆயுதங்களை களையப்போவதாக ஐக்கிய தேசிய கட்சி முன்னதாக தெரிவித்திருந்தபோதிலும் அவ்வாறு ஆயுதக் களைவு எதுவும் நிகழமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்திருக்கிறார்.

ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்கள் மீளப் பெறப்படுமா என்று பாதுகாப்பு அமைச்சரிடம் பி.பி.சி செய்தியாளர் கேட்டபோது இல்லை என்று கூறியிருக்கும் திலக் மாரப்பன அத்தகைய அமைப்புக்களை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப்போவதாகவும் கூறியிருக்கிறார்.

அவை வடக்கில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட்டாலும் தெற்கில் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சில வர்த்தகர்களை யாழ்ப்பாணம் செல்ல விடாது தடுப்பதாக மகேஸ்வரன்மீது குற்றச்சாட்டு

**இ**ந்துக் கலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரனுடன் கடந்த காலங்களில் போட்டி வர்த்தகத்தில் ஈடுபட்ட பிரபல வர்த்தகர்கள் பலருக்கு யாழ்ப்பாணம் செல்லவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் நீண்டகாலமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சில வர்த்தகர்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் செல்வதற்கான முறையான அனுமதிப்பத்திரங்களை பெற்றிருந்தபோதும் ரத்மலானை விமானநிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

சகல தயாரிப்புக்களுடனும் விமான நிலையம் சென்ற சுமார் பத்து வர்த்தகர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக ஆதிக்கம் செலுத்தும் மகேஸ்வரன் தனக்கு போட்டியாக உள்ள வியாபாரிகளை யாழ்ப்பாணம் செல்ல விடாது தனது செல்வாக்கை பிரயோகித்து தடுத்து வருவதாக இந்த வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எவ்வித காரணமுமின்றி திருப்பி அனுப்பப்படுவது குறித்து இந்த வர்த்தகர்கள் விமான நிலைய அதிகாரிகளிடமும் பாதுகாப்பு அதிகாரிகளிடமும் கேள்வி எழுப்பிய போதும் மேலிடத்து உத்தரவு என்ற சுருக்கமான பதிலே வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப் போவதாக சில வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கில் சோதனைக் கெடுபிடிகள் தளர்வு

**பு**லிகளும், புதிய அரசும் மோதல் தவிர்ப்புக்கு இணங்கியிருப்பதையடுத்து கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம் பெற்று வந்த சோதனைகளும், சோதனைக் கெடுபிடிகளும் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளன.

இதனால் நீண்டகாலமாக சோதனைச் சாவடிகளைக் கடக்கும் போது பல்வேறு கெடுபிடிகளையும், நெருக்கடிகளையும் அனுபவித்து வந்த பொது மக்கள் இப்பொழுது பெரும் நிம்மதியடைந்திருப்பதோடு இந்நிலைமை நிரந்தரமாக இருக்காதா என்று எதிர்பார்பு வெளியிடுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஓட்டமாவடியிலிருந்து கல்முனை வரையிலுமுள்ள சுமார் 20 சோதனைச் சாவடிகளிலும் சோதனைக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரிலுள்ள சோதனைச் சாவடிகளும், வாழைச்சேனை பொலிஸ் நிலையச் சுற்றுப் பாதையில் அமைந்திருந்த சோதனைச் சாவடியும் பாதுகாப்புப் படையினரின்றி வெறிச் சோடிக்கிடக்கின்றன.

மோதல் தவிர்ப்புத் தினம் அமுலுக்கு வரமுன்பே புலிகள் ஒரு தலைப்பட்சமான மோதல் தவிர்ப்பை அறிவித்ததிலிருந்து பாதுகாப்புத் தரப்பினர் சோதனைச் சாவடிகளில் இடம்பெற்று வந்த தீவிர கெடுபிடிகள் அனைத்தையும் தளர்த்தத் தொடங்கி விட்டனர்.

கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு வாகனங்கள் சென்று வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் பாதுகாப்புத் தரப்பினர் நீக்கியுள்ளனர்.

தற்சமயம் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் அடையாள அட்டைகளின்றி எவரும் சுதந்திரமாகச் சென்றுவர முடிவதையும் அவ தானிக்க கூடியதாக உள்ளது.

## புளொட் அலுவலகம் தீவைத்து எரிப்பு

**வ**வுனியா தோணிக்கல் பகுதியில் அமைந்திருந்த புளொட் இயக்கத்தின் காரியாலயம் திங்கள் அதிகாலை 1 மணியளவில் இனந் தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதனால் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவத்தில் புளொட் உறுப்பினர்கள் எவரும் பாதிக்கப் படவில்லை. இக்காரியாலயத்தில் இரவு வேளையில் எவரும் தங்குவதில்லை என்றும் தெரியவருகிறது.

## நெடுங்கேணியில் கண்ணிவெடித் தாக்குதல்

**பு**லிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுங்கேணிப் பகுதியில் 23ம் திகதி கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது. எனினும் இச்சம்பவத்தில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிப் புலிகள் எதுவும் அறிவிக்கவில்லை.

தமது பகுதிக்குள் படையினரின் நீண்டதூர ஊடுருவும் அணியினரே ஊடுருவி இத்தாக்குதலை மேற்கொண்டதாகப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதேவேளை வவுனியா-கணேசபுரம் பகுதியில் த.ரமணன் (20) எனும் வாலிபர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். இவ் விளைஞர் சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாகவும் கடந்த 21ம் திகதி இரவு 11 மணியளவில் அவர் கணேசபுரம் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

## நிறம் மாறும் டிப்போ

**ஐ**க்கியதேசியக்கட்சி தலைமையிலான கூட்டுமுன்னணி கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற தகவல் வெளியானவுடன் மட்டக்களப்பு பஸ் டிப்போ இரவோடிரவாக பச்சை நிறத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு டிப்போவுக்கு முன்னால் தொங்க விடப்பட்டுள்ள "நியூ ஈஸ்ரேன் பஸ் கம்பனி" என்ற பெரிய அறிவித்தல் பலகை உட்பட ஏற்கெனவே நீல வர்ணங்களில் இருந்த அனைத்தும் உடனே பச்சையாக மாற்றப்பட்டு விட்டன.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி... பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி அரசைக் கைப்பற்றியவுடன் ஏற்கெனவே பச்சை நிறத்திலிருந்த மட்டக்களப்பு டிப்போ இரவோடிரவாக நீலமாக மாறியது. இப்பொழுது மீண்டும் பச்சையாக மாறிவிட்டது. இதனால் மட்டக்களப்பு பஸ் டிப்போவை "நிறம்மாறும் டிப்போ" என்று அழைக்கின்றனர்.

## வர்த்தகரை கடத்தும் முயற்சி முறியடிப்பு

**கா**த்தான்குடியில் பிரபல வார்த்தகர் ஒருவரைக் கடத்திச் செல்லவதற்குப் இனம் தெரியாத சிலர் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வர்த்தகரைக் கடத்திச் செல்வதற்காக ஓட்டோ வண்டியுடன் ஊருக்குள் நுழைந்த சிலர் அவரை கடத்திச் செல்லும்போது விசேட அதிரடிப்படையினர் வழிமறித்துச் சோதனையிட்டுள்ளனர்.

அப்பொழுது ஆயுத பாணிகள் படையினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஆயுதங்களையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அவ்விடத்தில் ரீ-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு, கைக்குண்டுகள் நான்கு, மகஸின்கள் இரண்டு என்பனவும் கைப்பற்றப்பட்டன. வர்த்தகரை வாவி வழியாகக் கடத்திக் கொண்டு கொக்கட்டிச்சோலைக்கு அழைத்துச் செல்வதற்கு வசதியாக தோணியுடன் அவர்கள் வந்திருந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்முனை-நற்பிட்டி முனையில் ஐ.எல்.சாஹிப் எனப்படும் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடந்த ச்னி இரவு கடத்திச் செல்லப் பட்டுள்ளார்.

# முரசம்

## மக்கள் எதிர்பார்க்கும் புத்தாண்டுப் பரிசு!

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

சமாதானம் குறித்த ஏராளமான நம்பிக்கைகளுடன் புதுவருடம் உதயமாகின்றது.

வருடங்கள் சமாதானத்தையும் அமைதியையும் கொண்டுவருவதில்லை என்றாலும் புத்தாண்டின் உதயத்தோடு நல்லவற்றை வாழ்த்தும் சம்பிரதாயத்தினின்றும் விலகியிருக்க விரும்பவில்லை என்பதால் நாமும் வாழ்த்துகிறோம்:

கடந்த இரு தசாப்த காலமாகத் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இந்த அழகிய தீவில் அமைதியையும், சுபீட்சத்தையும் மீண்டும் நிலைநாட்டக் கூடிய அவகாசங்களால் நிரம்பிய ஒரு ஆண்டாகவே 2002 உதயமாகின்றது.

யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படுகின்றது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் புலிகள் கடைபிடித்த ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தம் போலல்லாது இம்முறை அரசாங்கமும் மோதல் தவிர்ப்பை அறிவித்திருப்பதால் நிலைமை நம்பிக்கையூட்டக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது.

இந்த நாட்டு மக்கள் யுத்தத்தை நத்தாரிலும் புது வருடத்திலும் மாத்திரம் நிராகரிக்கவில்லை. ரமழானிலும், தைப்பொங்கலிலும் மட்டும் தான் நிராகரிக்கிறார்கள் என்றும் கூறுவதற்கில்லை. மக்கள் போரை எப்பொழுதும் வெறுக்கின்றனர்.

தெற்காசியப் பிராந்தியத்தில் உள்நாட்டு யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகமாக இலங்கை தமிழ் மக்களே விளங்குகின்றனர். இந்நாட்டில் ஏனைய சமூகங்களுக்கும் யுத்தத்தின் பாதிப்பு கணிசமாக உணர்த்தப்பட்டுள்ளது. இடப்பெயர்வுகளும் இழப்புகளும், பொருளாதார அழுத்தங்களும் இனமத வேறுபாடின்றி சகலரது வாழ்விலும் தாக்கம் செலுத்தி வருகின்றது.

ஆதலால் இந்த நாட்டில் வாழும் எவரும் தாம் யுத்தத்தினால் பாதிக்கப்படவில்லை எனக் கூற முடியாது.

இதனால் பொதுப் படையாக சகல மக்களின் குரல்களும் யுத்தத்துக்கு எதிராகவே ஒலிக்கின்றன.

தத்தமது பண்டிகைகளின் போது மாத்திரமன்றி சகல சந்தர்ப்பங்களிலும் சதா காலத்திலும் அமைதி நிலவ வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது.

இப்போது நல்லெண்ண நடவடிக்கையாக தமது துப்பாக்கிகளை உறங்க வைத்திருக்கும் இரண்டு தரப்பினரும் இதனை தொடரச் செய்து மக்களுக்கு நிம்மதியை பெற்றுக் கொடுப்பதில் உச்ச கட்ட அக்கறை செலுத்த வேண்டும்.

போர் நிறுத்தம் என்பது காலக்கெடுக்கலால் வரையறை செய்யப்படாத ஒரு தேசத்துக்காக மக்கள் ஏங்கி நிற்கின்றனர். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக உத்தரவாத மளிப்பதும் அதன்படியே செயற்படுத்துவதும்தான் அரசும் புலிகளும் மக்களுக்கு வழங்கும் உயர்ந்த புதுவருடப் பரிசாக இருக்கும்.

இத்தகையதொரு பரிசைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கிடைக்குமா?

■■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இந்தியாவை நம்பும் இருபக்கத் தந்திரம்

இந்தியாவுக்கும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கும் இடையில் உள்ள நீண்டகாலத் தொடர்பு மீண்டும் ஒரு முறை புதுப்பிக்கப் பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியா சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு திரும்பியிருக்கிறார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தம் அறிவித்து மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த பாரிய எதிர்பார்ப்புகளுடன் உதயமாகும் புதுவருடத்தில் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம் பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு தோன்றியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவரையும் எவ்வாறு கையாளப் போகிறார் என்று இலங்கை மக்கள் தொடக்கம் இந்திய அரசாங்க உயர்மட்டம் வரையில் கடும் 'சஸ்பென்ஸ்' நிலவுகிறது.

பயங்கரவாதம் தனது நாட்டின் பாராளுமன்றம் வரை நுழைந்து விட்ட நிலையில் இந்தியாவினால் 'பயங்கர வாதிகள்' என முத்திரை குத்தப்பட்டிருக்கும் புலிகளுடனான கொடுக்கல் வாங்கலை ரணில் எவ்வாறு மேற்கொள்ளப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு பலராலும் முன்வைக்கப்படு கின்றது.

ரணில் எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்ற நாள் தொடக்கம் புலி சார்புக் கொள்கை ஒன்றை கடைபிடித்து வந்தார் என்பது இரகசியமானதல்ல. பிரபாகரனையும் அவரது இயக்கத்தையும் விமர்சிப்பதில்லை என்ற இறுக்கமான கட்டுப்பாட்டை அவர் இறுதி வரையில் கடைப் பிடித்து வந் தார். புலிகளுக்கு எதிராக ரணிலின் வாயால் ஒரு வார்த்தையை வெளியில் எடுக்க பொதுஜன ஐக்கிய முன்னணி தன்னாலான சகலதையும் செய்து பார்த்தது. இறுதியில் ரணிலும் புலியும் ஒன்றோடு ஒன்று என்று கூறுமளவுக்கு சென்றது. அப்படி யிருந்தும் ரணிலின் மௌனத்தைக் கலைக்க சந்திரிகாவினால் முடியவில்லை. இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் பொறுமையாக எதிர்கொண்ட ரணில் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்று வரும்போது பிரபாகரனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவர் என்ற நிலைக்கு தன்னை வளர்த்துக் கொள்ளவே கடந்த காலங்களில் பெருமுயற்சி எடுத்தார்.



அந்த முயற்சியில் ரணில் ஓரளவு வெற்றிகண்டிருக் கிறார் என கூறமுடியும். இப்போது அவர் எதிர்நோக்கும் சவால் பிரபாகரன் முன்வைக்கும் யோசனைக்கு தான் இணங்குவதா தன்னால் வழங்கப்படும் தீர்வுக்கு பிரபா கரனை இணங்கச் செய்வதா என்பதில்தான் இருக்கிறது.

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு முன்வரும் எந்தவொரு சிங்களத் தலைவரும் இறுதியில் பௌத்த பேரினவாத அழுத்தத்திற்குள் அகப்படுவதாக புலிகள் தரப்பிலிருந்து தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. ஆனால் ரணில், புலி எதிர்ப்பு கொள்கை ஒன்றை கைக்கொள்ளாததன் மூலம் ஏனைய சிங்களத் தலைவர்களிலிருந்து தான் மாறுபட்டு நிற்பதாகக் காண்பிக்க முயற்சிக்கின்றார். அதாவது இந்தப் பிரச்சனையை தீர்க்கும் பணியில் ஈடுபட்ட சகல தலைவர் களையும் விட தான் நேர்மையானவர் என உலகுக்கு உணர்த்த பாடுபடுகிறார். இதன் மூலம் முழு அளவிலான சர்வதேச அபிப்பிராயத்தையும் தன் பக்கம் திருப்ப ரணில் முயற்சிக் கின்றார்.

இப்போது ரணில் காரியத்தில் கைவைத்திருப்பது இந்தியா ஊடாக. அதாவது இந்தியாவை முன்னிலைப்படுத்தி உலகை தன்பக்கம் வைத்துக்கொண்டு பிரச்சனையை தீர்க்க வெளிப்பட்டிருக்கிறார். அவரது இந்தியப் பயணம் அதன் முதல் கட்ட நடவடிக்கையாக இருக்கும். உண்மையில் ரணில் செய்யப்போவது இந்தியா ஊடாக சர்வதேச சமூகத் திடம் பிரச்சனையை பறைசாற்றி விட்டு கைகட்டிப் பார்த் திருப்பதைத்தான். இது ஜே. ஆர். ஜயவர்தனவின் வழி முறை. ஆனால் இந்த இடத்தில் ஜே. ஆர். விட்ட தவறுகளை ரணில் திருத்திக்கொள்வார் என்று எதிர்பார்க்க முடியும். 1983ம் ஆண்டின் பிறகு யுத்தம் தீவிரமடைந்த காலப்பகுதி முழுவதிலும் ஒரு பார்வையாளனின் பணியை மட்டும்தான் ர ணில் செய்து வந்திருக்கிறார். ஜே. ஆர். புலிவாலை இந்தியாவிடம் கொடுத்து விட்டு கைதுடைத்துக் கொண்ட முறையை ரணில் அவதானித்திருக்கிறார். லலித் அத்துலத் முதலி தொடக்கம் சந்திரிகா குமாரதுங்க வரையில் யுத்தத்தை யுத்தத்தால் வெற்றி கொள்ள நினைத்தவர்களுக்கு ஏற்பட்ட முடிவுகளைப் பற்றியும், பிரபாகரனுடன் முதலில் உற வையும் பின்னர் பகையையும் வளர்த்துக் கொண்ட ராஜீவ்காந்தி, பிரேமதாசா போன்றவர்களின் விதியை பற்றியும் போதிய அனுபவம் ரணிலுக்கு இருக்கிறது. மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு எனக் கூறி கொண்டுவரப்பட்ட மாகாணசபைக்கும் தீர்வுப் பொதி களுக்கும் நடந்த அநர்த்தங்களையும் ரணில் அனுபவித்திருக்கிறார். அதனால் அவரின் இந்த முயற்சியில் முன்னைய தலைவர்களால் விடப்பட்ட பல தவறுகள் திருத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பை ஜே. ஆர் இந்தியாவிடம் ஒப்படைத்தார். பிரேமதாச நேரடியாக களத்தில் இறங்கினார். சந்திரிகா அந்தப் பொறுப்பை தனது நெருங்கிய சகாக்களிடம் ஒப்படைத்தார். ஆனால் ரணில் இந்தியா ஊடாக சர்வதேச சமூகத்திடம் இதனை ஒப்படைக்க முயற்சி செய்கின்றார். அப்போது இது இந்த நாட்டு பிரச்சனையாக மட்டுமன்றி இந்தியாவின் பிரச்சனை யாகவும் நோர்வேயின் பிரச்சனையாகவும் மாறிப் போகும். அவ்வாறாயின் பிரபாகரனுக்கு கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டி ஏற்படப் போவது சர்வதேச சமூகத்துடன்தான்.

அடுத்த கிரகத்தில்கூட தனித் தமிழீழம் ஒன்று அமைவதை அனுமதிக்கப் போவதில்லை என்று கூறும் இந்தியா தலைமையிலான சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இருதரப்பினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எய்துவது பிரபாகரனை பொறுத்த வரையில் சற்று சங்கடமான விடயமாக இருக்கப் போகின்றது.

அவ்வாறாயின் ரணிலின் நோக்கமும் சந்திரிகா வின் நோக்கமும் ஒன்று போல்தான் தெரிகிறது. பிர பாகரனை சர்வதேச சமூகத்திடம் இருந்து தனிமைப் படுத்தி யுத்தத்தின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க சந்திரிகா முயற்சிசெய்தார். சர்வதேச சமூகத்தையும் பிரபாகரனையும் பேச்சுவார்தை நடத்தச்செய்து சமாதானம் மூலம் புலிகளை தோல்வியடையச் செய்ய ரணில் முயற்சிக்கிறார்! ஆயுதம் ஏந்திய படைவீரர் களாக இல்லாமல் கோட்ஷூட் அணிந்த 'ஜென்டில் மேன்' களின் பேச்சு வார்த்தை யுத்தம் நடைபெறப் போகின்றது.

உண்மையில் அரசியல் தீர்வு தொடர்பான விட யங்களை பேச்சுவார்த்தை மேசையில் ஆராய்வதை புலிகள் பெரிதாக விரும்புவதில்லை. குறிப்பிடத்தக்க அளவு விட்டுக் கொடுப்புகளை செய்ய வேண்டி ஏற்படலாம் என்ற பயம்கூட அதற்குக் காரணமாக இருக்க முடியும்! இதனாலேயே அரசாங்கத்துக்கும் புலிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் அர சியல் பேச்சுக்களாக உருவெடுக்க முன்னர் அன் றாடப் பிரச்சனை தொடர்பான கலந்துரையாடல் களாகவே முறிந்து போகின்றன. இப்போதைய நிலமை மேலும் இறுக்கமானது. சுயாதிபத்திய உரிமையை நிராகரித்து ஒற்றையாட்சியின் கீழ் இலங்கை அர சாங்கம் முன்வைக்கும் தீர்வை ஏற்க வேண்டிய கட்டாயத்துக்கு புலிகள் தள்ளப்படும் வாய்ப்பிருக் கிறது. போர் என்று வந்தால் புலிகளின் பலத்திற்கு முன்னால் இலங்கை ஆயுதப்படைகளால் தொடர்ச்சி யாக ஈடுகொடுக்க முடியாது என்ற உண்மை பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் தீர்வு என்று வரும்போது புலிகளின் பேரம் பேசல் பலத்துக்கு நிச்சயமான வரையறைகளை விதிக்க அரசாங்கத் தினால் முடியும். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் இன்று மேற்குலகத்தினால் முன்னெடுக்கப்படும் தாக்குதல்களில் நியாயமான போராட்டங்கள் பலவற்றிற்கும் அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது. ஆதலால் ஆயுத பலத்தை மட்டும் நம்பியிருக்காமல் அரசியல் தீர்வில் நாட்ட முள்ள வர்களாக தங்களை அடையாளப்படுத்தும் தேவை புலிகளுக்கு இருக்கவே செய்யும். இதனை பயன்படுத்தி புலிகளை பேச்சு வார்த்தை மேசை வரைக்கும் கூட்டி வந்து 'தருவதை பெற்றுக்கொள்' என்ற நிலைக்கு ஆளாக்குவது ரணில் விக்கரமசிங்கவின் திட்டமாக இருக்கலாம். அதனை பிரபாகரன் மறுத்து மீண்டும் போரை ஆரம்பித்தால் அது இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான யுத்தமாக அல்லாமல் சர்வதேச சமூகத்துக்கு எதிராக புலிகள் தூக்கும் போர்க் கொடியாகவே அமைய வாய்ப்பிருக்கிறது.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு கட்சியிலும் அரசாங்கம் மற்றொரு கட்சியை சேர்ந்த தாயும் இருப்பது பிரச்சனை தீர்வு தொடர்பில் ஒரு சாதகமான அம்சமாகவே கருத முடியும்.

புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயற் படுமாறு ஜனாதிபதிக்கு இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் அழுத்தம் கொடுப்பதாக கடந்த நாட்களில் செய்தி வெளியாகியிருந்தது. இந்தப் பிரச்சனையை தீர்ப்பதில் இந்தியாவுக்கு இருக்கும் அபரிமித ஆர் வத்தையே இது காட்டுகின்றது. ஆனால் இந்த ஆர்வம் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததோ, இலங்கை அரசாங்கத்தின் நலன் சார்ந்ததோ அல்ல. இது முற்றிலும் இந்தியாவின் தன் நலம் சார்ந்த அக்கறை மட்டும்தான். பிரபாகரனை போரியல் ரீதியிலோ, அர சியல் ரீதியிலோ தோற்கடிக்க வேண்டும் என்ற தேவை மற்றவரைவிடவும் இந்தியாவுக்கு இருக் கிறது. ரணிலின் தேசிய அரசாங்க அழைப்பை இந்தியா வரவேற்றதன் காரணம்கூட இதுவாக இருக்க லாம். இந்நிலையில் சந்திரிகா புதிய அரசாங்கத்துடன் மோதலை ஆரம்பித்தால் அது இந்தியாவுடனும் சர்வ தேச சமூகத்துடனும் நடத்தும் நேரடி மோதலாக அமையவாய்ப்புண்டு.

சர்வதேச நிலவரமும் இந்தியாவின் நிலைப்பாடும் இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமாக இருக்கிறது என்பதற்காக தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அர சியல் தீர்வில் ஐக்கிய தேசியக்கட்சி அரசு 'குறைப்பு' செய்ய மாட்டாதென நம்புவோம்! இந்தப் பிரச் சனையை தீர்க்க வேண்டும் என்பதில் ரணில் காட்டும் ஆர்வத்தின் உண்மை நிலை புலிகளை 'மடக்க' வேண்டும் என்பது மாத்திரமன்றி தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்வுகிட்ட வேண்டும் என்பதிலும் இருப்பதாக கருதக்கூடிய பல அம்சங்கள் நடந்து வருகின்றன. அத்தோடு நல்லெண்ண நடவடிக்கையாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடை நீக்கம் போன்ற சில விடயங்களும் நம்பிக்கையூட்டுவனவாகவே இருக்கின்றன.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியின் வேகத்தில் தீர்த்துவிட்டு கொண்டாட்டம் நடத்தும் அளவுக்கு இலகுவான பிரச்சனையாக இது இல்லை. பிரபாகரனை சமாளிக்கும் பணி இந்தியாவுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இலகுவானதாக இருக்கும் என்று எதிர்பார்த்தாலும் உள்நாட்டில் ரணிலுக்கு அது அத்தனை சுலபமானதாக இருக்கப் போவதில்லை.

காரணம் அந்த அளவுக்கு இப்பிரச்சனை இந் நாட்டுக்குள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பது தான். இனநெருக்கடியை கருவியாகப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெற சகல கட்சிகளும் முயற்சிக்கின்றன. பிர தமர் என்ற வகையில் தனது கட்சிக்குள் இருக்கும் கடும் போக்காளர்களை ஒரு நியாயமான தீர்வுக்கு இணங்கச் செய்வது ஏனைய சிறுபான்மைக் கட்சி களையும் தன்னோடு ஒத்துழைக்கும் நிலைக்கு கொண்டு வருவது உள்நாட்டில் ரணில் எதிர்நோக்கப் போகும் பெரும் சவாலாக இருக்கும். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கும் பலர் தமிழ் மக்களுக்காக மிகவும் குறைந்த பட்ச உரிமைகளை மட்டுமே அங்கீ கரிப்பவர்கள். வேறு வகையில் சொன்னால் சிங்கள பௌத்தத்துவத்தை வெகுவாக ஆதரிப்பவர்கள். குறிப்பாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கரு ஜயசூரிய, டப்லியூ. ஜே.எம்.லொக்கு பண்டார போன்ற ரணி லுக்கு நெருக்கமான பலரும் ஒற்றையாட்சி மாற்றப் படுவதையோ குறைந்த பட்ச சுயநிர்ணய உரிமை யையோ கூட அங்கீகரிக்காதவர்கள். இவர்களை சமாளித்து புலிகளால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர் வொன்றை வழங்குவதென்பது ரணிலுக்கு இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை.

**எம்.பி.எம். பர்ஸான்**

மறுபுறத்தில் என்னதான் சர்வதேச அழுத்தம் என்று வந்தாலும் ஆகவும் தாழ்வாக இறங்கிவரக் கூடிய இயக்கமாக புலிகளும் இல்லை. அவர்கள் தமது தியாகங்களை அத்தனை சுலபத்தில் விட்டுக் கொடுக்க முன்வர மாட்டார்கள். தற்கொலையாளிகளாக இத் தனை காலம் உடம்பில் குண்டுகளை கட்டிக்கொண்டு போரிடுபவர்கள். ரணில் விரிக்கும் வலையில் அத்தனை சுலபமாக சிக்குவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

எவ்வாறெனினும் பேச்சுவார்த்தை நடத்தி அர சியல் தீர்வொன்றுக்கு வருமாறு இருதரப்பினருக்கு மான சர்வதேச அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. புலிகளை இறுதியாக அவுஸ்திரேலியா தடைசெய்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் தயாரிக்கும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகளின் பெயரும் உள்ளடக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது. அவ்வாறு நிகழுமாயின் அது புலிகள் இயக்கத் துக்கு பாரிய பின்னடைவாக அமைய இடமுண்டு.

மறுபுறம் அமெரிக்கா ஜப்பான் உள்ளிட்ட இலங் கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பலவும் இனிமேல் யுத்தம் செய்ய பணம் தரமுடியாது என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவித்து வருகின்றன.

ஏற்கனவே பொருளாதாரம் அதளபாதாளத்துக்கு சென்றிருக்கும் நிலையில் ஐந்தாவது ஈழப்போர் ஒன்றை சந்திக்கும் பலம் அரசாங்கத்துக்கும் இல்லை. எனவே சமாதானத் தீர்வொன்றை எய்தி ஆயுதங் களுக்கு ஓய்வு வழங்குவதைத்தவிர இரு தரப்புக்கும் வேறு விமோசனம் கிடையாது. ■

# புலிகள் மீதான தடை சமாதானப் பேச்சுவார்த்தைக்கான 'தடைக்கல்லாக' அமையுமா...?

நீண்ட காலத்தின்பின் மீண்டும் ஒரு யுத்த நிறுத்தம் வந்துள்ளது. விடுதலைப் புலிகள் நத்தார் பண்டிகையான டிசம்பர் 25ம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்தைத் தொடர்ந்து புதிய அரசாங்கமும் அதற்கேற்ப அதேகாலத்திற்குத் தமது தரப் பின் யுத்த நிறுத்ததையும் அறிவித்துள்ளது.-அதனால் யதார்த்தமான யுத்த நிறுத்தம் மீண்டுமொரு முறை அமுலுக்கு வருகிறது.

கடந்த அரசாங்கத்திலும் புலிகள் தாமாகவே யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதை நான்கு தடவைகள் நீடித்திருந்த போதிலும் அரசாங்கம் அதற்கு உடன்பாடான வகையில் தமது தரப்பால் ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவிக்க விழையாததால் இரு தரப்பு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரமுடியாது போனது.

காலத்தில் மீண்டும் ஒரு புதிய நம்பிக்கை தோன்றியது. அதாவது புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்துவம் வகிக்க நோர்வே அரசாங்கம் முன் வந்தது. அதனைப் புலிகளும் அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருநதன. இந்நிலையில் புதிய திருப்பமாக, ஐரோப்பிய நாடான நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது சாத்தியமாகலாமென்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால் அவ்வாறாக நோர்வே மத்தியஸ்தத்துடன் ஒரு அமர்வு கூட நிகழாமல் இப் பேச்சுவார்த்தை வெறும் பேச்சளவுடனேயே நின்று போனது.

ஆனால் இன்று அரசாங்கம் மாறிவிட்டது. புதிய அரசாங்கம்-ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்-பதவிக்கு வந்துள்ளது. அது தான் பதவிக்கு வந்தால் தமது தரப்பு யுத்தத் தயாரிப்புகளையோ நிறுத்துவதான உத்தரவாதம் எதையும் கொடுக்கவில்லை.

அரசாங்கம் கூறும் மோதல் தவிர்ப்பு என்பது படையினர் தாமாக மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது என்ற அர்த்தத்தை மட்டும் தான் கொண்டுள்ளது. இது இராணுவத்தை முகாம்களுக்குள் முடங்கியிருக்கச் சொல்லும் அறிவுறுத்தலல்ல.

அத்துடன் ஆயுதங்களுடன் நடமாடுவதும் இங்கு அனுமதிக்கப்படமாட்டாதென்பதுடன், தம் மீது தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்தவும், பாதுகாப்புக்கான கண்காணிப்புகள், ரோந்துகளை நடத்தவும் உரிமை கொண்டிருப்பதான ஒன்று இது.

இவ்வகையில் இவ் இரு தரப்பினரும் விடுத்துள்ள யுத்த நிறுத்தங்கள் பலமான யுத்த நிறுத்த அறிவுப்புகளல்ல. அத்துடன் இரு தரப்பும் ஒன்றுக்கொன்று இணங்கி, அமைய வேண்டுமா இல்லை நேரடியான இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளாக அமைய வேண்டுமா என்பது ஒரு கேள்வி.

இதில் மூன்றாம் தரப்பொன்று ஈடுபடுத்தப் படுமாக இருந்தால் அது இரு தரப்பின் அங்கீகாரத்தையும் கொண்டிருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல அம் மூன்றாம் தரப்பிற்கு இவ் இரு தரப்பும் கட்டுப்பட்டு செயற்படக்கூடிய ஒரு புரிந்துணர்வுக்கும் இவர்கள் வரவேண்டும். இல்லையேல் அம் மூன்றாம் தரப்பு ஒரு தபால்காரனின் வேவையை மட்டும்தான் வழங்கக்கூடியதாக ஆகிப்போய்விடும்.

இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று முதல் விஜயமாக இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமருடனும் முக்கிய அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அவரின் விஜயத்துக்கு இந்தியாவில் பெருத்த வரவேற்பும் வழங்கப்பட்டது.

எனினும் அவர் இந்தியா சென்றது

இதனால் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடிய அறிகுறிகள் மீண்டும் தலைப்பட்டுள்ளன.

இதேவேளை பிருத்தானிய அரசாங்கமும், பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்துவம் வகிக்கத் தான் தயாராகவுள்ளதான விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

இதற்கு, புலிகளும், இலங்கை அரசாங்கமும் தமக்கு அழைப்பு விடுத்தால் தாம் மத்தியஸ்துவத்துக்குத் தயாரென அது அறிவித்துள்ளது.

பிருத்தானியா ஒரு வல்லரசு என்ற நிலையிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிலுள்ள வீட்டோ அதிகாரம் கொண்ட நாடு என்ற வகையிலும் நேட்டோ நேசநாடுகள் அணியில் முக்கியத்துவம்கொண்ட ஒரு உறுப்பு நாடென்ற வகையிலும் அதன் மத்தியஸ்துவம் வலிமை வாய்ந்த ஒன்றாக அமையக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் இப் பேச்சுவார்த்தையில்

எனினும் சென்ற பொதுஜன முன்னணி அரசாங்கம் முதன்முதலில் ஆட்சிக்கு வந்த 1994 காலகட்டத்தில் ஒரு யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப் பட்டு அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றன.

இன்று மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது போன்ற பெரும் எதிர்பார்ப்பே அன்றும் ஏற்பட்டிருந்தது. உண்மையில் இதைவிட அதிகப்படியான எதிர்பார்ப்பு அன்று தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் இருந்தது.

அப்போது தெற்கிலிருந்து வாசுதேவ நாணக்கார உட்பட பெரும் எண்ணிக்கையிலமைந்த ஒரு சமாதான ஆர்வலர் குழு யாழ்ப்பாணம் சென்று புலிகளைப் சந்தித்ததுடன் சமாதானப் பாடல்களையும் இசைத்து தமது நல்லுறவுக்கான விருப்பத்தை தெரிவித்து வந்தது. இதேவேளை பல தமிழ்க் கட்சிகளும் அன்றைய அரசாங்கத்தை வரவேற்றதுடன், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற கட்சிகள் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவுக்கு வாக்களிக்கும்படி நேரடிப் பிரசாரத்தையும்கூட மேற்கொள்ளுமளவுக்குச் சென்றிருந்தனர்.

இன்று நிகழ்வது போலவே அன்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த உடனடியாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு விதிக்கப்பட்டு வந்த பொருளாதாரத் தடையைக் கணிசமான அளவு தானாகவே தளர்த்தியது.

அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையும் மிகப் பரபபரப்புடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது.

இப் பேச்சுவார்தைக்காக அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் ஹெலிகாப்டரில் யாழ்ப்பாணம் சென்று இறங்கியபோது தமிழ் மக்கள் பெருந் தொகையில் திரண்டு வந்து தமது ஆதரவை வெளிக்காட்டியிருந்தனர்.

ஆனாலும் அப் பேச்சுவார்த்தை முறிந்து யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டு மீண்டும் ஒரு உக்கிர யுத்தம் வெடித்தது.

உண்மையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாமலே பேச்சுவார்த்தை முறிந்து போனது. ஆம். ஏனெனில் அங்கு மக்களின் அன்றாடத் தேவைகளை ஈடேற்றுவது பற்றிய விடயங்கள்தான் பேசப்பட்டனவே தவிர அரசியல் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவேயில்லை.

எனவே அரசியல் தீர்வு பற்றிய எந்தவொரு கருத்துருவமும் அப் பேச்சுவார்த்தையால் விளைவிக்கப்படவில்லை.

எனினும் சந்திரிகா 1995ல் தனாக ஒரு அரசியல் தீர்வுக்கான யோசனையை வெளியிட்டிருந்தார். அதை புலிகள் நிராகரித்துவிட்டனர். ஆனால் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் பல தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட அதை ஒரு தீர்வுக்கான அடிப்படையாக அமையக்கூடிய ஒன்றென வரவேற்றிருந்தனர்.

எனினும் அந்த யோசனைகள்கூட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கீகாரத்தைப் பெறும் பொருட்டு அரசாங்கத்தால் ஐதாக்கப்பட்டன. பின்னர் நீண்டகாலமாக இழுத்தடித்து இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர் விடுதலைக்கூட்டணி, டெலோ, தமிழ் காங்கரஸ் ஆகிய தமிழ்க் கட்சிகளும் எதிர்த்த நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்படாமலே பின்வாங்கப்பட்டது.

இதற்கிடையே கடந்த அரசாங்க புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பேனெனக் கூறியபடியே தான் பதவிக்கு வந்துள்ளது.

அதன்படியே பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணச் சூழலை உருவாக்கும் வகையிலான சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கான பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. மீன்பிடித் தடைகளை நீக்குவது பற்றியும் செய்திகள் வெளிவந்துள்ளன. அதேவேளை வடக்கு கிழக்கிற்கு அப்பாலுள்ள பகுதிகளில் சோதனைச் சாவடிகளை நீக்கி, போக்குவரத்துக்காக திறந்துவிடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இதனால் கொழும்பு போன்ற பேக்குவரத்து நெருக்கடிமிக்க நகரங்களில் இலகுவான நிலைமை ஏற்பட்டுள்ளமை மக்களுக்கு ஆச்சரியகரமான மகிழ்ச்சியைக் கொடுப்பதாக உள்ளது. இந்த நடவடிக்கைகள் குறித்து இது எத்தகைய பின்விளைவுகளுக்குத் தள்ளிவிடப் போகிறது என்ற அச்சங்கூட சில வட்டாரங்களில் இல்லாமல் இல்லை.

இத்தகைய நிலையில்தான் புலிகள் திரும்பவும் தாமாகவே ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள். அதற்கு ஏற்ப அரசாங்கமும் தமது தரப்பிலான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

எனினும் இந்த இருதரப்பும் விடுத்துள்ள யுத்த நிறுத்த அறிவுப்புக்களுக்கிடையே சில மாறுபாடுகள் உள்ளன.

புலிகள் தமது அறிவிப்பை யுத்த நிறுத்தம் என்று குறிப்பிடும் அதேவேளை அரசாங்கம் அதை (செஷஷக் ஒஃப் ஹொஸ்டிலிட்டீஸ்) மோதல் தவிர்ப்பு என்ற அர்த்தத்தில் அறிவித்துள்ளது.

இவை இரண்டும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவையாக அமைந்துள்ளன.

புலிகள் கூறம் யுத்த நிறுத்தமென்பது ஆயுதப்படைகளுடனான யுத்த நிறுத்தத்தை மட்டுமே முன்வைக்கிறது. இது அரசியல் படுகொலைகளையோ, அல்லது ஆயுதக் கொள்வனவுகள், ஆயுதப் பயிற்சிகள், ஆட்திரட்டல்கள் போன்ற

யுத்த நிறுத்த விதிமுறைகள் வகுக்கப்பட்டு விடுக்கப்பட்ட ஒரு பொது இணக்க அறிவித்தலும் இல்லை.

சிறியதொரு சம்பவம், அசம்பாவிதம், அல்லது கருத்து வேற்றுமையால் குலைந்துவிடக்கூடிய பலஹீனத்தைக் கொண்டாதாகவே விளங்குகின்றன.

உதாரணத்திற்கு, கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் புலிகளின் படகொன்று வருமாகயிருந்தால் என்ன நிகழும்? படையினர் அவர்களைச் சோதனையிட விழைவார்களா, அல்லது அவர்களை அவர்கள் வழியே செல்ல விடுவார்களா?

இதுவே புலிகளுக்கான ஒரு ஆயுதக் கப்பலாக இருந்தால் கடற்படையினர் வழிமறிப்பார்களா, அனுமதிப்பார்களா?

எனவே இந்த யுத்த நிறுத்தம் நிலைநாட்டப்படுவது அவரவர் மனதைப் பொறுத்தது. சர்ச்சைக்குரியவிடயங்களில் இருதரப்பும் ஈடுபடா திருப்பதையும் மறுதரப்பினர்மீது பொறுமையைக் கடைப்பிடிப்பதையும் பொறுத்தது.

எவ்வாறாயினும் இந்த அளவிலாவது ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமே. இது ஒரு முழுமையான, ஒழுங்கு விதிகள் வகுப்பட்டு இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்தமாக இல்லாவிட்டாலும், தமது நல்லெண்ணங்களை வெளிப்படுத்தவும், பேச்சுவார்த்தைக்கான அழைப்பாக அர்த்தப்படுத்தவும் வகைசெய்யும் ஒன்று.

இந்த முதற்கட்ட நடவடிக்கையை இருதரப்பும் நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொண்டால் அடுத்து இடைத் தரகர் மூலமானதோ, அல்லது நேரடியானதோ பேச்சுவார்த்தைகள்மூலம் ஒரு உறுதியான யுத்த நிறுத்தத்தை வகுத்துக் கொள்ளலாம்.

அத்துடன் துரிதமாகவே இனப் பிரச்சனைக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கலாம்.

அரசியல் . பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது குறித்த விடயத்திலும் சில கேள்விகள் உள்ளன.

இப் பேச்சுவார்த்தைகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்துடனானதாக

குறித்த சில சந்தேகங்களை யாழ்ப்பாண உள்ளூர் பத்திரிகைகள் கிளப்பியிருந்தன. இவ்விஜயம் புலிகளுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றல்ல வென்ற கருத்தையே அவை வெளிப்படுத்தியிருந்தன.

இவ் விஜயத்தின்போது ரணில் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இந்தியா உதவவேண்டுமென்ற அழைப்பை விடுத்ததானது புலிகளின் சம்மத்தைப் பெறாத ஒரு தன்னிச்சையான நடவடிக்கையாக அவர்களால் பார்க்கபடக் கூடும்.

எனினும், அயல்நாடான இந்தியாவிடம் சம்பிரதாயபூர்வமாகவாவது இவ்வாறு கோராமல் ஐரோப்பிய நாடுகளின் மத்தியஸ்துவத்தை நாடுவதும். இலங்கைப் பிரதமருக்கு மிகுந்த அசெளரியமான விடயமே.

ஆனால் இந்தியா இப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்துவத்துக்கு முன்வரவில்லை. இது இங்கு எழக்கூடிய சங்கடத்தைத் தவிர்த்துள்ளது. எனினும் இப் பேச்சுவார்த்தையை வரவேற்று இனப் பிரச்சனையின் தீர்வுக்கு இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்த ஒத்துழைப்பு என்பது எவ்வகையானது என்று தெளிவுபடுத்தப் படவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கு ஆபத்து வேளையில் கை கொடுக்கக்கூடிய ஒரு ஏற்பாடாக இது அமையக்கூடுமென்ற சந்தேகம் புலிகள் தரப்பிற்கு இயல்பாகவே ஏற்படும். இதைத்தான் யாழ் பத்திரிகைகள் கோடிகாட்டியிருந்தன.

இதேவேளை நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்துவத்தை மீண்டும் செயலூக்கப்படுத்த இலங்கையின் புதிய அரசாங்கம் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இலங்கை அமைச்சர்கள் உயரதிகாரிகள் கொண்ட குழு வொன்றை நோர்வேக்கு அனுப்பி பேச்சுவார்தைகளில் மத்தியஸ்துவம் வகிக்கும் அதன் செயறபாடுகளையிட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது. இதேவேளை நோர்வே நாட்டின் உயர்மட்டக்குழுவொன்றும் இது குறித்த அடுத்த நடவடிக்கைகளை ஆராயுமுகமாக இலங்கை வரவுள்ளது.



இரு தரப்பையும் தனது செல்வாக்கால் கட்டுப்படுத்தி இணக்கப்பாட்டுக்கு நிர்ப்பந்தம் செலுத்தக்கூடிய ஒரு ஆளுமையையும் அது கொண்டிருக்கும்.

இலங்கையை முன்னர் ஆட்சிசெய்த நாடாகவும், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கி இங்கு ஒரு ஆட்சி முறையை ஸ்தாபித்த நாடாகவும் இருப்பதால் இலங்கையில் தோன்றிய இனப்பிரச்சனைக்கு ஒரு வகையில் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டிய நாடாகவும் அது கருதப்பட்டு, இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது. அதனால் அது மத்தியஸ்துவம் வகிக்க முன்வருவதும் நியாயப்படுத்தக்கூடியதாக அமைகிறது. ஆனாலும் அதிலும் ஒரு பாரிய சிக்கல் உள்ளது. பேச்சுவார்தைகளின் முதல் நிபந்தனையாக புலிகள் இலங்கை அரசாங்கம் தம்மீது விதித்துள்ள தடையை நீக்கவேண்டுமெனக் கோருகிறார்கள்.

இலங்கையையே அவ்வாறு கோரும் போது இப்பிரச்சனையில் மத்தியஸ்துவம் வகிக்க முன்வரும் பிருத்தானியா தம்மீது தடை விதித்திருப்பதை ஏற்றுக்கொள்வார்களா?

எனவே பிரத்தானியா மத்தியஸ்துவம் வகிக்க சம்மதிப்பதானால் அது புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்ற நிபந்தனையை புலிகள் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் உரைக்கு விளக்கமளித்து புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், லண்டனில் ஆற்றிய உரையில் தாம் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்ட நிலையில் பேச்சுவார்த்தைக்கு வரப்போவதில்லையென்றும், தம்மீதான தடையை நீக்கினால் மட்டுமே பேச்சுவார்த்தைக்குச்செல்ல முடியுமென்றும் கூறியிருந்தார்.

அப்படியானால் புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பிரகடனப் படுத்தியிருக்கும் ஒரு நாடு தமது பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்துவம் வகிப்பதென்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதனால், பிருத்தானிய தடையை நீக்கினாலேயே அவ்வாறான மத்தியஸ்துவத்தில் ஈடுபட வாய்ப்புண்டு.

இதேவேளை தற்போது அவுஸ்திரேலியாவும் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளடக்கித் தடை செய்துள்ளது. அதுவும் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ள நிலையிலும் இத் தடையை விதித்துள்ளது. இத்தகைய சர்வதேசப் போக்கைத் தடுத்து நிறுத்துவது இன்று புலிகளின் பிரதான விடயமாக உள்ளது. இந்தியா, மலேசியா, அமெரிக்கா, பிருத்தானியா, கனடா, எமிரேட்ஸ், இப்போது அவுஸ்திரேலியா, என நீள்கின்ற இத் தொடர்தடை, ஐக்கிய நாடுகள் சபைவரை செல்லக்கூடிய ஆபத்து அதற்கு உள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் சுமார் 15 நாடுகள் புலிகளைத் தடை செய்யவுள்ளதாகக் கூறியிருந்தார்.

இது தேர்தலுக்காக பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு சேர்க்கும் நோக்கத்தில் விடுவிக்கப்பட்ட கருத்தாக இருக்கக்கூடுமானாலும் புலிகள் இது குறித்து அலட்சியமாக இருந்துவிட முடியாத விடயமாகவே உள்ளது.

எனவே இத்தகைய தடைகளைத் தடுத்து நிறுத்தும் முதற் காரியமாக அவர்கள் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டியது அவசியமானதாக உள்ள அதேவேளை இலங்கை புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கிய நிலையில் தான் அப்பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டியதாகவும் உள்ளது.

# சமாதான எழுச்சிப் பேரணிக்கு ஏற்பாடு

புதிய அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் இருந்து மக்களை ஒன்று திரட்டி கொழும்பில் மாபெரும் எழுச்சிப் பேரணியொன்றையும், பொதுக்கூட்டத்தையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை 80 அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ளன.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து 7000இற்கு மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய சமாதானப் பேரவை உட்பட்ட 80 அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு அமயமான மக்கள் சமாதான முன்னணி மூலமாக பேரணி தொடர்பான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் 2000 பேர் பயணம் செய்யும் அளவில் "சமாதானப் புகைவண்டி" ஒன்றும் அன்றைய தினம் கொழும்புக்குவரவுள்ளது. இதற்காக புகையிரதம் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

இவை தொடர்பான ஏற்பாடுகளை மக்கள் சமாதான முன்னணியின் ஏற்பாட்டாளர் எஸ்.பி.நாதன் மற்றம் தேசிய சமாதானப் பேரவை பிரமுகர் கலாநிதி ஜெகான் பெரேரா ஆகியோர் செய்து வருகின்றனர்.

இந்த புகையிரதத்தில் எல்லைப்புற மக்கள் அழைத்து வரப்படுவர். இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு அரசியல்வாதிகளுக்கும் அழைப்பு விடப்படும். இங்கு அரசியல்வாதிகளுக்கு யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியமும் சமாதானப் பேச்சுக்களின் அவசரமும் புரியும் படி விளங்க வைக்கப்படும்.

அத்துடன் யுத்தம் காரணமாக இலங்கையின் சகல மக்களும் குறிப்பாக வடபகுதி மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் தொடர்பாக பிரசுரங்களும் விநியோகிக்கப்படவுள்ளன.

மேலும் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறும் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்துமாறும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

புதிய அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க அழுத்தமும் ஒத்துழைப்பும் அனுசரணையும் வழங்குமாறு வெளிநாடுகளைக் கோரும் கடிதங்களும் அந்நாடுகளின் இலங்கைத் தூதுவர்களுக்கு அனுப்பப்படவுள்ளன.

நிகழ்வுகளின் மேற்படி ஏற்பாட்டாளர்களின் முக்கியஸ்தர்கள் உட்பட இனப்பிரச்சனை தொடர்பான தெளிவான நிலைப்பாடுள்ள பலர் விளக்கமளித்து உரையாற்றவும் உள்ளனர்.

# 'இனவாதம் தலைதூக்கியதால் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள்'

## -ஜனாதிபதி-

கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளை தற்போதைய ஆட்சியாளர்கள் ஒருபோதும் விடக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விடயத்தில் முட்டுக் கட்டையாக இருக்கக்கூடாது என்பதாலேயே என்னிடமிருந்த பாதுகாப்பு அமைச்சைக்கூட அவர்களிடம் கையளித்துள்ளேன்.

சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்றி எந்தவொரு கட்சியும் ஆட்சியமைக்க முடியாது என்பதை நடந்து முடிந்த தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே, ஆளும் தரப்பினர் சிறுபான்மை மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒருபோதும் பின்னிற்கக் கூடாது. இந்த விடயத்தில் நானோ எனது கட்சி உறுப்பினர்களோ தடைக்கல்லாக இருக்க மாட்டோம்.

தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் விடயத்தில் ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்படும் முக்கிய நல்ல தீர்மானங்களை ஏகமனதாக ஏற்றுக்கொள்வோம். இதற்கு முன்னோடியாகவே விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை ஆளும் தரப்பினர் சிபார்சு செய்யும் பட்சத்தில் யுத்த நிறுத்தத்தைப்பிரகடனப்படுத்தத் தயாராகவுள்ளேன்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இதுவரை காலமும் அமுலில் இருந்த பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு ஆளும் தரப்பினருக்கு அனுமதி வழங்கியுள்ளேன்.

தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாக அனுபவித்துவரும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக சகல விட்டுக் கொடுப்புகளையும் செய்யத் தயாராகவுள்ளேன். இந்தச் சந்தர்ப்பத்தை ஆளும் தரப்பினர் பயன்படுத்தி இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண முன்வரவேண்டும்.

கடந்த கால ஆட்சியில் இனவாதம் மேலோங்கியிருந்ததாலேயே 75 வீதமான மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள். இதற்கு எமது கட்சி உறுப்பினர்கள் பலரது செயற்பாடுகளும் முக்கிய காரணமாகும்.

தமிழ் மக்களின் வாக்குகள் எந்தவொரு பெரும்பான்மைக் கட்சியையும் சேராவிட்டால் எவருமே ஆட்சியமைக்க முடியாது.

எனவே, எவராயினும் இனிவரும் காலங்களில் தமிழ் மக்களை அரவணைக்காவிட்டால் பாதகமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். எனவே, தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு என்ற விடயத்தில் ஆளும் கட்சியினர் உறுதியாக இருக்கவேண்டும்.

இம்முறை நாம் தேர்தலில் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம், தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியது. மோசமான பொருளாதார நிலைமை மற்றும் மின்வெட்டு அமுல் செய்தமையேயாகும். இவ்வாறான தவறுகளை தற்போதைய ஆட்சியாளர்கள் விடக்கூடாது.

தேசிய அரசாங்கத்திற்கு எமது கட்சி ஒரு போதும் சம்மதம் தெரிவிக்கப்போவதில்லை. இதனை மீறும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியை விட்டு நீக்கும் சகல அதிகாரங்களையும் கட்சியின் செயலாளரிடம் ஒப்படைத்துள்ளேன் என்றும் திருமதி குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

# கல்வித்தகைமையை முன்னிலைப்படுத்தும்

## கனடாவின் புதிய விஸா நடைமுறை!

கனடாவில் திறமையடிப்படையில் குடியேறுவதற்கான சட்ட விதிமுறைகளை அந்நாட்டரசாங்கம் மேலும் கடுமையாக்கியுள்ளது.

இதன் காரணமாக கனடாவில் குடியேறுவதற்காக விண்ணப்பித்த பின் காத்திருக்கும் ஆயிரக் கணக்கானோர் பாதிப்பிற்குள்ளாகலாம் என சட்டத்தரணிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புதிய சட்ட விதிகளின்படி கனடாவில் திறமை நிமித்தம் குடியேற விரும்புவோர் சாதாரண கனடியப் பிரஜையை விட கூடுதல் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாரம் முதல் அமுலுக்கு வரும் இப்புதிய சட்ட விதிகள் கனடாவின் குடியேற்ற கொள்கையை நவீன மயப்படுத்தியிருப்பதுடன் சீரான தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதென அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இப்புதிய சட்டவிதிகளின்படி கனடாவில் திறமை நிமித்தம் குடியேற வருவோர் அந்நாட்டின் தேசிய மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சில் சரளமாகப் பேசக்கூடியளவு அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்தது முதுமாணி (Master's Degree) பட்டத்தையாவது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் பல வருட தொழில் அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் கனடாவில் தொழில் ஒன்றை அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரை கொண்டிருக்க வேண்டும்.

முன்னைய விதிகளின்படி மொழியறிவிலுள்ள திறமை கருத்திலெடுக்கப்படாததுடன், இள நிலைப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் போதுமான தகுதியாகக் கருதப்பட்டது.

கனடாவின் இப் புதிய சட்ட விதிகள், கனடாவில் குடியேறுவதற்காக விண்ணப்பித்த பின் நிண்ட காலமாக, சுமார் 5 வருடங்களாக காத்துக்கிடக்கும் ஆயிரக்கணக்கானோரை பாதிக்கம் என குடியேற்ற துறையுடன் தொடர்புடைய சட்ட அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். காரணம் இப்புதிய சட்ட விதிகளின் படியே இனிமேல் விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமல்ல, ஏற்கனவே விண்ணப்பித்த பின் காத்திருப்பவர்களுக்கும் விஸா வழங்கப்படும்.

இப் புதிய சட்ட விதிகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கனடிய குடி வரவுத்துறை அமைச்சர், இனிமேல்பொருளாதார, கல்வித் தகுதிகளில், திறமையில் முன்னணி வகிப்போரை சுலபமாகத் தெரிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இப் புதிய சட்ட விதிகள் கனடாவில் குடியேறுவதற்காக விண்ணப்பித்து காத்திருப்போரின் கோவைகளை (File) சுலபமாக அகற்றுவதற்கு பெரிதும் உதவுமென இத்துறையுடன் தொர்புடைய சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போன்ற நாடுகளில் இருந்து சென்று கனடாவில் குடியேற அனுமதிகோருபவர்கள் குறைந்தளவு கல்வித் தகைமைகளையே பெற்றிருப்பதால் பலரது விஸாக்கள் நிராகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாறும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சானறிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுககு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையிலும் சமயமுறை படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். அதோடு பதிவு திருமணம் தங்கும் இட வசதி, போக்குவரத்து வசதி குறித்த நேரத்தில் சிறந்த முறையிலும், நிறைவான சேவைக்கும் நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் எங்களை அழைக்கவும்,

**பணிப் பெண்கள் சேவை**

வீட்டு பணிப் பெண்களுக்கு உடனடி வேலை
வாய்ப்புகள் உங்கள் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**சிங்கப்பூர் விலாசம்:-**

R. பரமசிவம்- S.மோகனதாஸ்
LAVENDER VIDEO CENTER (PVT)LTD
BLK-808 FRENCH ROAD
# 01-159 SINGAPORE 200808
TELE PHONE 2971367-3720592 (H.P)92714294
E-MAIL: US BOY @ HOT MAIL.COM

இலங்கை தொடர்புக்கு:-
ஏ. ரமேஷ்
01-259344



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் டிசம்பர் 23-29 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் டிசம்பர் 30,31 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஜனவரி 05, 06 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



|| श्रीविष्णवे परमात्मने नमः ||

INTERNATIONAL TRADITIONAL & HOMOEOPATHY MEDICAL & RESEARCH & SERVICE

தூரதேச மந்திர உட்சாடன ஆஹர்ஷண பிராண தியான யோக ஆன்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்




MY GURU



முனிவர்களின் குருகுல வைத்திய பரம்பரை
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI. DR. T. MYALVAGANAM
R.H.M.D-D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
REGISTERED BY MINISTRY OF HEALTH SLMCNO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்த்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மன நோய், பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நன்மையான காரியங்களுக்கு திங்கில்லாத தெய்வீக மஹா மாந்திரீக வசிய வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள்கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத்தபால், பகஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரைகளோடு எல்லாமதத்தினர்களுக்குமேற்ற இறைபக்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும். புனித பரிகார பொருட்களை துரித விஷேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய ஆஹர்ஷண மந்திர உட்சாடன பிரான தியான யோக ஆன்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்

GURUSACKTHY CENTER (INDIAN CLINIC)
KALLADY - BATTICALOA.(P.O.)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
(இந்தியன் வைத்தியசாலை)
கல்லடி மட்டக்களப்பு. P.O
(ஸ்ரீலங்கா)

ரெலிபோன், பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 லிருந்து இரவு 11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை.
REGISTERD BY MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS
கொழும்பில் மாதத்தில் இருதடவைகள் நேர் ஆலோசனைகள் பெறலாம்.



## பண உதவி (சக்காத்து)



கொழும்பில் வாழும் MOHAMED KAPOOR-SITHI NAZEEMA இவர்களின் 25 வயதான ஒரே மகன், கல்கிசை தோமஸ் கல்லூரி பழைய மாணவருமான RAHUMAN என்பவர் இடுப்பு சீவனற்று, நடக்க முடியாமல் 6 வருடமாக உட்கார்ந்த நிலையில் இருக்கிறார். தங்களது ஒரே மகனை தென் இந்தியா அழைத்து சென்று குணமாக்குவதற்கு போதிய பணவசதியின்றி, துயரில் ஆழ்ந்திருக்கும் பெற்றோர் அனைத்து முஸ்லிம்களிடமும், புனித நோன்பின் சக்காத்தை தங்களுக்கு வழங்குமாறும் மற்றனைத்து மதத்தினரும் உதவமாறு அன்படன் கேட்டுக் கொள்கின்றனர்.

பண உதவி வழங்குவோர்:-

**SITHI NAZEEMA**
**SAVINGS A/C. 0140-164197-101**
**SEYLAN BANK, DEHIWELA.**

நேரில்:- 190 2ND LANE, BADOWITA, MT.LAVANIA

விலாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# அலசுவது-இராஜதந்திரி

# யுத்த நிறுத்தம்

## நத்தாரில் உதயமாகும் நம்பிக்கை நட்சத்திரம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்புக்குச் சாதகமான முறையில் இணங்கியுள்ளது.

நத்தார் நள்ளிரவு ஆராதனையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் யத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது. புதிய ரணில் அரசாங்கமும் முழு அளவிலான யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தாவிடினும், மோதல் தவிர்ப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

நத்தார் நாளிலிருந்து எதிர்வரும் தைமாதம்வரை தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இந்த ஒரு மாதகாலப் பகுதியில் ரணில் அரசாங்கமும் மோதல் தவிர்ப்பை மேற்கொள்ள இணங்கியுள்ளது.

கடந்த ஆண்டிலும் இதே காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று எல்.ரி.ரி.ஈ இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சந்தித்திருந்தார். இச்சந்திப்பையடுத்து நோர்வேயின் சமரச முயற்சிகளை எல்.ரி.ரி.ஈ அமைப்பு வரவேற்றிருந்தது.

இவ்வரவேற்பின் அடையாளமாகவே கடந்த ஆண்டு டிசம்பர் நத்தார் தினத்தின் ஆரம்பத்தோடு ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை எல்.ரி.ரி.ஈ அமைப்ப அறிவித்தது.

இருப்பினும் அன்று பாராளுமன்ற ஆட்சியைக் கொண்டிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எல்.ரி.ரி.ஈ அமைப்பின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்க முன்வரவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதமராக விருந்த ரட்ணசிறி விக்கிரம நாயக்காவும் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தமிழீழ விடுதலைப் புலிகளது கடந்த வருட யுத்த நிறுத்த அறிவிப்பை நிராகரித்து கூட்டறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் பலவீனமடைந்த நிலையிலேயே யுத்த நிறுத்தத்துக்கு முன்வந்துள்ளார்கள் என்ற தோரணையில் அமைந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த ஆண்டு யுத்த நிறுத்தத்தை அறிவித்த காலப்பகுதியிலேயே பயங்கர வாதத்துடன் தொடர்புடையவை எனக் கருதப்படும் அமைப்புக்களைத் தனது நாட்டில் தடை செய்வது குறித்தும் பிரிட்டன் ஆராய்ந்து வந்தது.

எனவே பிரிட்டிஷ் தடையிலிருந்து தப்பிக் கொள்ளும் விதத்திலேயே எல்.ரி.ரி.ஈ அமைப்பு யுத்த நிறுத்தத்தை அறிவிக்க முன்வந்ததாகக் கூட சந்திரிகா ஆட்சியாளர்கள் கருதியிருந்தனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் நந்தார் தினத்தன்று ஒருமாத கால யுத்த நிறுத்தத்தை அறிவித்த எல்.ரி.ரி.ஈ. அமைப்பு தொடர்ந்தும் தனது யுத்த நிறுத்த அறிவிப்பை நீடித்தது.

கடந்த டிசம்பர் மாதம் முதல் நான்கு மாதகாலம் எல்.ரி.ரி.ஈ.யின் யுத்த நிறுத்தம் அமுலிலிருந்தது. இந்த நான்கு மாத காலத்தில் சந்திரிகா அரசு எவ்வகையிலும் எல்.ரி.ரி.ஈ.யின் யுத்த நிறுத்தத்துக்கு இணங்கவில்லை.

இறுதியாக கடந்த சித்திரைமாதம் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு தனது யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததும், வடக்கே ஆயுதப்படையினர் எல்.ரி.ரி.ஈ.மீது தமது தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

'அக்னிச்சுவாலை' என்று பெயரிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கையை இராணுவத்தினர் யாழ்குடாநாட்டின் தென்மராட்சிப்பகுதியிலிருந்து ஆரம்பித்தனர்.

பெருந்தொகையான படையினருடன் கனரக ஆயுதங்கள் சகிதம் அக்னிச்சுவாலை தாக்குதல் நடவடிக்கை எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டது.

இத்தாக்குதலை நடத்துவதன்மூலம் ஆனையிறவில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்த இராணுவத் தளத்தை மீளவும் கைப்பற்றுவதை படைத்தரப்பு முக்கிய இலக்காகவும் கொண்டிருந்தது.

கடந்த டிசம்பர் மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து நான்கு மாதகாலம்வரை அந்த யுத்த நிறுத்தத்தை நீடித்த காலப் பகுதியில், வடக்கே இராணுவம் புலிகள் மீதான தாக்குதலுக்கே தயாராகி வந்தது.

சந்திரிகா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளது யுத்த நிறுத்தத்தை நிராகரித்த நிலையில் மீளவும் எல்.ரி.ரி.ஈ யுத்தமொன்றில் குதிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே இராணுவம் வடக்கே இருந்து வந்தது.

இதனையடுத்து கடந்த சித்திரை மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொள்வதாக அறிவித்த மறுகணமே இராணுவம் 'அக்னிச்சுவாலை' எனப் பெயரிடப்பட்ட தாக்குதலை ஆரம்பித்தது.

ஆனால் 'அக்னிச் சுவாலை' ஆயுதப்படையினர் எதிர்பார்த்ததைப்போல சூடுபிடித்திருக்கவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளது கரங்களே ஓங்கியிருந்ததுடன், படைத்தரப்புக்குப் பலமான பதிலடியும் கிடைத்திருந்தது.

ஆரம்பித்த வேகத்திலேயே 'அக்னிச்சுவாலை' அணையத் தொடங்கியது. இராணுவம் ஆரம்பித்த 'அக்னிச் சுவாலை'த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்களே விட்டில் பூச்சிகளைப் போலச் சிக்குண்டனர். நூற்றுக்கணக்கான படையினர் பலியானார்கள். மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

ஆரம்பித்த வேகத்திலேயே 'அக்னிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் படைத்தரப்புக்கு ஏற்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தாக்குதலை தீவிரப்படுத்தி மேலும் அதிகளவு இழப்புக்களை உண்டு பண்ணலாம் என்ற அச்சம் படையினருக்குத் தோன்றியிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளது பலம் குறைவடையவில்லை என்பதை 'அக்னிச் சுவாலை'த் தாக்குதல் புலப்படுத்தியிருந்த அதேசமயம், புலிகள் அறிவித்திருந்த யுத்த நிறுத்தத்தை ஏற்க மறுத்த சந்திரிகா அரசுக்கும் இராணுவ ரீதியான பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

'அக்னிச்சுவாலை' தாக்குதல் நடவடிக்கை ஏற்படுத்திய இழப்புக்களிலிருந்து மீளுவதில் சிரமத்தை எதிர்நோக்கிய இராணுவம், கடந்த ஏப்ரல் மாதம் முதல் இன்று வரை பெரியளவிலான இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இத்தடவை நந்தார் தினத்தை அண்டியதாக ஒருமாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

இந்த யுத்த நிறுத்த அறிவிப்புக்கு பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் சாதகமான முறையிலேயே பதிலளித்துள்ளது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்ப அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்துக்கு மதிப்பளித்து மோதல் தவிர்ப்பை மேற்கொள்ள புதிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குத் தமது முதலாவது உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள தருணத்திலேயே எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் யுத்த நிறுத்த அறிவிப்பும் வெளியாகியிருந்தது.

இதன் காரணமாக வெளி உலகமும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு அரசியல் நடவடிக்கைகளில் வெளிப்படுத்தும் ஆர்வத்தை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.

பிரிட்டன், இந்தியா, ஜப்பான் உட்பட வெளிநாடுகள் பல எல்.ரி.ரி.ஈ. அமைப்பு அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை வரவேற்றுள்ளன.

இந்தியாவுக்குச் சென்றிருந்த புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர், இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பின்போது இலங்கை இனப்பிரச்சனை தீர்வு குறித்த விடயத்துக்கே முக்கியத்துவமளித்திருந்தனர்.

பாராளுமன்ற ஆட்சியை இழந்த பொதுஜன ஐக்கிய முன்னணி, இனப்பிரச்சனை விடயத்தில் இராணுவ அணுகுமுறைகளையே பெரிதும் கையாண்டிருந்தது. இதனால் அரசியல் நடவடிக்கைகள் எவ்விதத்திலும் முன்னேற்றம் கண்டிருக்கவில்லை.

மேடைக்கு மேடை இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டு வந்தார்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் சந்திரிகா அரசு உதறித்தள்ளியே வந்திருந்தது.

ஆனால் புதிய ஆட்சியாளர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் மூலம் வெளிப்படுத்திய நல்லெண்ணத்துக்கு சாதகமான முறை யில் பதிலளித்து, தமது தரப்பின் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் அனைவருமே சமாதான சகவாழ்வை வேண்டியே ஐ.தே.க.வைப் பதவியிலமர்த்தியுள்ளனர்.

இனவாதம் பேசியோருக்கும், இராணுவ அணுகு முறைகளை வரவேற்றோருக்கும் முழுநாடுமே நல்ல பாடத்தைப் புகட்டி விட்டுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. யினரது யுத்த நிறுத்தத்துக்கு இணங்கியதோடல்லாமல், நீண்ட காலமாகவே புறக்கணிக்கப்பட்டு வந்த இராணுவக் கட்டுப் பாடற்ற வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைக்க புதிய அரசு இணங்கியுள்ளது.

அத்துடன் நோர்வேயின் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த மத்தியஸ்த்த உதவியை மீளவும் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளிலும் புதிய ஆட்சியாளர்கள் இறங்கியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் வார உரையில் அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் தமக்கிருக்கும் விருப்பத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் புதிய தீர்வு முயற்சிகளை குறுகிய நோக்கங்களுக்கு இடந்தராது ஆரம்பிக்கும் பட்சத்தில் சிறந்த பலாபலன்களையே எதிர்பார்க்க முடியும்.

கடந்த காலங்களில் போலன்றி சர்வதேச சமூகத்தின் ஆதரவும் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு நிறையவே இருப்பதைக்காண முடிகின்றது. அதேசமயம் தூரதிர்ஷ்டவசமாக மீளவும் மோதல்கள் ஏற்படும் பட்சத்தில் நெருக்கடி நிலை மேலும் அதிகரிப்பதோடு, சர்வதேச சமூகத்தின் தலையீடுகூட ஏற்படுமென்றே கருத முடிகின்றது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் காலப்பகுதியிலேயே இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் தொடர்பாக இந்தியா பெரிதும் ஒத்துழைத்திருந்தது.

ஆனால் இந்தியாவின் பங்களிப்பு உரிய பயனைத் தரத் தவறியிருந்தது. இருப்பினும் இந்தியா, இலங்கை விவகாரத்தில் தனது அக்கறையை எப்போதும் வெளிப்படுத்தி வருவதாகவே இருக்கின்றது.

தற்போதைய அரசியல் சூழலை நோக்குகையில் இந்தியா மட்டுமல்ல, நோர்வேயும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளதுடன் சர்வதேச சமூகமும் இலங்கைப் பிரச்சனைத் தீர்வில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்டசமானதாக இருக்கவிடாது புதிய பிரதமர் மோதல் தவிர்ப்பை தமது தரப்பிலிருந்து அறிவித்துள்ளார்.

ஒரு மாதகாலத்துக்கு இரு தரப்புமே யுத்தம் புரிவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளன.


இம்முடிவு ஒரு மாதகாலத்துக்கு மட்டுமல்ல. நிரந்தரமானதாக இருக்க வேண்டுமென்பதே முழுநாட்டினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள இக் காலப் பகுதியில் வெறுமனே ஆயுதங்களுக்கு மட்டும் கட்டுப் போடுவதுடன் இருந்து விடாது; துரிதமாக அரசியல் தீர்வு முயற்சிகளையும் ஆரம்பிக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

யுத்த நிறுத்த காலத்தில் அரசியல் ரீதியாகவும் மௌனம் சாதிக்கப்பட்டு, வேறு விடயங்களில் புதிய அரசின் கவனம் திரும்புமேயானால் 'வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறிய' நிலை கூடத் தோன்றலாம்.

இந்நிலையில் யுத்த நிறுத்த காலத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கான அத்திபாரக் கற்களை நாட்டுவதில் நாட்டஞ் செலுத்தப்படும் பட்சத்திலேயே நிரந்தரமான யுத்த நிறுத்தத்துக்கு வழிவகுக்க முடியும். கூடவே அரசியல் தீர்வொன்றையும் உறுதியாகக் கட்டி எழுப்ப முடியும். ●

# அதிரடி அய்யாத்துரை



**பத்திரிகை தர்மம்** என்கிற சொல் அர்த்தமிழந்து போச்சு பார்த்தியளே... இலக்ஷனுக்கு முன்னால் "அநீதிக்கு எதிரா போராட்டம் நடத்துற சுதந்திரப் பத்திரிகையாளர்கள்" தேர்தல் முடிஞ்சு தங்களின்ர ஆள் எம்.பி.யானதும் மீடியா செக்ரடரியா மாறிப்போயிடினம். என்னதான் இருந்தாலும் இந்த நாட்டு பத்திரிகா தர்மத்தை கொஞ்சமாவது காப்பாற்றும் வச்சிருக்கிறது கிழக்கிலங்கையில இருக்கிற செய்திச் சங்கத்தார்தான்! என்ன புரியலியே... உந்த ஆட்கள் யாருக்கும் செக்ரட்டரியாப் போற தில்ல தங்களை சுழையாகக் கவனிக்கிற சகலருக்கும் 'வேலை பார்த்துக்' கொடுப்பினம்! உந்த சங்க முக்கியஸ்தர்கள் தங்களின்ர நத்தார் விடுமுறையை கழிக்க கொழும்புக்கு வந்திருந்தவை! செல்வந்தாரின் சொகுசு வாகனத்தில ஒரு வாரகால சுற்றுப் பயணம். முக்கு முட்டும் அளவுக்கு உட்சாக பாணம், இன்னும் வெளியில சொல்லக் கூடாத வேறு ஏதேதோவெல்லாம் கிடைச்சதாச் சொல்லுகினம்! இலக்ஷன் காலத்துல செய்த சேவைக்கு ஏராளமான பரிசுகள்! அதுதான் சொன்னனான் மற்றெல்லா இடங்களையும் விட கிழக்குல பத்திரிகா தர்மம் உயிர் வாழுதென்று! உவையை பார்த்து எனக்குப் பொறாமை எண்டு நினைக்காதியள். 'சுதந்திர செய்திகளை' கண்ணை மூடிக்கொண்டு நம்புற அப்பாவி சனத்தின்மேல அனுதாபம் தான்!


**டி.வி.டிஸ்கஷனில** சமாதானம், யுத்தநிறுத்தம் உதைப் பற்றி யெல்லாம் கதைத்துக்கொண்டு வந்த செல்வந்தார் புலிகள் சகோதரப் படுகொலைகளை நிறுத்தவேண்டும் என்று மனகல உள்ளதை சொல்லிப் போட்டார். ஏற்கனவே ஆயுதம் தாங்கிய இராணுவ கமாண்டோக்களுடன் வலம் வரும் இவர் புலிகள் சகோதரப் படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்று சொல்ற அளவுக்கு போயிருக்கிறார் என்றால்... யாருடைய துப்பாக்கிக்கு உவர் பயப்படுகிறார் என்று புரியுதலே..! உதே டிவி. டிஸ்கஷனில நம்ம தமிழ்க்கட்சித் தலைவர்கள் அலிசாஹிர் மௌலானாவிடம் அசடு வழிந்த அழகை பார்த்தியலெண்டால்... யு.என்.பி.சார்பா கலந்துகொண்ட மௌலா னாவை பார்த்து அழாத குறையாக சொல்லுகினம். "உங்கள் அரசாங்கம் பிரச்சனையை தீர்க்கவில்லை என்றால் நாம் என்ன செய்வது!" தாங்கள் பார்லிமென்டுக்குப் போய் வெட்டிக் கிழிக்கப் போறாதாக் கூறித்தான் சனத்திட்ட வாக்குக் கேட்டினம். ஒரு மாதம் கூட கழியவில்லை அரசாங்கம் பிரச்சனையை தீர்க்கா விட்டால் நாம் என்ன செய்வதென்று கையை விரிக்க ஆரம்பிச்சுட்டினம்... அப்படியென்றால் உவை எதுக்கு பாராளுமன்றம் போனவை!?

**"மகேஸ்வரன் கேட்டார்** கிடைக்கிறது.. போர் நிறுத்தம், பாதை திறப்பு, மீன் பிடித்தடை நீக்கம் இவை மட்டுமா... இன்னும்..." போனவாரம் கொழும்பில இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையின்ர தலைப்புச் செய்திதான் இது! மகேஸ்வரன் மட்டும் இல்லையெண்டா இது ஒன்றும் இல்லை! யூ.பியை தாஜா பண்ணி பிஸினஸை டெவலப்பண்ணனும் என்கிறதுக்காக உந்த மாதிரி அண்டப் புழு கெல்லாம் பத்திரிகையில போட்டு உன்ர பேரையும் கெடுத்து ஊரின்ர பேரையும் கெடுக்கிராயே.. சரவணா! ஒளி விளக்கு ஏற்ற குடாநாட்டில இருந்து வந்து தலைநகரில இருந்துகொண்டு 'சப்ரா' நியூஸ் பேப்பர் நடத்துகினம்!

இறந்த மனிதர்கள் மீண்டும் ஒரு காலகட்டத்தில் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கை, உலகம் முழுவதும் நிலவிய ஒரு பொது நம்பிக்கை என்றே கூறலாம்.




சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட பிரமிட்டுக்கள்



# இறந்தவர்கள் உயிர்பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கீழ் பிரமிட்டுகள்

## சீன ஆராய்ச்சியாளர்களின் அதிசயக் கண்டுபிடிப்பு



எகிப்து நாட்டில், இதற்காக இறந்து பட்ட. சக்கரவர்த்திகளின் சடலங்கள், பிரமிடு என்ற கல்லறைகளில் -மூலிகைத் தைலங்களால் பாதுகாக்கப்பட்டதை நாம் அறிவோம்.

இப்போது ஒரு புதியசெய்தி!

சீனாவிலும் இதே நம்பிக்கையில்-பிரமிடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் விசேஷம் என்னவென்றால், இந்த அன்டர்கிரவுண்ட் பிரமிடுகளில் இறந்து பட்டவர்களின் சடலங்கள் இல்லை. அதற்கு பதிலாக தத்ரூபமான அவர்களின் சிலைகள் பாதுகாப்பாக புதைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் இத்தகைய சிலைகளை கண்டெடுத்த, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆரம்பத்தில் பல குழப்பங்களை சந்திக்கவேண்டி வந்தது என்னவோ உண்மைதான்.

எதற்காக இந்த சிலைகளை இவ்வளவு சிரமப்பட்டு-இவ்வளவு பாதுகாப்பாக பூமிக்குள் புதைத்திருக்கிறார்கள். அதற்கு சரியான காரணம் என்னவாக இருக்கும்.

அதேபோல்-மனித வடிவச் சிலைகள் தவிர நாய், பன்றி, மாடு, குதிரை போன்ற மனித உபயோகமுள்ள சிலைகளும்சீனாவின் புராதன பூமிக்கடியில் ஆராய்ச்சியாளர்களால் தோண்டி எடுக்கப்பட்டது.

இதற்கெல்லாம் சரியான காரணத்தை அப்போது கண்டுபிடிக்க முடியவில்லைதான். அதற்காக ஆராய்ச்சியாளர்கள் வருடக்கணக்கில் 'கார்பன்டேட்டிங்' போன்ற விஞ்ஞான வழிகளில் இந்த சிலைகளை ஆராய வேண்டி வந்தது.

இப்போதும் சில சிலைகள் அதில் பூசப்பட்ட 'வண்ணம்' மங்காமல் இருக்கிறது. ஆனால் இந்த சிலைகள் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டாயிரத்து இருநூறு வருடங்கள் ஆகிறது என்பது அந்த கரிம நாள் கணக்கீட்டு' முறையில் துல்லியமாகவே கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

எல்லாம் சரி... மனிதச் சிலைகளோடு, இந்த மனிதனோடு தொடர்பு கொண்ட விலங்குகளின் சிலைகளும், ஏன் பாதுகாப் பாக வெகு சிரமப்பட்டு பூமியைத் தோண்டி புதைக்கப்பட்டன. அதுவும் சில இடங்களில், இந்த அபூர்வ சமாதிகள் 90 அடி பூமியைத் தோண்டி பாதுகாப்பாக புதைக்கப்பட்டிருந் தது. ஆராய்ச்சியாளர்களை பிரமிக்க வைத்தது.



எகிப்தில் உள்ள பிரமிட்டுக்கள்

அதேபோல், 'கின் ஷி ஹுங்டி' என்ற பிரசித்தி பெற்ற சீனச் சக்கரவர்த்தியின் கல்லறை, ஏறத்தாழ 25 மாடி அளவு உயரம் கொண்டதாக இருக்கிறதாம். அந்த ஒட்டு மொத்த 25 மாடி உயர பிரமிடும் பூமிக்குள் திட்டமிட்டு, அந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வடிவமைக்கப் பட்டது. அது இன்றைய கட்டட வல்லுனர்களை, மேலும் வியப்படையச் செய்கிறது. இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், பூமிக்குள் சமாதி வைக்கப்பட்ட சிலைகள் ஒவ்வொன்றும் அந்த அந்த மனிதர்களின் தத்ரூப உருவங்களாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது?

அதாவது.. சக்கரவர்த்தி என்றால் அவரது உருவம் அப்படியே! அதேபோல் அந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவில் வாழ்ந்த மனிதர் எப்படி தொப்பையும், தொந்தியுமாக சற்று குள்ளமாக இருந்தார்களோ, அதேமாதிரி அச்சுப் பிசகாமல் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளை எல்லாம் பார்த்தால், இந்த சிலை செதுக்கும் பணிக்கு கைதேர்ந்த சிற்பிகளே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகள் பூமிக்குள் புதையுண்டு கிடந்தாலும் அந்த சிலைகள் பெரிதாக சேதாரமின்றி அதன் வடிவம், வர்ணம் மாறாமல் இருப்பதும் அன்றைய கைவினைக் கலைஞர்களின் ஆற்றலுக்கு சான்றாக உள்ளது. புத்தகங்கள் வாயிலாக நாம் படிக்கும் சரித்திரங்கள் எதுவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய விஷயங்களை துல்லியமாக சொல்லுகிறது என்று கூற முடியாது. அத்தகைய சரித்திரங்கள் எல்லாம் உண்மையில் ஒரு 500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முந்தைய உலகத்தைத் தான்சரியாக நமக்கு படம் பிடித்துக் காட்டிக்கொண்டுள்ளது. ஆனால், சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிற்பங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளின் முந்தைய சரித்திரத்தை மிகச் சரியாக நம் கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துவதாக அமைந்துள்ளது வியப்படையச் செய்யும் செய்திதான்.

இப்படிச் சிலையாக செய்து புதைக்கப்பட்ட மன்னர்கள் அல்லது மனிதர்கள் ஒரு காலத்தில் உயிர்பெற்று எழுவார்கள் என்ற நம்பிக்கை எகிப்து நாட்டைப்போலவே சீனாவிலும் இருந்திருக்கலாம் என்றே ஆராய்ச்சிகள் அறிவிக்கின்றன. அப்படி உயிர்த்தெழும் மனிதர்களுக்கு உபயோகப்படும் வகையிலேயே குதிரைகள் மற்றும் பிராணிகளின் உருவங்களுக்கும் சிலைகள் வடித்து சமாதி வைக்கப்பட்டுள்ளன.

அவர்களது நம்பிக்கையின்படி, அந்த சிலைகளும் அந்த விலங்குகளும் மீண்டும் உயிர் பெறவில்லைதான். ஆனால் எந்த ஒரு சரித்திர சான்றும் விளக்க முடியாத உண்மைகள், அத்தாட்சிகள் இந்த சிலைகள் மூலம் மீண்டும் உயிர் பெற்றுள்ளதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். 'சீனப்பெருஞ்சுவர்' என்பது உலகப் புகழ் பெற்றது. அது உலக அதிசயங்களில் ஒன்றுதான். அந்த சினப் பெருஞ்சுவர் கட்டிய பெருமைமிக்க காலகட்டத்தில்தான் இந்த அபூர்வ சிலைகளும் பூமிக்கடியில் பிரமிடுகளாக சமாதி வைக்கப்பட்டுள்ளதும் இதன் முக்கியத்துவத்தை ஆராய்ச்சியாளர்களுக்கு அறுதியிட்டுக் காட்டுகிறது.

தவிர்க்க முடியாத காரணத்தால் ஹிட்லர் தொடர் இம்முறை இடம்பெறவில்லை. வழமைபோல் அடுத்தவாரம் முதல் எதிர்பாருங்கள்

# மூண்டது போர் 11

தருவது ~ தண்டாயுதன்



காபூல வீதிகளில் குதூகலமாக பயணம் செய்யும மக்கள்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தேடி வருகின்ற ஒசாமா பின்லாடன் எங்கிருக்கிறார்? என்பதே இப்போதைய கேள்வி. அமெரிக்க தளபதி ஒருவர் ஒசாமா டோரா போரா குகைகளில் போடப்பட்ட குண்டுகளில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் சில உளவுத் தகவல்கள் ஒசாமா காஷ்மீர் பிரதேசத்துக்குள் தஞ்சம் புகுந்துள்ளார் எனக் கூறுகின்றன. அமெரிக்காவின் ஒசாமாவைத் தேடும் படலம் ஆசியா முழுவதும் பரவி யுத்தம் விரிவடையுமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

புதிய அரசாங்கமொன்று மேற்கு நாடுகளின் ஆசீர்வாதத்துடன் ஆப்கானிஸ்தானில் உதயமாகியுள்ளது. இந்த அரசாங்கத்தின் தலைவராக ஹமீட் கார்ஸாய் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின்லாடன் உயிருடன் பிடிபட்டால் அவரை சர்வதேச நீதிமன்றம் முன்பாக நிறுத்தும் பொருட்டு அமெரிக்காவிடம் கையளிக்கப் போவதாக புதிய ஆப்கான் தலைவர் கூறியுள்ளார். தலிபான் தலைவர் முல்லா மொஹமட் ஒமரையும் தமது அரசாங்கம் அமெரிக்காவிடம் கொடுக்கும் என அவர் தெரிவித்திருக்கிறார்.



ஆப்கானிஸ்தானில் போராடும் அமெரிக்க கமாண்டோ படையினர்

அமெரிக்கா தவறாகக் குறிவைத்ததில் 65 அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்கள் சத்ரான் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆப்கானிஸ்தானின் பக்டியா மாநிலத்தில் இருப்பவர்கள். புதிய அரசாங்கத்தின் பதவியேற்பைக் காண்பதற்காக வாகனமொன்றில் வந்தபோதே இவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். ஒசாமாவைத் தேடும் குண்டு வீச்சு விமானங்களில் ஒன்று, அல்-குவைதா அமைப்பின் வாகனத் தொடரணி எனத் தவறுதலாகக் கருதித் தாக்கிய வேளையிலேயே அந் 65 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். அதிநவீன தொழில் நுட்பம், நன்கு பயிற்சிபெற்றவர்கள் என்று அமெரிக்க விமானிகள் கூறப்பட்டாலென்ன, ஏவுகணை ஒன்றை தப்பாக ஏவி அப்பாவிகள் பலரை ஏப்பம் விட்டுள்ளார்கள். ஏனையோர் செய்தால் பயங்கரவாதம். அமெரிக்கா செய்தால் வெறும் தவறுமட்டுமே!!!

பயங்கரமான அழிவை ஏற்படத்தக்கூடிய குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் யுரேனியம் அல்-குவைதா முகாமொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கந்தஹார் பகுதிக்கு அருகில் உள்ள ஒரு மறைவிட முகாமிலேயே இந்த யுரேனியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மண்சாடிகள், பரல்கள், இரும்புப் பெட்டகங்கள் என்பவற்றில் இந்த அபாயகரமான யுரேனியம் மறைத்துவைக்கப்பட்டிருந்ததை வடக்குக் கூட்டணிப் படை கண்டுபிடித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி செய்தபோது இஸ்லாமியர்களுக்கே கடுமையான விதிமுறைகள் அமுலாக்கப்பட்டன. வேறு மதத்தவர்கள் தலைகாட்டவும் முடியாது. கிறிஸ்தவத்தைப் போதிக்க முற்பட்டதாகக் கூறி சில வெளிநாட்டவர்களும் கைது செய்யப்பட்னர். ஆனால் தற்போது காபூல் நகர வீதிகளில் கிறிஸ்மஸ் பண்டிகை களைகட்டியுள்ளது. அலங்காரப் பொருட்கள், நத்தார் மரங்கள் என்பவை கூட விற்பனையாகின்றன. அமெரிக்க, பிரிட்டிஷ் படைவீரர்களுக்கும் ஆப்கானிஸ்தான் மக்கள் நத்தார் வாழ்த்துக் கூறுகின்றனர். தாயகத்திலிருந்து வந்து ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்பினர் தமது முகாம்களுக்குள் கிறிஸ்மஸ் மர அலங்காரம் செய்துள்ளனர். நத்தார் பக்தி கீதங்களையும் பாடுகின்றனர்.

பிரிட்டிஷ் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானைப் புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளன. பிரிட்டிஷ் இராணுவத்தின் பொறியியல் பிரிவு தொலை தொடர்பு, மின் விநியோகம், விமான நிலையப் புனரமைப்பு, நீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய பணிகளை புனர் நிர்மாணம் செய்யும் வேலையை ஆரம்பித்துள்ளது. 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தானில் இந்த அடிப்படை அம்சங்கள் அனைத்துமே புறக்கணிக்கப்பட்டிருந்தன.

ஆப்கானிஸ்தானின் முழுமையான புனரமைப்புக்கு ஒன்பது பில்லியன் அமெரிக்கா டாலர்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பெருந்தொகையை செலவிடக்கூடிய பணப்பலம் ஆப்கானிஸ்தானிடம் இல்லை. அமெரிக்காவும் அதன் நேசநாடுகளுமே இத்தொகையை வழங்கவுள்ளன. புதிதாக உருவாகும் ஆப்கானிஸ் தான் வெளிநாடுகளால் கட்டியெழுப்பப்பட்டதொன்றாகவே அமையவிருக்கிறது.

(தொடரும்)

# தகவல் பெட்டி



## ஆடு என்றால் ஆடுதான்!

பார்த்த பார்வையில் ஆடுகள் என சொல்லக் கூடியதாக இருக்கிறதா? வளர்ச்சி என்றால் அப்படியொரு வளர்ச்சி. ஆஜன்டீனா நாட்டு புல்வெளிகளில் வளரும் ஒரு வகை செம்மறி ஆடுகளைத்தான் இங்கே காண்கிறீர்கள். பாரிய அளவிலான பண்ணைகளில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் இந்த வகை ஆடுகள் சுமார் 220 இராத்தல் எடை வரை வளரக் கூடியவை நவீன இனப்பெருக்க முறைகளின் கீழ் வேகமாக விருத்தி செய்யப்படும் இவை இரண்டு முதல் மூன்று வருடங்களுக்கு இறைச்சியாக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்து விடுகின்றன. உலகிலேயே இறைச்சி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஆஜன்டீனாவும் ஒன்று. தென் அமெரிக்க நாடான இங்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வேறுபட்ட காலநிலை நிலவிய போதும் மிருக வளர்ப்புக்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுகின்றது.


## பேட்டி

ஆப்கானிஸ்தானின் டோராபோரா மலைப்பகுதியை அரித்து ஒசாமா பின்லேடனை தேடிக்கொண்டிருக்கிறது அமெரிக்கா. அவர் இன்னமும் ஆப்கானிஸ்தானில் இருக்கிறாரா என்ற சந்தேகம் ஒருபுறம். இங்கு படத்தில் காணப் படுபவர்கள் ஒசாமா பின்லேடனும் பாகிஸ்தான் பத்திரிகையாளரான ஹமீத் மிர் என்பவரும்தான். கடந்த மாத ஆரம்பத்தில் ஹமீத் மிர் இரகசியமாக ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து ஒசாமா பின்லேடனை சந்தித்து பேட்டி கண்டார். அப்போதுகூட அமெரிக்கா ஒசாமாவை தேடி தாக்குதல் நடத்திக் கொண்டுதான் இருந்தது.

இதற்கு முன்னர் பல தடவை ஒசாமா பின்லேடனின் பேட்டிகளில் கட்டார் நாட்டின் அல்ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன. அந்த ஒளிப்பதிவு நாடாக்கள் அல்ஜசீராவுக்கு எவ்வாறு கிடைக்கின்றன என்பதை அறிய அமெரிக்கா முயற்சி செய்தது. பயனளிக்கவில்லை. இறுதியில் ஒசாமாவின் பேட்டிகளை ஒளிபரப்பக் கூடாதென குறிப்பிட்ட தொலைக்காட்சி நிலையத்துக்கு மிரட்டல் விடுத்தார் ஜோர்ஜ் புஷ்.

இவ்வாறிருக்கையில் தலிபான்களுடன் தனக்கிருந்த தொடர்பை பயன்படுத்தி ஒசாமாவை அதிரடி பேட்டி எடுத்து வெளியிட்டார் ஹமீத் மிர். இவரிடமும் விசாரணை செய்தது அமெரிக்கா. ஒசமா பின்லேடன் தனக்கு ஜேம்.பாண், காப்பி கொடுத்ததாக கூறுகிறார் ஹமீத்.





## பெங்குவின் முட்டை சேகரிப்பு

பெங்குவின் பறவைகள் கூட்டமாக தத்தித் தத்தி நடப்பது பார்ப்பதற்கு அழகான காட்சியாக இருக்கும். சைபர் பாகை செல்சியஸ்சுக்கும் குறைவான குளிர் நிலவும் ஆர்ட்டிக் பகுதியின் பனியுறைந்த நிலப் பரப்புகளில் வாழும் பெங்குவின் பறவைகளின் முட்டைகளை சேகரிப்பது வட, தென் துருவங்களை அண்மித்த சில பகுதிகளில் வாழும் மக்களின் ஜீவனோபாயம். முட்டை சேகரிப்பதற்காக தனது குதிரையில் கிளம்பி விட்ட ஒருவருக்கு அந்த முட்டைகளின் சொந்தக் காரர்கள் இடையில் அகப்பட்டு குறுக்காக நிற்கிறார்கள்.

வரிசையாக நிற்கும் பெங்குவின் பறவைகளின் தாழ்மையான வேண்டுகோளுக்கு முன்னால், வந்த காரியத்தை மறந்து நிற்கும் ஆர்ட்டிக் பிரதேச வாசியைத்தான் காண்கிறீர்கள்.

# காதோடு சொல்லுகிறோம்

'காதல் கல்யாணம்' படத்தில் நடித்துவரும் நாயகனை முன்பு லவ்விக் கொண்டிருந்த அந்த 'மா' நடிகைக்கு தற்போது தமிழில் ஒரு படம்கூட இல்லையாம். இதனால் பெங்களூருக்கே சென்று விட்டாராம். அங்கு ஒரு கன்னடப்படத்தில் நடித்துக் கொண்டு, புதிதாக ஒரு பாய்பிரண்டையும் சேர்த்துப் பிடித்துள்ளாராம்.

மாஜி பொன்னிற கூந்தல் நாயகியின் தங்கையை 'பக்கெட்' படம் மூலம் அறிமுகப்படுத்திய இயக்குநர் மறுபடியும் நடிகைக்கு டர்னிங் பாயிண்ட் கொடுத்து குஷிப்படுத்தியவர், தற்போது 'புதுசா' ஒரு படத்தை தயாரித்து டைரக்ட் செய்ய உள்ளாராம். இதில் ஹீரோவுக்குப் பதிலாக தானே நடிப்பதாக நாயகியிடம் சொன்னதும் நடிகை ஜகா வாங்கி விட்டாராம். 'வளர்த்து விட்டவனுக்கே பெப்பே.'

சென்னை புறநகரில் உள்ள மந்திர தந்திர உலக தியேட்டரில் சிகர இயக்குநரின் செஞ்சுரி படம் திரையிடப்பட்டது. ஒருநாள் வசூல் எழு நூற்றி ஐம்பது ரூபாயாம். இப்படி நஷ்டப்பட்டுத் தொடர்ந்து திரையிட்டுக் கொண்டிருக்கிறீர்களே' என்று தியேட்டர் காரர்களிடம் கேட்டால், சிகர இயக்குநர், மேற்படி மந்திர தந்திர உலகத்தில் இந்தப் படத்திற்காக ஒரு வாரம் ஷூட்டிங் நடத்தினார்கள். வாடகை தரவில்லை. 'படப் பெட்டி தர்றேன். திரையிட்டு வாடகையை வசூல் பண்ணிக்கிங்க' என்றாராம். அதற்காகத்தான் ஓட்டிக் கிட்டிருக்கிறோம் என்கிறார்கள் பரிதாபமாக!

'பெரியவர் சின்னவர்' படத்தில் நாயகி முதல் கட்ட படப்பிடிப்போடு படத்திலிருந்து தூக்கப்பட்டு விட்டார். யூனிட்டினர் வெளியில் சொல்வது 'ஹீரோயின் பல மொழிகளில் பிசியாக நடித்து வருகிறார். எனவே கால்ஷீட் பிரச்சனையால் புது நடிகையை நடிக்கவைத்து விட்டோம்' என்கிறார்கள். ஆனால் டைரக்டரும், தயாரிப்பாளர் தரப்பிலும் கொடுத்த அன்புத் தொந்தரவால்தான் அம்மணியே ஜகா வாங்கிவிட்டாராம்.

விருப்பமாக படம் எடுத்த தயாரிப்பாளர் படம் முடிந்தும் படத்தை வெளியிட தாமதிப்பதற்குக் காரணம் அவர் படத்திற்காக வாங்கியிருக்கும் பைனான்சுக்கான வட்டி பெரிய ரூபாயைத் தொட்டுவிட்டதாம். இப்போது படம் ரிலீஸ் என்றால் முழு வட்டியும் கட்ட வேண்டும். ஒரு வருடம் கடந்து விட்டால் பைனான்ஸ் பார்ட்டிகள் கொடுத்ததைத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். அதற்குப்பிறகு படத்தை ரிலீஸ் செய்தால் துட்டுபார்க்கலாமே என கிசுகிசுக்கிறாராம்.



பிரசாந்த்

## இன்னொரு வாரிசு

தமிழ்த் திரையுலகில் புத்தம் புது நடிகர்களுடன் நட்சத்திர வாரிசுகளும் அவ்வப்போது அறிமுகமாகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் தற்போது அறிமுகமாகவிருப்பவர் வி.ரமேஷ். குணச்சித்திர நடிகர் ரகுவரனின் இளைய சகோதரர்தான் இந்த வி.ரமேஷ்.

ரகுவரன் நடிகராக அறிமுகமான 'ஏழாவது மனிதன்' படத்தை இயக்கியவர் ஹரிஹரன். இவர் இயக்கிய விளம்பரப் படங்களில் ரமேஷ் உதவியாளராகப் பணியாற்றினார். அதோடு ஒளிப்பதிவாளர் தர்மாவிடமும் உதவியாளராகப் பணிபுரிந்திருக்கிறார். திரையுலகில் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட நினைத்த இவருக்கு நடிக்கும் வாய்ப்பு வந்துள்ளது.

ஆம். தோற்றத்தில் ரகுவரனைப் போலவே இருக்கும் ரமேஷிற்கு சினிமாவில் நடிக்கின்ற வாய்ப்புகள் வர ஆரம்பித்து இருக்கின்றன. ஒரு பிரபல கதாநாயகி தயாரிக்கும் படத்தில் நடிக்க அழைப்பு வந்துள்ளதாம். அதை ஏற்று வித்தியாசமான ஒரு வேடத்தில் அறிமுகமாகிறார். தன் சகோதரன் ரகுவரன் மற்றும் சிவாஜி, ரஜினி, கமல் ஆகியோர் இவருக்கு பிடித்த நடிகர்களில் குறிப்பிடத்தக்கவர்களாம்.



மாளவிகா

## பொருத்தமான பெயர்

தெலுங்கில் தயாராகி வரும் ஒரு படத்தின் தமிழாக்கத்திற்கு 'காதல் கலாட்டா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். வெங்கடேஷ்-சிம்ரன் நடித்துக் கொண்டிருக்கும் இந்த படத்திற்கு அவ்வாறு பெயர் வைத்திருப்பது செம பொருத்தம் என்கிறார்கள். ஏனாம்?

சிம்ரன்-ராஜுசுந்தரம் ஜோடியின் காதல் ஊடல்-கூடல் சம்பவங்கள் இந்த படத்திலிருந்துதான் அதிகமாகி இருக்கின்றன. வெங்கடேஷிடம் பேசி கால்ஷீட் தேதிகளை தள்ளி வைத்துவிட்டு ராஜுவுடன் சிம்ரன் சுற்றித்திரிந்தது இந்த நேரத்தில்தான்!

இந்த விவரம் தெரிந்ததும் சிம்ரனிடம் நேரடியாகப் பேசி கண்டித்து கால்ஷீட் தேதி வாங்கி வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று படப்பிடிப்பு முடித்து திரும்பி இருக்கிறார்கள்.

## மீண்டும் 'அத்தை மகன்'


கார்த்திக்-ரம்யா கிருஷ்ணன் ஜோடியாக நடித்து நின்று போன அத்தை மகன் படத்தின் படப்பிடிப்பு மீண்டும் உடுமலைப் பேட்டை அருகே உள்ள தெய்வகாரன் பட்டியில் தொடங்கியது.

கதைப்படி வறண்ட பூமியில் படமாக்க வேண்டும். முதல் ஷாட் வைத்த போது மழைபெய்யத் தொடங்கியது. அவசர அவசரமாக இரண்டு கிலோ மீட்டர் சென்று அங்கு படமெடுத்தால் அணை உடைந்து வெள்ளம் புகுந்துவிட்டதாம். எப்படியோ கஷ்டப்பட்டு இடங்களைத் தேடிப் பிடித்து முடித்திருக்கின்றனர்.

இதில், பிரச்சனையால் பிரிந்திருந்த கத்தர் சிரும், ஒளிப்பதிவாளர் பி.கே. செந்தில்குமாரும் இணைந்திருக்கிறார்கள்.

## எப்போது திருமணம்

'பத்ரி' புகழ் பூமிகா நடித்துவரும் படம் 'ரோஜாக் கூட்டம்'. அதற்குப் பிறகு ஒரு படம்கூட புக் ஆகவில்லை! காரணம் 'குஷி' டைரக்டர் எஸ்.ஜே.சூர்யாவை அவர் மணந்து கொள்ளப் போகிறார் என்ற செய்தி வெளிவந்ததுதான்! அது சரி. உண்மையிலேயே பூமிகா-எஸ்.ஜே.சூர்யா திருமணம் நடக்குமா? நடக்குமாம்! எப்போது ராஜுசுந்தரம்-சிம்ரன், செல்வமணி-ரோஜா திருமணத்திற்குப் பிறகாம்!



விஜய்-சுவலட்சுமி

திரையுலக மறுபக்கம் (219)

# அழைப்பு...

## அம்மா...

தமிழ்நாட்டிலிருந்து மயன்

ஸ்டுடியோக்களில் படப்பிடிப்பு நடப்பது அனைவருக்கும் தெரியும். சமயத்தில் படுக்கைக்கு வலைவிரிக்கும் வைபவங்களும் இங்கு நடந்தேறுவது உண்டு. டிப்-டாப் நடிகர்களின் அல்டாப் டயலாக்குகள் சுவாரஸ்யமானவை. சமீபத்தில் ஏவிஎம். ஸ்டுடியோவில் இரண்டு படப்பிடிப்பு. அதில் ஒரு செட்டில் இருந்த நடிகருக்கு அடுத்த செட்டில் நடித்துக் கொண்டிருந்த நடுத்தர வயது கழிந்த நடிகையிடம் இருந்து செல்போனில் 'அழைப்பு' வருகிறது. நம் காதுதானாக விறைப்பாகிறது.

நடிகர் செல்லை ஆன் செய்து "எஸ்" என்கிறார்.

"..."

"பைன்... என்ன விஷயம்?"

"....."

"ஷூட்டிங் முடிஞ்சா நேரா வீட்டுக்குத்தான்"

இதற்கு என்ன பதில் வந்ததென்று நமக்கு தெரியவில்லை. நடிகரின் முகம் கலவரமடைந்ததை வைத்துப் பார்த்தால் ஏதோ ஏடாகூட செய்தி என்பது மட்டும் உறுதியாகிறது. நடிகர் உஷாராக, "இல்ல.. வீட்டுக்கு போயிட்டு ஆபீஸ் போகணும். கதை சொல்ல டைரக்டர் வர்றார்... சரி.. சரி... ஷாட் ரெடி. டைரக்டர் கூப்பிடறார்" என்றபடி லைனை கட் பண்ணின நடிகர் ஆசுவாச பெருமூச்சு விடுகிறார்.

லஞ்ச் பிரேக்.

நடிகர் தனது அறையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அனுமதி பெறாமல் யாரும் திறக்காத கதவை படீரென்று திறந்து, உரிமையோடு உள்ளே நுழைகிறார் அந்த நடிகை. "ஹாய்... என்ன பிஷ்ஷா?" என்று கதவு திறந்து அதே உரிமையுடன் ஒரு மீன் துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொள்கிறார். நடிகருக்கு டென்ஷன்.

"வஞ்சிரம் மீன் முடை செமையா கிளப்பி விடுமாமே! எப்படி சமாளிக்கிறே..?" என்று கேட்டுக் கொண்டே தனது அபரிதமாக கொழுத்த பிருஷ்

டத்தை நடி... கசிறார் ... கோஜத்து... கிறது. ... சாக்கில் ... ரின் முன்... வத்தை ப... "ஹாய்... ரொம்ப ... ஹீரோ இ... கூடாதே ... சதை" என... ளால்' ந... நடிகர் எ... "என்ன... "பனி... கச் சொ... நடிகரு... உள்ளே ... இருந்தா... "இப்ப... போவேன்... ஷூட்டி... நடிகை... நோட்டம்... மணி ... கிளப்ப ... காதல் ம... மாகி யூனி... அப்பவே ... 'ஏமாந்... ப்பே கிர... தெரியும் ... கார் ஏறி... மேற்ப... அம்மா ... பிராக்கட... ணனி 'ஆ...

## கம...

'நரவ... மலிழ... கே.எ... மனிதனி...

# ஜூனியர் சீனியர் படத்தில் மம்முட்டி ஜோடியாக மலேசிய அழகி லீனா

சக்தி இன்டர்நேஷனல் சார்பாக பி.லோக நாதன் தயாரித்து வரும் 'ஜூனியர் சீனியர்' படத்தில் படப்பிடிப்பு மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் அதைச் சுற்றி உள்ள தீவுகளில் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இப்படத்தில் ஏற்கனவே கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த தேஜா ஸ்ரீக்கு பதிலாக இப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் மலேசியா அழகி லீனா. மலேசியா வாழ் பஞ்சாபியான இவர் நன்றாக தமிழ் பேசுகிறார். ஏற்கெனவே மலேசியாவிலிருந்து நடிகர் ரவிச்சந்திரன், பாடகர் மலேசியா வாசுதேவன், நடிகை ரஞ்சனி ஆகியோர் தமிழில் அறிமுகமாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களது வரிசையில் இப்போது கதாநாயகியாக அறிமுகமாகும் லீனா இளமை, புதுமை, கவர்ச்சி என்று அத்தனை அம்சங்களையும் ஒருங்கே பெற்றிருக்கிறார். மம்முட்டியுடன் இதில் ஜோடியாகநடிக்கிறார் லீனா.

'ஜூனியர் சீனியர்' படத்தில் மம்முட்டி, அமசவிர்தன், லீனா, சாருலதா, சார்லி, பாண்டு, கே.ஆர்.விஜயா உட்பட பலர் நடிக்கிறார்கள். இசையமைப்பாளர் சங்கர் ராஜா. இவரும் இப்படத்தில் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தில் நடிக்கிறார். பாடல்கள்: பா.விஜய். நடனம்:தருண்குமார். சண்டைப்பயிற்சி: கனல்கண்ணன். வசனம்:பிரசன்னக்குமார். கதை, திரைக்கதை, இயக்கம்: ஜெ.சுரேஷ். தயாரிப்பு: பி.லோகநாதன்.

# சிரிப்பால் ஏற்பட்ட தடங்கள்

சுந்தர்.சி. இயக்கத்தில் டிசம்பர் வெளியீடாக வரும் புதிய படம் 'அழகான நாட்கள்' கார்த்திக்-ரம்பா கூட்டணியோடு இப்படத்தில் இணைந்திருப்பது மும்தாஜ். படப்பிடிப்பைப் பார்த்துக்கொண்டிருந்த வர்களின் அடக்க முடியாத சிரிப்பால் ஏற்பட்ட தடங்கலால் ஒவ்வொரு காட்சியும் நிறைய டேக்குகள் எடுக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப்போயிற்றாம். இப்படத்தில் ஒரு எதிர்பாராத காட்சி என்ன வென்றால் செந்தில் மும்தாஜை 'லவ்' செய்வதுதான்.



வெங்கடேஷ்-சிம்ரன்

# நடிகையின் மோகம்

ஒருபட பூஜைக்கு சிம்ரன் கண்ணாடி போட்டுக் கொண்டு வந்தார். அதையே தன் பாணியாக்கிக் கொண்டு குட்டி கண்ணாடி அணிந்து வருகிறார். இதனை கேள்விப்பட்ட ஜோதிகா தன் பங்கிற்கு த்ரீ ரோஸஸ் தொடக்க விழாவிற்கு அதே போல் குட்டிக் கண்ணாடி அணிந்து வந்தார்.

சிம்ரனுக்கு ஏகப் பொருத்தமாக இருந்த கண்ணாடி, ஜோதிகாவிற்கு வயதைக் கூட்டிக் காண்பித்தது.

# மீனாவின் மாற்றம்

'காதலே சுவாசம்' படத்தில் கார்த்திக்-மீனா ஜோடி. வழக்கமாக ஒரே மாதிரியான ஹேர் ஸ்டைல் வைத்திருந்த மீனா, இப் படத்திற்காக வித்தியாசமான ஹேர் ஸ்டைல் வைத்துக் கொள்வதற்காக மும்பையிலிருந்து வந்னா என்ற பெண்மணியை வரவழைத்துக் கொண்டார். அதேபோல் கார்த்திக்கும் தனக்கு விக் தயாரிக்க ஒருவரை நியமித்துள்ளார்.

# மஹிமா கழித்த விடுமுறை

சில சினிமா நடிகைகளுக்கு ஒரு ஆள் மீது 'இது' வந்து விட்டால் பொறுக்க முடியாமல் தாலி ஏறுவதற்கு முன்னாலேயே ஹனிமூன் போய்விட்டு வந்து விடுவார்கள். ஆனால் அதை ஹாலிடேயைக் கழிப்பது என்று சொல்லி விடுவார்கள். மஹிமா சவுத்ரி டென்னிஸ் புயல் லியாண்டர் பயஸுடன் நீண்ட ஹாலிடேயைக் கழித்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார்.

இப்படித்தான் மனிஷா கொய்ராலா தன் காதலருடன் ஆஸ்திரேலியாவுக்குப் போய்விட்டு வந்தார். வந்தவுடன் கசமுசா. இப்போது திருமணம் இல்லை தொழிலில் நன்றாய் ஊன்றிக் கொண்டு அப்புறம்தான் தாலி என்று ஒரே போடாய் போட்டு விட்டார். இதுதான் மும்பை சினிமாவா?

# முகப்பில்

லைலா

# விஜய் நடிக்கும் புதிய படம் 'யூத்'

## கதாநாயகியாக மும்பை அழகி

'குஷி', 'ப்ரியமானவளே', 'ப்ரண்ட்ஸ்', 'பத்ரி' என தொடர்ச்சியாக நான்கு வெற்றி படங்களை தந்த விஜய்யின் 5-வது படமாக, 'ஷாஜகான்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தற்போது அவர் நடிக்கும் 'தமிழன்' படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இதைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் புதிய படம் 'யூத்.'

'ப்ரியமுடன்' என்ற வித்தியாசமான படம் மூலம் ரசிகர்களை பெரிதும் கவர்ந்த விஜய் வின்சென்ட் செல்வா கூட்டணி மீண்டும் 'யூத்' படம் மூலம் இணைகிறார்கள். இந்த ஆண்டில் வசூலில் வரலாறு படைத்த 'தில்' படத்தின் தயாரிப்பாளர் லட்சுமி புரொடக்ஷன்ஸ் அஜய்குமார் இந்த படத்தை தயாரிக்கிறார்.

படத்தில் விஜய்க்கு ஜோடியாக, ஷாஹின் என்ற மும்பை அழகி அறிமுகமாகிறார். இவருடன் இன்னொரு புதுமுக கதாநாயகியும் அறிமுகமாகிறார். இவர்களுடன் விவேக், மணிவண்ணன், விஜயகுமார், வையாபுரி, முத்துக்காளை மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

'ஷாஜகான்' படம் மூலம் ரசிகர்களின் மனம் கவர்ந்த இசையமைப்பாளர் மணிசர்மா இந்த படத்துக்கு இசையமைக்கிறார்.

ஒளிப்பதிவு: நடராஜ், சண்டைப் பயிற்சி: கனல் கண்ணன், நடனம்: ராஜு சுந்தரம், எடிட்டிங்: லெனின்-வி.டி.விஜயன், கலை:என்.மணிராஜ், வசனம்: என்.பிரசன்னகுமார், டைரக்ஷன்: வின்செண்ட் செல்வா, தயாரிப்பு:அஜய்குமார்.

'யூத்' படத்தின் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் தொடங்கி, தொடர்ந்து நடைபெறுகிறது. பாடல் காட்சிகளை கனடா, நியூசிலாந்து மற்றும் தீவு பிரதேசங்களில் படமாக்க திட்டமிட்டு இருக்கிறார்கள்.

விஜய் நடித்த படங்களில்-'யூத்' ஒரு மாறு பட்ட இளமை காதல் கதையாக இருக்கும்.



ஜோதிகா

சினி விசிட்

# மினி சினி

✍ 'சூரி' படத்தில் விக்னேஷுக்கு ஜோடியாக நடிக்கவும், மற்றொரு படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கவும் லைலாவை அணுகினார்கள். இவர்களோடு நடித்தால் இமேஜ் போய்விடும் என்று நடிக்க மறுத்துவிட்டார் லைலா.

✍ விக்ரம்சிங்கின் அடுத்த படத்திலும் ஹீரோவாக நடிக்கிறார் ஷாம்.

✍ 'மின்னலே' இயக்குநர் கௌதம் மேனனுக்கு அஜீத் கால்ஷீட் கொடுத்திருக்கிறார்.

✍ ஆபாவாணனின் 'அடிமைகள்' படத்தில் அறிமுகமான ஹீரோ ரிஷி. அவர் இப்போது சப்தம் படத்தில் நடித்து முடித்து அடுத்து ஆர்.தண்டபாணி டைரக்ட் செய்யும் 'நதி' படத்தில் நடித்து வருகிறார். அவருக்கு ஜோடி பிரத்யுஷா.

✍ இளையராஜா இசையில் 'காசி' படத்தின் அனைத்து பாடலையும் ஹரிஹரன் பாடியுள்ளார். அதில் 'மாலு தோலுகொண்டு, மஞ்சகடமாரு கொண்டு, மஞ்சளை கண்டு தந்த கொட்டு மேளம்' என்ற பாடல் சூப்பர் ஹிட் ஆகி உள்ளது. இளையராஜா மீண்டும் பலமாகிறார்.

✍ பல வெற்றிப்படங்களைத் தந்த ஆர்.கே.செல்வமணி சொந்தமாக அடுத்து ஒரு படத்தைத் தயாரித்து இயக்க இருக்கிறார். அதில் செகன்ட் ரோலில் பிரகாஷ் ராஜ் நடிக்கிறார். பட்ஜெட்டில் தயாராக இருக்கும் இந்தப் படத்தில் புது முகங்கள் நாயகன் நாயகியாக அறிமுக மாக அடுத்த மாதம் பூஜை இல்லாமல் அவுட்டோர் ஷூட்டிங் செல்கிறார்கள்.

✍ ஏ.எம்.ரத்தினம் தயாரிப்பில் 'தில்' பட இயக்குநர் தரணி படமொன்றை இயக்கித் தர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சம்பளம் ஐம்பது லட்சம்.

✍ பிரகாஷ்ராஜ் நடித்து தயாரிக்கும் 'தயா' படத்தில் கௌசல்ய விக்குமார் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

✍ விஜய் நடிக்கும் 'தமிழன்' என்ற பட டைட்டிலை தயாரிப்பாளர் ஜீவன் மது பதிவு செய்து வைத்திருந்தார். அவர் அண்மையில் மரணமடைந்துவிட, அவரது மனைவியிடம் பத்தாயிரம் கொடுத்து டைட்டிலை எழுதி வாங்கி விட்டார் ஜீவி.

✍ அர்ஜுன் சொந்தமாகத் தயாரித்து, நடித்து இயக்கி வரும் படம் 'ஏழுமலை' இதில் நாயகியாக சௌந்தர்யா நடிக்கிறார். இரண்டாவது நாயகியாக பூனம் என்ற புதுமுகத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார். பம்பாயில் இருந்த பூனம் என்ற பெயரில் இரண்டு அம்மணிகள் வந்த சுவடு தெரியாமல் போய்விட்டார்கள். ஆனால், இளமை அழகோடு வந்திருக்கும் இந்த பூனம் நிச்சயம் மிகப் பெரிய ரவுண்ட் வருவார் என்கிறார்கள்.

# ...விடுக்கும் ...நடிகை

...தோளில் உர... நடிகர் சங்... தெளிவது தெரி... லை எடுக்கும்... குளிய அவ... நடிகரின் கண்... பார்க்கிறது.

...ரிஸண்டா... போட்டிருக்கே... சதை போடக்... கூட எவ்வளவு... நடிகை தனது கைக... இடுப்பை வருடிவிட... சொன்கிறார்.

...அசிஸ்டெண்ட் எப்பவேணா உள்ளே வந்திருவான்" ...ஞ்ச நேரம் உன்னோட அசிஸ்டெண்டை வெளியே இருக்...

...அவரின் எண்ணம் புரிகிறது. நடிகை இத்தனை நேரம் ...தையே காது, மூக்கு வைத்து பேசுவார்கள். இன்னும்

...டாம். நான் மூணு மணிக்கு ஷூட்டிங் முடித்து ...போ பார்க்கலாம்" என்கிறார் நடிகர்.

...தொடங்குகிறது.

...செட்டிலிருந்து நடிகரின் காரையே ...கிறார்.

...மூன்றரை, நான்காகிறது. நடிகர் காரை ...அவருடன் சேர்ந்து ஒரு ரவுண்ட் ...நடத்தலாம் என்றிருந்த நடிகை, சந்தேக ...விசாரித்தபோது, 'அவர் கம்பெனி காரில ...ட்டாரே' என்கிற தகவல் கிடைக்கிறது ...ளா? என்னைக்காவது உன்னை என் ...நாக் அவுட் பண்ணல... அப்போ ...ஓட மகிமை' என்று கருவிக் கொண்டே ...நடிகை.

...ரெஜசினை அரங்கேற்றியவர் தற்போது ...ளை ஏற்றும் அம்பிக நடிகை அவர் ...நடிகர் தற்போதைய இளம் முன் ...நாயகன்.

# ...ன் அடுத்த படம்

...றால் என்ன அர்த்தம் தெரியுமா? ...ஹாசனின் அடுத்த படம் ...விக்குமார் இயக்குகிறார். 'ஒரு ...கதை' என்று ஒற்றை வரியில் கதை சொல்லுகிறார்.

# பிரதியுஷா பிரச்சனை பண்ணக்கூடியவரா?

பாரதிராஜாவின் பார்வையில் பட்டவுடன் கனிக் ஆனார் பிரதியுஷா. விஜயவாடாதான் பிரதிக்கு சொந்த ஊர். சினிமாவில் நடிக்கும் ஆர்வத்தில் ஸ்டில்ஸ் எடுத்து மக்கள் தொடர்பாளர் நெல்லை சுந்தர்ராஜனிடம் கொடுக்க, அவர் பாரதிராஜாவிடம் நீட்ட ராஜாவும் ஓ.கே. சொல்ல 'கடல் பூக்கள்' படத்தில் அறிமுகமானார். படம் முடிந்து பல மாதங்கள் ஆகியும் திரைக்கு வராமல் பெட்டியிலேயே இருக்கிறது. தான் நடித்த முதல்படமே வராவிட்டாலும் அடுத்தடுத்து வாய்ப்புக்களை பெறுவதில் சளைக்கவில்லை.

பிரதியுஷா நடித்த 'மனுநீதி' ஓரளவுக்கு நல்லா ஓடியது. தற்போது 'பொன்னான நேரம்', 'காதல் நதியே', 'ஆனந்த ரோஜாக்கள்' என்று பெயர் மாற்றப் பட்டது. 'மானஸ்தன்', 'தவசி' என்று பல படங்களில் நடித்துவருகிறார். பிரதியுஷாவின் மேல் முரளிக்கு ஒரு கண் என்று சொல்லப்பட்டது. கூட நடிச்சவங்க, நடிக்கிறவங்ககூட நட்பா பழகுவதில் தவறில்லையே அதையே காதல் என்று கதைகட்டி விடுகிறார்கள் என்கிறார் பிரதியுஷா.

தயாரிப்பாளருடன் மோதல், இயக்குநருடன் சகமுசா என்றெல்லாம் பேச்சு. பிரதியுஷா ஒரு சண்டைக்காரி என்றெல்லாம் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். நான் அப்படிப்பட்ட பெண் அல்ல என்று சத்தியம் செய்து மறுக்கிறார் பிரதியுஷா.

# அழகான அம்மா ரெடி

கோடம்பாக்கத்துக்கு இன்னொரு அழகான அம்மா ரெடி. 'புதிய வாய்ப்புக்கள்' பட நாயகி ரதி அக்னிஹோத்ரியை நினைவிருக்கிறதா? அவர் பிரசாந்த் நடிக்கும் 'மஜ்னு' படத்தில் ரிங்கி கன்னாவுக்கு அம்மாவாகக் களம் புகுந்திருக்கிறார்.




ரியா சென்

## நானும் நீயும்

என்னுள்
உண்டான மாற்றங்கள்
உன்னுள்ளம்-நிகழ வேண்டும்
என்ற போது..
அது-நிகழ்ந்து விட்டதாய்
நீ சொன்னாய்...
என் உணர்வில் நீயும்
உன் உணர்வில் நானும்
கலக்க வேண்டும் என்றபோது
உன் உணர்வே நானென்றாய்...
என் உணர்வே நீயென்றாய்...
இத்தனையும் நிகழ்ந்த பின்னே..
நான் சிரிக்க
நீ அழுதாய்...
நான் அழ
நீ சிரித்தாய்...
நான் சாப்பிட
நீ பட்டினியிருந்தாய்...
நான் பட்டினியிருக்க
நீ சாப்பிட்டாய்...
அப்போதுகூட புரியவில்லை...
எனக்கு
உன்உணர்வுகள்
வேறு திசையிலென்று புரியவில்லை...
உன்னிடம் தோற்றுப் போனேன்...
உன்னிடம் தோற்றபின்னே
தாஜ்மகால் கட்ட,
நீ மும்தாஜுமல்ல
நான் சாஜஹானுமல்ல...
பைத்தியம் பிடித்து அலைய,
நீ லைலாவுமல்ல
நான் மஜ்னுவுமல்ல...
கல்லறையில் தலையுடைக்க,
நீ அனார்க்கலியுமல்ல
நான் சலீமுமல்ல....

**எஸ். நிமலன்-பட்டிருப்பு.**

## ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்

மானிடனே!
மதிமயங்காதே-நானும்
மனுசன் தான்
மாடமாளிகை எனக்கில்லை
மானம் மட்டும்
நிறையவே உண்டு.
வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லை
வாடகை வீடா...?
எனக்கெப்படி?-உன்
நிலத்தில் ஒரு குடிசை
ஓடும் வரை நான் வாழ
அது போதும் எனக்கு
ஆயுள் வரை நான் மறவேன்-உன்
இனம் தான் நானும்,
உணர்வு தனும் உனக்கில்லையா?
நடை பாதைமேல்
முட்களை அள்ளியள்ளி
நாள் தோறும் போடுகிறாயே!
நடந்த தடங்கள்
பதிந்து விடுமென்றா?-நாளை
நீ பாடையில் போகையிலே
நாலு பேர் உன்னைச் சுமப்பர்
நாடறிந்த நியதியது-ஆனால்
உன் நிலத்தைச் சுமக்க
எத்தனை பேரோ?
ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

**ராஜி தெய்வேந்திரன்-புளியங்குளம்.**

## தேன் கிண்ணம்

## முடமான முடிவுகள்!

பாலை நிலத்தில்
புதையுண்ட
விதை நான்...
வெப்பத்தின் வேதனையில்
முக்கித் தள்ளப்பட்ட
முளை நான்...
***
நடந்து வந்த பாதையிலே.
தடைகளும் தாமதங்களும்
என் கால்களுக்கு
விலங்கிட்டன!
***
கல்லும் முள்ளும்-என்
கால்களோடுதான்
காதல் கொள்ளும்;
கதைகளும் சொல்லும்;
காரணமும் கூறும்!
***
ஏழ்மை என்னை
ஏற்றுக் கொண்டதால்
தாழ்மையோடு
தோழமை கொண்டேன்!
***
திறமை தந்த
தைரியத்தில்...
வான வெளியில்
வலம் வர எண்ணினேன்;
ஒரு-வண்ணத்துப் பூச்சியாய்!
***
என் சிறகுக்குள்
சிக்கிக் கொண்ட
'சிக்கல்'களால்
முற்றத்திலேயே
முழு நாளும்
வலம் வருகிறேன்!
***

**பொத்துவில்-முகம்மத்.**

## கவிதைத் துங்கள்

அழகான,
ஒரு மழை நாளின்
ஒரேயொரு துளியின்
அசைவுகள் மட்டுமே,
கவிதையாகின்றன...
***
உயிரில் அசைவுறும்
உணர்ச்சி இறகுகளை
கற்பனைக் கமராவினால்
இதயம் பிடிக்கும்
புகைப்படமாய்
கவிதை....
***
கவிதை
உண்மைகளை
பொய்களால் மீண்டும்
உண்மையாக்கும் இயந்திரம்!
***
கவிதை
என் பேனா கொண்டு
காகிதத்தில் உறையவைக்கப்பட்ட
உன் புன்னகை!
***
இது,
விரலிடுக்கில் நடைபெறும்
நிழல் யுத்தம்!
***
கவிதைகள் பல...
கனவுப் பூகங்களின்
நிசப்த ஓலங்களாய்..
மலைமுகடுகளை
முத்தமிடத் துடிக்கும்,
கற்பனைப் பறவைகளாய்...
வானவில்லின் மேல்
உலரும்
வர்ண ஆடைகளாய்...
இன்னும் பல...!
***
விரும்பிச் சொன்ன
பொய்கள்!
***
இதயத்துள் பொதிந்த
நட்சத்திர நகல்!
***
பனிப்பாறையுள்
செருகப்பட்ட
சூரியச் சில்லுகள்!
***
கவிதை...
இது
ஒரு அக்கினியற்ற
யாகம்!!!

**ஏ. நிர்மலன்**
**பெர்னான்டோ-பேசாலை.**

## டயரி

ஆண்டுக்கொரு தடவை
ஆடை மாற்றிக் கொள்ளும்
அழகிய நண்பன்...
***
உரிமையுடன்-எமது
கரம் பற்றிக் கொள்ளும்
உண்மைத் தோழன்..
***
உள்ளத்து
உணர்வுகளை
தடம் பதிக்கும்
சரணாலயம்...
***
இல் வாழ்க்கையின்
இடர்-இன்பங்களின்
சொற் களஞ்சியம்...
***
இறந்தகால நிகழ்வுகளின்
மறையாத
அடையாளச் சின்னம்..
***
மரணத்தின் இருப்பிடம்
வரை-மானிடத்தின்
மனச்சாட்சியின் -து யிலிடம்...

**கை. ரமேஸ்-**
**பொத்துவில் நகர்.**

## வாழ்வு கிட்டுமா தையே!

தை தையென
தை எத்தனை வந்தாச்சு
மனிதர்வாழ்வு..?
தரணியில் உயர்ந்ததா!
***
வருசம் ஒருமுறை
வருவதும் போவதும்
பருவம் தவறாமல்
தையும் வந்திடும்!
***
யுத்தம் ஓய்ந்திடும்
இந்தத் தையுடன்
சத்தம் வேண்டாம்
சத்தியம் என்பார்!
***
பொங்கல் சுவையை
பொறுமையாய் சுவைத்து
எத்தனை தையாச்சு
ஏன் இந்த மோதல்!
***
அகதி முகாமில்
நொந்து சாகிறோம்
சொந்த இடத்தை
கனவிலும் காணோம்!
***
பசுமை பூத்த
அழகிய பூமி
பாசி படர்ந்த...
பரதேசி யாச்சே!
***
காடு அழிந்து
தேடுவாரற்று
பாழ் நிலமாச்சு
பைந்தமிழர் பூமி!
***
குளங்கள் வற்றி
குற்றுயிராக...
வளங்கள் யாவும்
வெறுமையாச்சு!
***
நீர்நிலை நிரம்பி
நீந்தி விளையாடி
ஊர்மண் பார்க்க
உதவிசெய் தையே!
***
சிதறி வாழும்
சொந்தம் பந்தம்
ஒன்று பட்டிட
வழி செய்தையே!
***
பட்ட துன்பம்...
மறந்தே போச்சு...
குட்டுப் பட்டதில்...?
தலையே குழப்பம்!
***
முட்டுப்பட்டு
வாழ்ந்தது போதும்
கிட்டுமா எமக்கு...
சமாதான வாழ்வு..?

**கயல் வண்ணன்-**
**வவுனியா.**

## சமாதிச் சத்தங்கள்


சுவாசக்காற்று
சுடுகின்ற தூரத்தில்
நெருக்கமாய் இருந்த
எம் நெஞ்சங்கள்
சந்தர்ப்ப வசத்தால்
பிரிய நேரிட்டது!
சங்கடந்தான்!
***
உன்னுதடுகளின்
ஊடுறுவல்களால்
உணர்ச்சிகளின் உச்சத்தில்
சந்தோஷித்திருந்த அந்த
சகஹாப்தங்கள்-என்
மூச்சுக் காற்றின்
முரண்பாடுகளால்
மூழ்கிப்போன தேனோ
உண்மைதான்...!
***
ஸகி...!
என்
உணர்வுகளுக்கும்
உள்ளத்து ரணங்களுக்கும்
வடி காலமைத்த-உன்
உருவப்படத்தை
சுரூபமாய் சாத்திக்கொண்டது
கழுத்துப்பட்டைகள் மட்டுமா
என்காதலும்தான்!
***
மரணம்
அணைத்துக் கொண்டாலும்
ஏன் மனம்
ஆவியாயுயிர்த்துக் கொள்ளும்
உன் மழலை
முகத்தையும்
முழாம்பழ அதரத்தையும்
முற்றுகையிட!

**து. பிரபாஹர்-**
**ஹப்புத்தளையூர்.**


## பேனா நண்பர்கள்



பெயர்: ம.வ.தினேஸ்குமார்,
வயது: 21
முகவரி:
ஹேயஸ் குரூப்
நம்பர்-26
உல்லிந்துவாவ.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்:
V.Ravichandrean
வயது: 22
முகவரி: Regal
Clour Palace
No:94 Perakumba
Street, Kurunegela.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எம்.பரீட்,
வயது: 19
முகவரி:
இல:37/7 முள்ளிப்
பொத்தானை
பொழுது போக்கு:
வழமையானவை.

### காதல்

கண்ணே!
என் அறிவுக்கு
தெரியும்
நீ எனக்கு எட்டாத
நிலவென்று..
ஆனால்
நீ வாழும்
என் இதயத்திற்கு
தெரியாது!
வெறும் கனவு
உன் காதலென்று..!

### புனிதம்

உன் பாதங்களிற்கு
மலராய் இருந்தேன்-
அன்று
அதனால்தான்
சருகாகியும் வாழ்கின்றேன்
இன்னும்..
ஈரமாய் கசியும்
உன் நினைவுகளின்
வேதனைகளுக்கு
காதலனாக
அந்த சீதையும்
என் காதலும் ஒன்று.
அதனால்தான்
என் இதயம் பூஜிக்கின்றதோ
உன்னை இன்னும்
புனிதமாய்...

### (அ)சோகவனம்

இராமனின் பிரிவால்..
சீதை அன்று
அசோகவனத்தில்
உன் பிரிவால்..
இவன்
அதே சோகவனத்தில்
இன்று-உன்னைப்பிரிந்த
இராமனாய்..

**எம். கவிதா-**
**வவுனியா.**



## நில் கவனி முன்னேறு

## சொற்களின் சிறப்பு.....

**நா**ம் சொல்லும் சொற்களின் திறன்களை அறிந்து அவற்றால் ஏற் படும் விளைவுகளை உணர்ந்து உரை யாட வேண்டும். ஒரு சிறு சொல் பெரிய தீய பலனை உண்டாக்கிவிடும். லிங்கனை பார்த்து ஒருவர் கோழை, பயந்தாங்கொள்ளி என்று கூறினார்.

உடனே லிங்கன். "நானா கோழை! என்னைக் கோழை என்று சொல்ப வர்கள் என்னுடன் உடற் சண்டை புரிய வரலாம். யார் இதற்கு தயார்?" என்று அறை கூவல் விடுத்தார்.

ஒரு நாட்டின் தளபதி பெர்னார்ட் ஷாவைச் சந்தித்தார். தாங்கள் புதிதாகப் பெற்ற சுதந்திரத்தைக் கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரையில் காப்பாற்றப் போவதாகக் கூறினார்.

உடனே பெர்னார்ட்ஷா, "கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் நிலைக்கு ஒருவருடைய உடல் நிலை வந்து விட்டால் அவர் இறந்து விடுவாரே! அப்புறம் எப்படி நாட்டைக் காப்பாற்ற முடியும்' என்று எதிர் கேள்வி கேட்டார். தளபதி யால் பதில் கூற முடியவில்லை.

மற்றவர்களைக் கவர்ந்து கொள்வ தற்கு நம்மிடையே இனிமையான சொல்லும் செயலும் அவசியம் இருக்க வேண்டும்.

சரியான நேரத்தில் தகுந்த சொற் களை கூறவோ அல்லது சரியான செயல்களைச் செய்யாமலோ இருந்தால் நாம் வியாபாரத்தில் வெற்றியை காண்பது கஷ்டமாக இருக்கும்.

இனிமை நிரம்பியசொற்கள் புரட்சிக் காரர்களின் மனதைக் கூட மாற்றி அமைத்துவிடும். பிரெஞ்சுப் புரட்சியின் போது மக்கள் கட்டுக் கடங்காமல் கலகம் செய்தனர்.

அவர்களைச் சுடுமாறு ஒரு தள பதிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர் மக்களைச் சுடவில்லை.

அதற்கு மாறாக அவர் கூட்டத்திற்கு முன் சென்று, "ஏழை எளியவர்களைச் சுடுமாறு எனக்கு ஆணை இடப்பட்டிருக் கிறது. அதனால் இங்குள்ள பெருமக்கள் அனைவரும் தயவு செய்து வீட்டிற்குப் போய் விடுங்கள்" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் தங்களை கனவானாக எண்ணிக் கொண்டு ஒருவர் பின் ஒரு வராக அமைதியுடன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

கனிவான வார்த்தை கலகத்தையே அடக்கிவிட்டது என்றால் அதனுடைய ஆற் றல் அளவு கடந்து அல்லவா இருக்கிறது.

அன்பின் அதிபதியாக விளங்கிய லிங்கனுக்கே ஒரே ஒரு சொல் எவ்வளவு பெரிய மாற்றத்தை உண்டாக்கி விட்டது என்று அறிந்து கொள்ள வேண்டும்.

முன்றாவது தடவையாக அமெரிக்க அதிபர் தேர்தலில் நிற்பதற்கு ரூஸ்வெல்ட் விரும்பவில்லை. ஆனால் வெண்டல்வில்கி சொன்ன சொல் ரூஸ்வெல்டையே முன் றாவது தடவையும் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கச் செய்தது. அவர் சொன்ன சொல் இதுதான்!

"உங்களுடைய தலைவரைப் போட்டி யிடச் சொல்லுங்கள்.நான் அவரைத் தோற்கடித்துக் காண்பிக்கிறேன்" என்று கூறினார்.

இவருடைய சொற்கள் மக்களின் உணர்ச்சியைத் தூண்டி விட்டன. துணிச் சலுடன் அறை கூவலை மக்கள் ஏற் றனர். ரூஸ்வெல்டையே முன்றாவது தடவையாகப் போட்டியிடச் செய்து வெற்றிமாலையை சூடச் செய்தனர்.

## இந்தவாரம் உங்கள் பலன்

**30.12.2001 தொடங்கி 05.01.2002வரை**

### கிரக நிலை

| | |
|---|---|
| **தனு** | - சூரியன், புதன், கேது. |
| **கும்பம்** | - செவ்வாய் |
| **இடபம்** | - சனி |
| **மிதுனம்** | - வியாழன், இராகு. |
| **விருட்சிகம்** | - வெள்ளி |

**சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.**

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) குடும்ப மகிழ்ச்சி. பெரியோர் உதவி. தொழில் சிறப்புண்டு. பொருள்வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரி களினால் பாராட்டப்படுவர். மாணவர்கள், எதிர்பார்த்த கல்வி சிறப்புறும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை) முயற்சிகளில் வெற்றியுண்டு. பொருள் வரவு மந்த நிலையடையும். காரியங் களில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். உத்தி யோகஸ்தர்கள் சிறு பிரச்சனைகளுக்கு ஆளாகு வர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும் விவசாயிகள், வியாபாரிகள் இலாப மடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்,) மனக்கலக்கம், குடும் பத்தில் துக்க நிகழ்வு, பெரியோர் பகை என்பவற்றுக்கு இடமுண்டு. உத்தி யோகத்தில் உள்ளோர் திடீர் இடமாற்றத்தை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் மாற்ற ம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கர்க்கடகம்:**
புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் புதிய முயற்சிகளில் வெற்றியுண்டு. பொருளாதாரம் சிறந்து விளங்கும். பெரியோர் உதவி யுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் திட்டமிட்டு கருமமாற்றுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்
அதிஷ்ட இலக்கம்: 03.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற் கால்) கருமங்களில் வெற்றியும் பொருள்வரவும் ஏற்படும். வெளியிட பிரயாணங்களில் கவனமுடன் நடந்து கொள்ள வும் உத்தியோகத்தில் மேலதிகாரிகளினால் தொல்லைகள் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலை மறை யும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரை யின் முன்னரை) தொழில் கஷ்டங்கள் தீரும். திடீர் செலவுகளுக்கு இடமளிக்கும். பெரியோர் களின் உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் பதவிகளில் கவனமுடன் நடந்து தொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி யுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்,) குடும் பத்தில் மகிழ்ச்சியும், முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். பொருளா தாரம் சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் தமது மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டி ருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியா பாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால் அனுஷம், கேட்டை,) தொழிலில் சிறு தடையுண்டாகும். பொருள்வரவு சிறிது பாதிப்படையும். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் மறைமுக எதிர்ப்புகளுக்கு ஆளாகுவர். மாண வர்களுக்கு கல்வி ஏற்றம் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) கருமங்களில் வெற்றி யுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். பொருள்வரவு திருப்தி தரும். உத்தியோகஸ்தர்கள் நன்மையடைவர். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி தரும். விவசாயி கள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்னரை, திரு வோணம், அவிட்டத்து முன்னரை,) தொழில் நிலையில் முன்னேற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி, பெரியோர் உதவியுண்டு. உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த நன்மைகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரி கள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 02.


**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) எடுத்த கருமங்களில் வெற்றியுண்டு. பொருள் வரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் வார இறுதியில் துக்க நிகழ்ச்சியொன்று நடந் தேறும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரி களின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 07.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட் டாதி ரேவதி,) குடும்பத்தில், சிறிது பிரச்சனைகள் தோன்றும். பொருள்வரவு மந்த மடையும். செலவுகள் அதிகரிக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கால் அழகைப் பராமரிக்க...



ஒருவரது கால்களைப் பார்த்தே அவர் எப்படிப்பட்டவர் என்பதைச் சுலபத்தில் சொல்லிவிட முடியும். எளிதில் எடைப்போட்டு விடவும் முடியும் என்று சொல்லப்படுவதுண்டு. கால்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாதவர்கள் நிச்சயம் சோம்பேறித்தனத்திற்கு நெருங்கிய உறவினராகத்தான் இருக்க முடியும். நம் நாட்டுப் பெண்கள் புடவைகள் அணிவதால் அவர்களது கால்கள் அதிகம் வெளியே தெரிவதில்லை. யார் பார்க்கப் போகிறார்கள் என்று அதனாலேயே அலட்சியமாக இருந்து விடக்கூடும். கால்களுக்கு ஏற்ற வகையில் அதிக அழுக்கு சேருவதற்கு இடம் தராத வகையில் உள்ள காலணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முதலில் வாயகன்ற பேசினில் சூடான சோப்புத் தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் சில துளி எண்ணெய் விட்டுக் கொள்ள வேண்டும். உங்கள் கால்களை அந்தத் தண்ணீரில் பதிய வைத்து சிறிது நேரம் ஊற வையுங்கள். முடிந்தால் அதில் சிறிதளவு ஹைட்ரஜன் பெராக்சைட்டு திரவத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சிறிது நேரம் கால்களை நன்றாக ஊறிய பிறகு, கால்களை வெளியே எடுத்து உலர்ந்த துணியால் துடைத்துவிட வேண்டும். இதற்குப் பிறகு ஒரு நல்ல பியூமிக் கல்லை எடுத்து உள்ளங்கால்களையும், குதிக்கால்களையும் 5 நிமிடங்களுக்கு ஒத்தடம் அதாவது மசாஜ் செய்து கொள்ள வேண்டும். இவை இரண்டும் முடிந்த பிறகு ஒரு ஆரஞ்ச் குச்சி எடுத்துக் கொண்டு அதைக் கொண்டு நகங்களின் கீழ் உள்ள தோலை முடிந்த அளவு பின்னுக்கு இழுத்துப் பிடித்துக் கொண்டு நகங்களை தேய்த்து விட வேண்டும். இன்னும் சுத்தமாக நகங்களின் முனை அமைய வேண்டுமென்றால் உப்புத்தாள்களை கொண்டு தேய்த்து விட்டுக் கொள்ள வேண்டும். கால்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் குதிகால்களையும், உள்ளங்கால்களையும் எண்ணெயாலோ, கிரீமினாலோ மெதுவாக ஒத்தடம் செய்து கொள்வது அவசியம். இப்படி ஒத்தடம் செய்து கொண்ட பிறகு அதிகமான எண்ணெயை துடைத்துவிட வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் கால்களுக்கு பாலீஷ் போட்டுக் கொள்ளலாம். வேலைக்குச் செல்லும் பெண்களில் ஓடியாடி பணிபுரிய வேண்டிய அவசியம் உள்ளவர்கள் அடிக்கடி கால்களுக்கு எண்ணெய் தேய்த்து ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் குதிகால்களில் வெடிப்புகள் ஏற்பட்டுவிடும். ஏற்கனவே இம்மாதிரி வெடிப்பு உள்ளவர்கள் சமமான மேற்பரப்புக் கொண்ட காலணிகளை அணியாமல் இருப்பது நல்லது.

## உபயோகமான குறிப்புகள்

⋆ குண்டாக இருப்பவர்கள் காலை டிபனுக்கு பதிலாக வெறும் வயிற்றில் இரண்டு பழுத்த தக்காளிகளை தொடர்ந்து ஒரு மாதம் சாப்பிட்டால் உடல் இளைக்கும்.

⋆ தக்காளி ஜூஸில் மிளகும், உப்பும் கலந்து சாப்பிட்டால் வாயுத்தொல்லை, மலச்சிக்கல், ஜீரணமின்மை, மஞ்சள் காமாலை குணமாகும். தக்காளி ஜூஸில் தேனும், ஏலக்காயும் கலந்து சாப்பிட்டால் காசநோய், ஆஸ்த்துமா குணமாகும்.

⋆ வாய் நாற்றமுள்ளவர்கள் சிறிது கொத்தமல்லி தழையை தினமும் மென்றால் வாய்மணக்கும். கொத்த மல்லி சாற்றில் கற்பூரத்தை கலந்து தடவ தலை வலி போயே போச்சு!

⋆ சுண்ணாம்பு தாளித்த நீரில் முட்டையை அமிழ்த்தி வைத்தால் நாள்பட கெடாமலிருக்கும்.

⋆ கோழி முட்டையின் வெள்ளைக் கருவை தண்ணீரில் கரைத்து வேக வைத்தால் கெட்டியாகும். அதை விஷம் குடித்தவர்களுக்கு கொடுத்தால் முறிந்துவிடும்.

⋆ பக்கவாதம் அடித்தவர்களுக்கு முயல் ரத்தத்தை தொடர்ந்து தடவலாம். முயல் இறைச்சியும் பக்கவாதத்தை குணப்படுத்தும்.

⋆ தொடர்ந்து மான் தோல் ஆசனத்தில் அமர்ந்தால் மூல நோய் வராது. உடல் உஷ்ணமும் சமநிலைபடும்.

⋆ கஸ்தூரி மணத்தால் ஆபத்தும் உண்டு. காட்டில் வேட்டையாடுபவர்கள், அதன் மணத்தால் பாதிக்கப்பட்டு நரம்பு தளர்ச்சி வருவதுண்டு. சிலருக்கு காது கேட்காமலும் போவதுண்டு.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KQ

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-01-2002**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கெக்கிராவ வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ ஆர். லெட்சுமி, யகல்ல வீதி, 2ம் ஒழுங்கை, கெக்கிராவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# அனிதாவின் காதல்கள் 25

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"பாத்தீங்களா... கடிக்கவே கடிக்காது. ரேபிஸ் இன்ஜெக்ஷன் எல்லாம் போட்டாச்சு. பாதுகாப்பாத்தான் இருக்கு. அண்ணாமலை, யாரு நாயை அவத்து விட்டது?"- கேட்டாள் வைரவனின் அம்மா.

"தேவராஜுங்க..."

"அவனை உடனே என்னை வந்து பார்க்கச் சொல்லு..."

கமலம் வண்டியில் ஏறிக்கொண்டிருக்கிற போது, மகாதேவன் "என்ன, வலிக்கிறதோ ரொம்ப?" என்று விசாரித்தார்.

அனிதா, "என்னம்மா... ரொம்ப வலிக்கிறதா?" என்றாள்.

"ஏம்மா அனிதா... உன் புருஷன்கிட்ட சொல்லி, வேத்து மனுஷா் வந்தா நாயைக் கட்டிப் போட்டு வச்சுக்க சொல்லு! இனிமே நான் இந்த வீட்டுப் பக்கம் வரமாட்டேம்மா. சகுனமே சரியாயில்ல..." என்றாள் கமலம்.

"ஏம்மா அப்படிச் சொல்றே?" என்ற அனிதாவின் கண்களில் நீர் நிரம்பியது.

வைரவனின் தாய் அவளைச் சமாதானப் படுத்த, 'ஒண்ணுமில்லை... லேசா பல் பட்டிருக்கு... கவலைப்படாதீங்க இதுக்கெல்லாம்..." என்று சொல்லிச் சிரித்தாள்.

அவர்கள் இதை அவ்வளவு லைட்டாக எடுத்துக் கொள்வது அனிதாவுக்கு உறுத்தியது.

"பக்கத்திலேயே ஆஸ்பிட்டல் இருக்கு.. எங்க ட்ரஸ்டைச் சேர்ந்த ஆஸ்பத்திரிதான்! உடனே கவனிச்சுருவாங்க. அனிதா எதுக்கு இதுக்குப் போய் கண்ணீர்? பெண்ணே.. தப்பு நடந்து போச்சு மன்னிச்சுக்குங்கம்மா... கமலம்தானே உங்க பேரு? மன்னிச்சுக்குங்க... உடனே இந்த ஆளை- நீங்க இருக்கறப்ப நாயைக் கட்டிப்போடாத இந்த ஆளை-வேலையை விட்டு நீக்கிரலாம்..."

"எப்படிம்மா இந்த மாதிரி ஆச்சு?"- அனிதா கேட்க,

"நீ ஹனிமூனுக்கு ஒட்டலுக்குப் போயிட்டியா? சம்பந்தி விருந்துன்னு ஒரு சம்பிரதாயம் இருக்கு பாரு... அதுக்காக இங்கு விசாரிக்கிறதுக்கு வந்திருந்தோம்! அவா, 'இங்கே ஒரு வாரம் தங்கிடுங்கோ- அவட்ஹவுஸ் காலியாத்தானே இருக்கு'ன்னு வருந்தி வருந்திச் சொன்னாளேன்னு, ஒரு நாள் இருக்கலாம்னு தோணித்து. வசதியாத்தான் இருந்தது. தோட்டமும் துரவுமா இருக்கேன்னு கார்த்தால சித்த காலாற நடக்கக் கிளம்பினேன் பாரு.. அப்படியே ராட்சஸன் மாதிரி இந்த நாய் உறுமிண்டு வந்து கொத்தா ஆடு சதையைக் கவ்விடுத்து..."-சொன்னாள் கமலம்.

வைரவனின் அம்மா சிரித்தாள். "உங்களுக்கு வேணா சிரிப்பா இருக்கலாம் சம்பந்தியம்மா! எனக்குச் சப்தநாடியும் ஒடுங்கிப் போயிடுச்சு. உங்க பேர் என்ன?" என்று கமலம் கேட்க.

"சரோஜா..." என்றாள், வைரவனின் அம்மா.

"நான் அப்படியே நம்ம வீட்டுக்குப் போயிடறேன்மா அனிதா... மாப்பிள்ளையையும் அழைச்சிண்டு வா... இந்த இடம் எனக்குச் சரிபட்டு வராது..."-கமலம் சொல்ல,

"என்னம்மா சின்ன நாய்க்கடிக்கா இப்படிப்பயப்படறீங்க? உங்களுக்குன்னு வீடே தயார் பண்ணி வெச்சிருக்கோம்..." என்றாள் சரோஜா.

"இல்லேம்மா... பழக்கமில்லை-இந்தச் சுற்றுப்புறமெல்லாம்!" என்று கமலம் கோபமின்றித்தான் சொன்னாள். இருந்தும் குரலில் விரக்தியும் ஏமாற்றமும் இருந்தது.

மகாதேவன் "அப்பறம் பார்க்கலாம்மா..." என்று அனிதாவிடம் சொல்லப்போனபோது, அருகிலேயே மற்றொரு கார் வந்து நிற்க... சரோஜா அதில் ஏறிக் கொண்டு, "அனிதா... நான் உன்னை மத்தியானம் சந்திக்கிறேன்மா... ரூமைப்பார்த்துக்க முதல்ல... எனக்கு ஒரு மீட்டிங் இருக்குது..." என்று சொல்லி விட்டு பறப்பட்டுச் சென்றாள்.

தோட்டத்தில் அனிதா தனிமையாக நின்று கொண்டிருக்க, அந்த நாய் வாலை ஆட்டிக்கொண்டு அவளை முகர்ந்து பார்த்தது.

அதை அண்ணாமலை கட்டிப் பிடித்து, "எப்டிரா கடிச்சே?" என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

அந்த மிகப் பெரிய வீட்டில் நிசப்தமாக இருந்தது. ஒரு வேலைக்காரப் பெண் வந்து, "உங்க ரூம் மாடியில் இருக்குதும்மா..." என்று சொன்னாள்.

தேக்கு மர மாடிப்படிகளில் பாலீஷ் மினியது. தலைப்பாகையும் நீண்ட கோட்டும் கடிகாரச் சங்கிலியுமாக ஒரு தாத்தா ஏறக்குறைய மாடிப்படி உயரத்துக்குப் படமாக நின்றார்.

அறையில் 'வெல்கம் டு அனிதா' என்று கண்ணாடியில் எழுதியிருந்தது. ட்ரஸ்ஸிங் டேபிள் அருகில் மேல் நாட்டு அழகு சாதனங்கள் காத்திருந்தன. பாத்ரூம் இணைப்பு இருந்தது. சுத்தமாக டைல்ஸ் போட்டு, துவாலைத் துண்டும் பிளாஸ்டிக் கர்ட்டன்களுமாக நவநாகரிகமான பாத்ரூம்!

அலமாரியில் புத்தகங்கள்... ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எல்லாப் பத்திரிகைகளும் இருந்தன. டெலிபோன் இருந்தது. டி.வி. இருந்தது. அதன் ரிமோட் கண்ட்ரோல் பிளாஸ்டிக் உறையில் இருந்தது. எல்லாமே பத்து நிமிஷம் முன்தான் வாங்கினது போல் புத்தம் புதுசு!

அனிதா படுக்கையில் உட்கார்ந்தாள். மெத்தென்று எதிர்த்தது. எதிரே 'ப்ளோ-அப்' செய்து மாட்டப்பட்டிருந்த படத்தில் அனிதாவே காட்சியளித்துக் கொண்டிருந்தாள்.

அறைக்குள் நுழைந்த வேலைக்காரப் பெண், "ஏதாவது வேணுங்களாம்மா? என் பேரு வேணி. உங்களுக்கே எப்பவும் சேவகம் பண்ண வெச்சிருக்காங்க... பெல் பண்ணா வருவேன்..." என்றாள். வேணிக்கு பதினைந்து வயசு இருக்கலாம். "ராத்திரி அன்பக்கரசி வருவாங்க... அப்புறம் ரேணுகா..." என்றாள்.

"யாரும்வேண்டாம்போ..."என்று அவளை அனுப்பி விட்டு போனை எடுத்து வீட்டு நம்பரைச் சுழற்றினாள். ஜிம்புதான் பேசினான்.

"ஜிம்பு... அம்மாவுக்கு எப்படி இருக்கு?"

"ஒண்ணுமில்லை... ஒரு டெட்டானஸ் இன்ஜெக்ஷன் மட்டும் போட்டு அனுப்பிச் சுட்டா, அம்மாவோட பேசறியா?"

"குடு..." என்றாள் அனிதா.

கொஞ்ச நேரம் ஆனபின் ஜிம்புவே லைனில் வந்து, "அம்மா... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துண்டிருக்கா... அப்புறம் பேசறேன்னா..." என்றான். அனிதா போனை வைத்த மறுநொடி போன் மீண்டும்அடித்தது.

"டார்லிங் அனிதா... எத்தனை நேரமா போன் பண்றேன் தெரியுமா? யார் கூடப் பேசிட்டிருந்தே?"- வைரவன் குரல்.

"அம்மாவை நாய் கடிச்சிடுச்சு..." என்றாள் அனிதா.

"என்னது.. எங்க?" வைரவன் கேட்க,

"உங்க வீட்டுலதான்.." என்றாள்.

"நம்ம வீட்டுலன்னு சொல்லு... யார் அப்படி அஜாக்கிரதையா இருந்தது? நான் இதை முதல்ல கவனிச்சுக்கறேன். உங்கம்மா இப்ப அங்க இருக்காங்களா?"

"பயந்துண்டு வீட்டுக்குப் போயிட்டா..."

"அப்படியா... ஆபீஸ்லருந்து வர்றப்ப விசாரிக்கிறேன்! சரி... சாயங்காலம் கிம்கானாவில் பார்ட்டி இருக்குது. ஆறு மணிக்கு ரெடியா இரு... வந்துர்றேன், ரூம் படிச்சிருக்கா?"

"ம்..."

"அப்பா வீட்டுலதான் இருப்பாங்க. ஒரு முறை அவரைப் பார்த்துரு. இல்லேன்னா, லஞ்ச்சுக்கு அவர் கூடச் சேர்ந்துரு... சந்தோஷப்படுவார்...." என்றான்

"சரி..."

"எது வேணும்னாலும் கேளு... வேலைக்காரங்க இருக்காங்க. சீக்கிரம் பார்ட்டியை முடிச்சுட்டு நேத்திக்குச் சமாசாரத்தைத் தொடரலாம்."

"சரி..."

போனை வைத்ததும் அந்த இடத்தின் அமைதியைக் கவனித்தாள். எப்போதாவது ஒரு மத்தியானப் பறவையின் குரல் கேட்கிறது. ஒரு தனிமையான அணில்... ட்ராபிக் சத்தங்கள்... நெட்டிலிங்க மரங்கள்... மழுப்பின டி.வி.யை இயக்கிப் பார்த்தாள். எல்லா சானல்களிலும் நிகழ்ச்சிகள் இருந்தன. பி.பி.ஸி., ஸ்டார், எம்.டி.வி., ஸி என்... மேலும் ஒரு சானலில் தமிழ்ப்படம் ஒன்று ஒடிக்கொண்டிருந்தது.

'ஒரு காலத்தில் அப்பாவிடமும் அம்மாவிடமும் பர்மிஷன் வாங்கிக் கொண்டு அரை மணி அனுமதிக்கப் பட்டு 'ஒலியும் ஒளியும்'- அதுவும் 'கறுப்பு-வெள்ளை' டி.வி.யில்- பார்ப்பதற்குப் பக்கத்து வீட்டுக்குப் போக எத்தனை கெடுபிடிகள்?! அப்படி வளர்ந்தவர்கள் எப்படி இந்தக் கல்யாணத்துக்கு அத்தனை சுலபமாகச் சம்மதித்தார்கள்?'

ஃபோன் வேறுவிதமாக ஒலித்த போது இன்டர்காம் ஒன்று இருப்பதைக் கவனித்தாள் அனிதா. தயக்கத்துடன்-அதை எடுத்துக் கேட்க...

"அனிதா நான் லட்சுமணன் பேசறேன்..." வைரவன் அப்பா!

"எப்ப வந்த நீ?"

"இப்பத்தான்..."-அனிதா சொன்னாள்,

"என்கூட சாப்பிட வர்றியா? காத்திருக்கவா?" லட்சுமணன் கேட்க,

"எனக்கு இப்பப் பசியில்லை... நான் வேணா வந்து உங்களுக்கு ஸர்வ் பண்ணட்டுமா?" என்றாள் அனிதா.

"சேச்சே... எங்க வீட்டு மருமக அதையெல்லாம் செய்ய வேண்டாம். ஏகப்பட்ட வேலைக்காரங்க இருக்காங்க... தண்டச் சோத்து தடிராமனுங்க! பரவாயில்லை... மற்றொரு முறை பார்க்கலாம். நான்கூட இப்ப அவசரத்தில் இருக்கேன் வெல் கம்டு யூ... எப்பவாவது உன்கிட்ட பேசணும். இந்த வீட்டைப் பற்றி... அதில் உள்ள சனங்களைப் பற்றி நீ தெரிஞ்சுக்க வேண்டியது அவசியம்! அதுக்காக, ஆறு மணிக்கு நீ வந்தா..."

"அறு மணிக்கு இவர் ஏதோ பார்ட்டின்னு சொன்னார்..."

"அப்ப காலையில சந்திக்கலாம்... நாளைக்கு பிரேக் ஃபாஸ்ட்ல சந்திக்கலாம்... என்ன?"

"சரிங்க..."

[அனிதா வருவாள்...]



## பாப்பா முரசு சிறுகதை

# தண்ணீரில் மூழ்கிய சூரியன்!

மணிபல்லவ காட்டில் கிளி, நாய், பூனை, சேவல் முதலிய நான்கும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.


ஒரு நாள் மின்னி கிளி மரத்தில் அமர்ந்தபடி மேகத்தில் மறைந்து கொண்டிருக்கும் சூரியனின் பிரதிபலிப்பு பிம்பத்தை அருகில் உள்ள குளத்தில் பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென அது ' ஐயோ, சூரியன் தண்ணீரில் முழ்குதே!' என்று நினைத்தது. உடனே அது பூனை அக்காவையும் நாய் மாமாவையும் சேவல் அண்ணாவையும் அழைத்தது. உடனே அவை மூன்றும் விரைந்து வந்தன.




"என்ன மின்னி, என்னாச்சு? என்று பூனை அக்கா கேட்டது. அதற்கு மின்னி "அக்கா! உனக்குத் தெரியுமா? சூரியன் இந்தக் குளத்துக்குள் மூழ்கிடுச்சு! நிஜமா என் கண்ணாலே பார்த்தேன்!" என்றது. அதைக் கேட்டுப் பக்கத்தில் நின்ற சேவல், "அப்பாடி! தங்கச்சி, இப்போதுதான் நிம்மதி. இனிமேல் காலையில் எழுந்து கூவுகிற வேலை எனக்குக் கிடையாது..." என்றது.

பூனையும் "எனக்கும் ஜாலி! எப்போதும் இருட்டு! உணவு தேடிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம்!" என்று மகிழ்ச்சியாகக் கூறியது. ஆனால், நாய் மட்டும் எதுவும் சொல்லாமல் சோகமாக இருந்தது. "மாமா! ஏன் இப்படி இருக்கிறீர்கள், உங்களுக்கு என்ன ஆச்சு?" என்று பூனை கேட்டது. அதற்கு நாய், "நான் இரவெல்லாம் காவல் காத்துட்டுப் பகலில்தானே உணவு தேடணும்? பகலே வராதே... எப்படி உணவு தேடுவது?" என்று சோகத்துடன் கூறியது. "சபாஷ்! இனி என் பாடு கொண்டாட்டம்! நாய் மாமாவின் பாடு திண்டாட்டம் லாலா.. லா... லாலா... லா!" என்று பூனை மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டு சென்றது.

மறுநாள் காலையில் வழக்கம்போல் சூரியன் உதித்தது. பூனையும் சேவலும் திகைத்தன. நாய், "என்ன கிளிப்பேச்சை நம்பி முட்டாளானீங்களா? ஹா..ஹா... லாலா... லா... லாலா...லா!" என்று பாடியது. பூனையால் இதைத் தாங்க முடியவில்லை. அதற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பூனையும் சேவலும் கிளியை விரட்டிக் கொண்டு சென்றன. கிளி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள நாயிடம் சென்றது. அது, "மாமா... மாமா! என்னைக் காப்பாற்றுங்கள். என்னைக் கொல்ல பூனை அக்கா விரட்டிக் கொண்டு வருகிறாள்..." என்று நாயிடம் கூறியது. உடனே நாய், பூனையிடம் "நீ ஏன் மின்னியை விரட்டுகிறாய்? அவள் என்ன சொன்னாள்? பாவம்... தெரியாமல், சூரியன் தண்ணீரில் முழ்கியதாகக் கூறினாள். நீயும் அதை நம்பினாய், இப்போது விரட்டுகிறாய்! உன்னிடம் யார் அளவுக்குமேல் ஆசைப்படச் சொன்னது? இனிமேலாவது, உள்ளதை வைத்து வாழப் பார்..." என்று சொன்னது.






## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **05.01.2002**.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 427**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 425

**பரிசுக்குரியவர்:**
எம்.எஸ். ரமீஷா,
பது/தமிழ் மகா வித்தியாலயம்(தேசிய பாடசாலை), பசறை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே.யோகராஜ் தர்ஷிகா, சென். மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | கே.சகானா, பெல்பாஸ்ட் சர்வதேச பாடசாலை, திருகோணமலை. |
| அ.யோகதாஸ், செல்வநாயக புர மகா வித்தியாலயம், திருமலை. | ஜெ.யதுர்ஷன், கதிரான பாம், மட்டக்குளி. |
| ந. வடிவுக்கரசி, ஹோல்புறூக் த.ம.வி. அக்கரப்பத்தனை. | செல்வி கெ. துஷாரிகா, ஆங்கில மொழி அகடமி, மாத்தளை. |
| டெரன்ஸ் ஸ்பென்சர், றோ.க.த. பாடசாலை, இராஜகிரிய. | ஜி. இந்துஜா, நல்லாயன் பெண்கள் பாடசாலை, கொழும்பு-13. |
| எம்.ஐ.எம். இப்றாஹிம், பொ/அல்-அக்ஷா முஸ்லிம் ம.வித்., திவுளான. | தெய்வேந்திரன் தட்ஷாயினி, பதுக்குளம் ம.வி. சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா. |

## விடுகதைகள்

1. வானத்தில் பறக்கும் வாலுள்ள பறவைக்கு பூமியில் இருந்தே கால் அவன் யார்? (பட்டம்)
2. காலில்லாதவன் போட்ட சட்டை கழற்றிப் போட்டச் சட்டை அது என்ன? (பாம்புச் சட்டை)
3. ஏழு வண்ண சீமாட்டி கொஞ்ச நேரம் காட்சி தந்தாலே அதிசயம் அவள் யார்? (வானவில்)
4. தண்ணீருக்குள் சிறப்பு, தரையிலோ தவிப்பு அவன் யார்? (முதலை)
5. உதைத்தால் உருண்டபடி உருப்படியான பயணம் அவர் யார்? (ஸ்கூட்டர்)
6. வெளிச்சத்தை வீசியெறிந்தவன் ஒருவன். அண்டா குண்டாவை எடுத்தெறிந்தான் மற்றவன் அவன் யார்? (மின்னல், இடி)
7. ஒலி கொடுத்து பேச வைப்பான் அவன் யார்? (டெலிபோன்)
8. வால் பையன் இவன், வாலை சுழற்றி அடித்தால் அடிபட்டவன் அலறுவான். அவன் யார்? (தேள்)
9. இவன் முனகினால் கூட அவன் கத்துவான் அவன் யார்? (எதிரொலி)
10. மகளிர் கைக்குள் அடங்கி இருப்பான் கலர் கலராய் அலங்கரிப்பான் அவன் யார்? (வளையல்)
11. உயிரில்லாத பறவை ஊர் ஊராய் பறக்கிறது அது என்ன? (காற்று)
12. உசந்த மரமிருக்கு, பொட்டுப் போல இலை இருக்கு அது என்ன? (முருங்கை)
13. பிறந்ததிலேர்ந்து வயிற்றாலேயே போகும் குழந்தை அது என்ன? (பாம்பு)
14. சாமி கும்பிடப் போகும் போது எந்தக் காலை முன் வைத்துக் கும்பிடனும்? (தீபக் கால்)
15. வீட்டுக்கு வந்த விருந்தாளியை 'வா' என்று கேட்க ஆளில்லை அது என்ன? (செருப்பு)
16.. உனக்குப் பாதி: எனக்குப் பாதி நீ கறுப்பு, நான் வெள்ளை, அது என்ன? (பகல், இரவு)
17. குச்சி போல் இருப்பான், கூடாரத்தைப் பற்றவைப்பான் அவன் யார்? (தீக்குச்சி)
18. ஆளிலிருந்து அடிக்காமல், தட்டாமல் கொட்டாமல் ஒரு மேளம், அது என்ன? (இடி)
19. பொழுது போனால் பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம். அது என்ன? (நட்சத்திரம்)
20. யானை படுக்க நிழலுண்டு. கடுகு முடிக்க இலை இல்லை. அது என்ன? (சவுக்குமரம்)

## உங்களுக்குத் தெரியுமா?

நீருக்கடியில் எவ்வளவு ஆழத்தில் எந்த இடத்தில் மீன்கள் நிறைய உள்ளன என்பதை அறிய உதவும் கருவியின் பெயர் "அகோமீட்டராகும்."

கடிகாரத்தில் நிமிடமுள் 1671ம் ஆண்டுதான் பொருத்தப்பட்டது. அதற்கு முன்பு ஒரே ஒரு முள் உள்ள கடிகாரம்தான் இருந்தது.

வடதுருவத்தில் ஆண்டில் ஒரு தடவைதான் சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் பார்க்க முடியும். சூரிய உதயம் மார்ச் 21ம் தேதியிலும், அஸ்தமனம் செப்டம்பர் 21ம் தேதியிலும் ஏற்படுகிறது.

கடிதங்களைப் புறாக்களின் கால்களில் கட்டி அனுப்பும் முறை விஞ்ஞானிகளை ஒரு காலத்தில் ஆச்சரியப்பட வைத்தது. பூமியின் காந்த சக்தி, ஒளி பரவியுள்ள விதம் ஆகியவற்றோடு வெகு தூரத்திலிருந்து மணத்தை நகரும் சக்தி ஆகியவற்றின் உதவியோடுதான் புறாக்கள் எவ்வளவு தூரம் பறந்தாலும் கிளம்பிய இடத்திற்கே வந்து சேருகின்றன என்று கண்டறியப்பட்டது.


மின்னலால் பாதிக்கப்படுவது நம் கண்களைக் காட்டிலும், கேட்கும் சக்திதான் பாதிக்கப்டுகிறது. அதிகமாக வயிறு புடைக்க சாப்பிட்டு விட்டால் காதுகள் மந்தமாகி விடும்.

தாமஸ் ஆடம்ஸ் என்பவர் ரப்பரிலிருந்து கிடைக்கும் "சிக்கிலை" எப்படி உபயோகப்படுத்துவது என ஆராய்ச்சி செய்தார்; ஒருநாள் கொஞ்சம் சிக்கிலை வாயில் போட்டு மென்றார், திடீரென அவருக்கு ஓர் ஐடியா தோன்றியது. இதை மக்களிடம் விற்பனை செய்தால் என்ன? "சூயிங்கம்" என்ற பெயரில் விற்பனை செய்தார்.

நல்ல ஆரோக்கியமான உடல் அமைப்பு கொண்ட ஒருவரின் தலையில் இலட்சத்துக்கும் குறையாத தலைமுடிகள் இருக்கும். இவரின் தலை முடி தினமும் 0.35 மில்லிமீட்டர் என்ற கணக்கில் வளரும். தலை முடி வேகமாக வளருவது பதினைந்திற்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதில் தான்.

இப்போது மனநோயாளிக்கு மின்சாரத்தின் மூலம் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கின்றார்கள். பண்டைய கிரேக்க நாட்டின் எபிடோஸ் நகரத்தின் பாம்பு இல்லத்தில் ஆயிரக்கணக்கான பாம்புகளுக்கிடையே, மனநோயாளிகளை கொண்டு வந்து நிறுத்தினார்கள். மனநோயாளிகள் ஆயிரக்கணக்கான பாம்புகளை ஒரே சமயத்தில் பார்த்ததும் பயத்தில் அதிர்ச்சியடைந்து தன் பழைய நிலைக்குத் திரும்பினார்கள். இப்படி நூற்றுக்கு 90 பைத்தியங்களை கிரேக்க வைத்தியர்கள் குணப்படுத்தி வந்தார்கள்.

## 'ஒலிம்பிக்கில் முதன் முதலாக!'




- ஆண்ட்வெர்ப் ஒலிம்பிக்கில் (1920) வீரர், வீராங்கனைகள் உறுதி மொழி எடுக்கும் பழக்கம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. முதன் முதலாக ஒலிம்பிக் உறுதிமொழி எடுத்தவர் கத்திச் சண்டை வீரர் விக்டர் போயின்.
- ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக்கில் (1928) முதன் முதலாக தடகள போட்டியில் பெண்கள் பங்கேற்றனர். முதல் தடகள வீராங்கனை அமெரிக்காவின் எலிசபெத் ராபின்சன்.
- மெக்சிகோவில் (1988) நடைபெற்ற ஒலிம்பிக்கில் தான் முதன் முதலாக டேபிள் டென்னிஸ் இடம் பெற்றது.
- லாஸ் ஏன்ஜெல்சில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் (1932) தான் புகைப்படம் மூலம் தடகள போட்டிகளில் முதன் முதலாவதாக வருபவரை தீர்மானித்தனர்.
- லண்டனில் (1948) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தான் முதன் முதலாக கம்யூனிஸ்ட் நாடுகள் கலந்து கொண்டன.
- முனிச் நகரில் (1972) நடைபெற்ற ஒலிம்பிக்கில் தான் முதன் முதலாக மழையின் ஆதிக்கத்தால் பந்தையங்கள் பாதிக்கப்பட்டன.
- ஹெல் சிங்கியில் (1952) நடைபெற்ற ஒலிம்பிக்கில் தான் சோவியத் ரஷ்யா முதன் முதலாக கலந்து கொண்டு, ஜிம்னாஸ்டிக் தங்கம் பெற்றது.

# அவசரக் காதல்!

சந்தோஷ்-பரபரப்புடன் ரயில் நிலையத்தில் காத்திருந்தான். ரயில் புறப்பட இன்னமும் ஐந்து நிமிடங்கள்தான் இருந்தன. சிநேகாவை இன்னமும் காணவில்லை. அவன் இதயம் வேகமாக துடித்தது. கண்கள் நாலாபுறமும் சுழன்றன. அவளை காணவில்லை. அவள் வருவாளா? வீட்டில் விஷயம் தெரிந்து விபரீதமாகிவிட்டதா? அல்லது எல்லா பெண்களையும் போல கடைசி நேரத்தில் மனம் மாறி காத்திருந்தவன் கழுத்தை நெரித்துவிட்டாளா? அவனால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அப்போது-ரயில் புறப்படுவதற்காக விசில் ஊதப்பட்டது. அவனுக்கு நம்பிக்கையில்லை. இனிமேலும் காத்திருப்பதில் பயனில்லை... அவன் ரயிலில் ஏறினான். ரயில் மெதுவாக அசையத் தொடங்கியது- அப்போது-

தூரத்தில் சிநேகா தோல்பையுடன் வேகமாக வந்துக் கொண்டிருந்தாள். அவன் ரயிலை விட்டு கீழே இறங்கினான். அவள் முச்சிறைக்க ஓடிவந்தாள். ரயில் ஓடத் தொடங்கியது. அவன் ரயிலில் ஏறினான். சட்டென அவள் கைகளை பற்றினான். அப்படியே மேலே தூக்கினான்... இப்போது இருவரும் ரயில் பெட்டிக்குள் பத்திரமாக இருக்க அது வேகமாக ஓடத் தொடங்கியது. "என்ன சிநேகா கடைசி நேரத்துல என்னை கலங்கடிச்சிட்டே..?" "வீட்டுக்கு எப்படியோ விஷயம் தெரிஞ்சிடுச்சி... அப்பா பார்த்திருக்கிற மாப்பிள்ளையைத்தான் கட்டணும்னு பிடிவாதம் பிடிச்சாரு... யாரோ அவரோட நெருங்கின சிநேகிதனாம். அவரோட மகனுக்குத்தான் என்னை மணம் முடிச்சி குடுக்கணும்னு எப்பவோ முடிவு செஞ்சிட்டாங்களாம். அப்பான்னா எனக்கு பாசம் அதிகம்தான். ஆனா அதுக்காக என்னோட எதிர்காலத்தை நான் பாழடிச்சிக்கணுமா... காசுப் பணம் எவ்வளவு வேணும்னாலும் சம்பாதிக்கலாம். சொத்து சுகத்தையும் தேடிக்கலாம். ஆனா... திருமணம்னுறது வெறும் பணம் சம்பந்தப்பட்டதில்ல... அது ரெண்டு பேரோட மனம் சம்பந்தப்பட்டது. காதலுக்கு கண்ணில்லைம்பாங்க... ஆனா உண்மையான காதலுக்கு எந்த தடையும் உடையும். அதுனாலத்தான்- நான் எல்லாத்தையும் உதறிட்டு வந்துட்டேன்..."

அவள் சொல்லிக் கொண்டே போக அவன் அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான். கண்ணால்புள்ளி வைத்து மனதால் கோலமிட்டு கவனமாக அழுத்தமாக உருவானதுதான் அவர்களின் காதல்.

சந்தோஷும் சிநேகாவும் பதிவுத் திருமணம் செய்துக் கொண்டு வாடகை வீடொன்றில் தங்கினார்கள். சந்தோஷ் தன் நண்பன் முலமாக நல்லதொரு வேலை தேடிக் கொண்டான். அவர்களின் வாழ்க்கை மிக இன்பமாக போய்க் கொண்டிருந்தது. சிநேகா எல்லோரையும் மறந்தாள். அவனின் அன்பில் பூரணமாக ஐக்கியமாகிவிட்டிருந்தாள். இரண்டு மாதங்கள் ஓடின. அன்று-காய்கறிகள் வாங்குவதற்காக பக்கத்திலிருந்த சந்தைக்குப் போனாள். காய்கறிகள் வாங்கி விட்டு வெளியே வந்தவள் சட்டென நின்றாள். சற்று தூரத்தில் சிநேகாவின் தம்பி பிரசாத் நின்றிருந்தான். அவன் அவளை கண்டு விட்டு அவளை நோக்கி வந்தான்.

"தம்பீ...!

"அக்கா... நீங்க இங்கேயா இருக்கீங்க... உங்களை எங்கெல்லாமோ தேடினோம்.. நீங்க வீட்டைவிட்டு வந்தவுடனேயே அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்திடுச்சி... பக்கவாதம்



மாதிரி வந்து இப்போ எல்லாமே படுக்கையோடத்தான். பேசமுடியாது. அம்மா ரொம்ப கஷ்டப்படுறாங்க... ஏன் அக்கா இப்படி செஞ்சீங்க..?

அவள் எதுவும் பேசவில்லை. சட்டென தன் தந்தையின் ஞாபகம் வரவும் கண்கள் கலங்கின.

"எங்களை விட அப்பா உங்க மேலத்தான் உயிரையே வச்சிருந்தார். கடைசியில

**பாலா சங்குபிள்ளை**

அவர் உயிரையே எடுத்துட்டீங்களே. எந்நேரமும் வாய்க்கு வாய், சிநேகா.. சிநேகான்னு கூப்பிட்டுக்கிட்டிருப்பாரே... இப்ப வாய் திறந்து ஒரு வார்த்தைக்கூட பேச முடியாம இருக்காரே... உங்களுக்கு அப்பா பார்த்த மாப்பிள்ளை பிடிக்கலைன்னா நேரடியா சொல்லியிருக்கலாம்தானே.. ஏன் இப்படியொரு முடிவு எடுத்தீங்க... நம்ம அப்பா இன்னைக்கி இவ்வளவு நல்லா இருக்கிறதுக்குக் காரணமே அவரோட நண்பர்தானாம். அவருக்கு ஏதாவது கைமாறு செய்யணும்னுதான் அவர் மகனை உங்களுக்கு பேசியிருக்காரு... ஆனா இப்போ அவர் மகனையும் ரெண்டு மாசமா காணலையாம்... இங்க பாருங்க... இந்த படத்துல இருக்கிறவர்தான் உங்களுக்கு பேசின மாப்பிள்ளை. இவருக்கு என்ன குறை இருக்கு...?"

சிநேகா- படத்தை வாங்கினாள்- பார்த்தாள். அவ்வளவுதான். அவளுக்கு தான் நிற்கும் இடமே சுற்றத் தொடங்கியது. காதலின் வேகத்தால் அவசரப்பட்டு அவள் தன் தந்தைக்கு எவ்வளவு பெரிய இழுக்கை, நோயை ஏற்படுத்தி தந்து விட்டாள். தனக்குள்ளேயே அவள் தன் ரகசியக் காதலை மூடி வைத்திருந்ததால் அவள் எவ்வளவு பெரிய தவறை செய்துவிட்டாள்.

அவள் சட்டென குலுங்கி குலுங்கி அழுதாள். அவளின் தம்பிக்கு எதுவும் புரியவில்லை. அவளின் கையிலிருந்த புகைப்படத்திலிருந்தவன் சந்தோஷ்தானென்ற விஷயம் பாவம் அவனுக்கு தெரியவில்லை. அவள் தன் தந்தையை நினைத்துதான் அழுகிறாளென்று அவன் நினைத்தான். ஆனால் அவள் எதற்காக அழுகிறாளென்று அவளுக்கு மட்டுமே தெரியும்.

---

# இரு துருவங்கள் ஒருமுனை

"ரோகினி நான் யாழ்ப்பாணம் போறன்."

"ரியலி.. எப்போ?" எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவள் முகம்.

"நான் உன்னை விட்டுப் போறன். வெகுதூரம். நீ கொஞ்சமாவது கவலைப்பட மாட்டியா?" அவள் தலையை குனிந்து கொண்டாள்.

"லுக்கிய...!" அவளுடைய நாடியை தன் கைகளால் தொட்டு நிமிர்த்தி அவள்



கண்களுக்குள் எதையோ தேடினான் ம்ம்... எதுவுமே கிடைக்கவில்லை.

"ஏன் ரோகினி நீ இப்படி? உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ளாதே. புரிஞ்சுகொள். என்னை, உன்னை, இந்த உலகத்தை, எங்கடை இந்தக் கம்பஸ் வாழ்க்கையிலை நாலுவருசத்துக்கு மேலை பழகி இருக்கிறம். என்ரை மனசை நீ..." அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. எழும்பி சிறிது தூரம் நடந்தான். மீண்டும் வந்து அவளுடைய முன்நெற்றியில் விழுந்த மயிரை மெல்ல எடுத்து விட்டான். அவளுடைய விழிகள் அவனை ஏறிட்டன.

"நோ...நோ... அப்படிப்பார்க்காதை பிளீஸ்...!" இதுதான் இதேதான், அவளுடைய உதட்டில் மெல்லிய ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

"ரோகினி எங்களுக்கிடையிலான இந்த உறவு வாழ்க்கை பூராகவும் தொடர வேணும். பட்-இப்பிடி அல்ல, ரோகினி நான் உன்னை நேசிக்கிறன். நிறைய, நிறையவே நேசிக்கிறன். சோ... உனக்கு நானும், எனக்கு நீயுமாக..." அவளது கையை தன் இருகைகளாலும் பற்றிக் கொண்டான் அவள் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. இதுதான் இதேதான்!

"ஏன் பரா?" அவள் மௌனம் கலைந்தது. "இந்தக் கல்யாணம், குடும்பம், என்று எதுவுமே இல்லாமல் தனியாக இப்பிடியே என்னாலை வாழமுடியாது என்று நீ நினைக்கிறியா?"

"ஓ... மை கோட்." ஓங்கி நிலத்தில் குத்தினான். "ஏன் ஏன் ஏன்? ஏன் நீ இப்பிடி? எதிலுமே ஒரு ஈடுபாடு, பிடிப்பு இல்லாமல். யாருடனும் அதிகம் மூவ் பண்ணாமல்?" கத்தினான். "ஏய் உனக்கெண்டு கனவுகள், கற்பனைகள், ஆசைகள் எதுவுமே கிடையாதா? கல்யாணம் என்கிறது. வெறும் உடல் சுகத்துக்கானது மட்டுமல்ல, அது ஆத்மாவின் பிணைப்பு. மனித நேயத்தின் ஆரம்பம். உறவுகளின் ஒன்று கூடல். முதல்லை எல்லாற்றையுமே நேசிக்கப்பார். நீ, நான், இந்த உலகம், அந்தவானம். இந்தத் தான்தோன்றித் தனமானபோக்கை கைவிடு."

"என்னாலை முடியேல்லைப் பரா. ஏன்நான் இப்பிடி எனக்கே தெரியேல்லை. ஆனால் என்னாலை உன்னை உன்ரை உணர்ச்சிகளை புரிஞ்சுகொள்ளமுடியுது. பட் உன்னை நான் விரும்பிறதாய் சொன்னால் அது எவ்வளவு செயற்கைத் தனமோ, அதேமாதிரித்தான் இந்தப் போக்கை மாற்ற நினைப்பதும். உன்னை, நான் ஏமாற்றிவிட்டேனா பரா?"

**இனுவில் உத்திரன்**

"ஏன் ரோகினி, இரண்டு ஆரோக்கியமான உடம்புகள். இதயத்திலை வற்றி விடாத உணர்வுகள் ஒரு நல்ல வாழ்க்கைக்கு இவைபோதாதா?" அவன் கஸ்ரப்பட்டு அழுகையை அடக்குவது தெரிந்தது. மெல்ல அவன் தலையை வருடி ஏதாவது ஆறுதல் சொல்ல வேண்டும் என நினைத்து, பிறகு அதை மாற்றிக்கொண்டாள். அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது.

"பரா உனக்கு நான் தோல்வியைத் தந்திட்டேனா?" கேட்டாள்.

"இல்லை ரோகினி" நிமிர்ந்தான் "ரோகினி நீ என்னை விரும்பேல்லை என்கிறது எனக்கு கவலைதான். ஆனால் தோல்வி இல்லை. நான் உன்னை உண்மையா நேசிக்கிறன். இந்த நேசம் காலம் பூராகவும் உயிர்வாழும். அது ஒரு தலைக் காதலாக இருந்தாலும் கூடத்தான். ஆனால் எனிமேல் என்ரை வாழ்க்கை எப்பிடிப் போகுமோ எனக்கே தெரியாது. ஆனால் கட்டாயம் யாருக்காகவோ நான் வாழத்தான் வேணும்....

இந்த வாழ்க்கை இத்தோடை முடிஞ்சு விடப்போறதில்லை. அது காலத்தின் கட்டாயம். பாதைகள் மாறினாலும் பயணங்கள் தொடரத்தான் போகுது வெவ்வேறு திசைகளிலை. உன்னுடைய அன்பு, நேசம் எண்டு கிடைக்கேல்லை என்கிறது எனக்கு வருத்தம்தான். கவலைதான். ஆனால் கோபமில்லை! அதனாலை ஒன்றுமட்டும் சொல்லுறன். வாழ்க்கையிலை நிச்சயமாய்.... என்றைக்கும் என்ரை மனசிலை நீ நிறைஞ்சிருப்பாய்."

★★

சுமார் எட்டு வருடங்களின் பின் உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக மனைவி பிள்ளைகளுடன் கொழும்புக்கு வந்திருந்தான் பரா. அன்று வெள்ளிக்கிழமை. கோயிலில் சனக்கூட்டம். வழிபாடெல்லாம் முடிந்து வெளிமண்டபத்திற்கு வந்தபோது எதேட்சையாக திரும்பியவன் கண்களில் அவள் ரோகினி! அதே ஊடறுக்கும் பார்வை. அவளும் அவனைப் பார்த்துவிட்டாள் அவள் கழுத்தில் தாலி. நெற்றியில் குங்குமம். கொஞ்சம் தசை வைத்திருந்தாள். மற்றும்படி அதே அவள் சுமங்கலியாக? அவள் கண்கள் எதையோ சொல்லத் துடித்துக்கொண்டிருந்ததைப் போல இருந்தது. அவள் அருகே அவள் கணவன். அவள் கண்களால் விடை பெற்றுக் கொண்டு திரும்பியபோது...

"ரோகினி" பரா அழைத்த குரலைக் கேட்டு அவள் திரும்பிய அதேவேளை... எங்கிருந்தோ "அப்பா" என்று அழைத்தபடி மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு பெண்குழந்தை ஓடிவந்து அவன் கால்களை கட்டிக் கொண்டது. அந்த குழந்தையை தூக்கி முத்தமிட்டு அவனையும், அந்த குழந்தையையும் மாறிமாறிப் பார்த்தாள் ரோகினி. அன்று அவன் கடைசியாகச் சொன்ன வாக்கியம் நினைவுக்கு வந்தது.....

"என் மனசிலை என்றைக்கும் நீ நிறைஞ்சிருப்பாய்!"

---

# புரோக்கர் பீஸ் நட்பு!

'உஸ் அப்பாடா' என்றவாறு நாற்காலியில் வந்து அமர்ந்தார் செல்வராஜா. 'என்ன வெயிலப்பா இது மனிசன எரிச்சிடும் போல' என்றவாறு துண்டில் வியர்வையை துடைத்துக் கொண்டார்.

உள்ளே இருந்து கமலம் வெளியே வந்தாள். "என்ன போன காரியம் சரிதானா, சிதம்பரம் அண்ணன் என்ன சொல்லுறார்; நம்ம சொன்ன விலைக்கு காணிய விக்க ஏலுமாமா" என்றவாறு செல்வராஜாவின் முகத்தை ஏறிட்டாள்.

"ஆமா எப்படியாவது செய்து தர்ரதா தான் சொன்னான். எனக்கு செய்யாம வேற யாருக்கு செய்வான்" என்றவாறு "எங்கே நிஷாவைக் காணோம்" என்று உள்ளே பார்வையை செலுத்தினார்.

"அவளுக்கென்ன அந்தா படுத்துத் தூங்குகிறாள்" என்றவாறு உள்ளே சென்றாள் கமலம். செல்வராஜா மனதிற்குள் சிரித்துக் கொண்டார் ம்... இன்னும் இரண்டு கிழமையில் திருமணம் அதைப் பற்றி கனவு காண்கிறாளோ மகள், ம் காணட்டும் காணட்டும் என்று வெற்றிலையை வாய்க்குள் அபிஷேகம் செய்யத் தொடங்கினார்.

செல்வராஜ் ஓய்வுபெற்ற குமாஸ்தா. ஒரே மகள் நிஷாந்தி. மகளுக்கு ஓர் நல்ல இடத்தில் சம்பந்தம் வந்தது. நல்லகுடும்பம் ஆனால் வரதட்சணை தான் சற்று அதிகம். என்னவானாலும் ஒரே மகள் தானே என்று சம்பந்தத்தை ஏற்றுக் கொண்டார். இருந்தாலும் எல்லா செலவுகளும் போக ஐம்பதினாயிரம் ரூபா கையை கடித்தது. அதனால் தனக்கு சொந்தமான ஒரு சிறு காணித்துண்டை விற்பதற்கு முடிவு செய்தார் செல்வராஜா. விடயத்தை கச்சிதமாக முடித்துத் தருவதாக கூறினார் செல்வராஜின் பால்ய நண்பர் 'புரோக்கர் சிதம்பரம்'. சிதம்பரத்திற்கு அதுதான் தொழில். சிறு வயதிலிருந்தே இருவரும் நல்ல நண்பர்கள்.

ஆனால் காணியை பார்க்க வந்தவரோ நாற்பத்தி ஐந்து என ஒற்றைக் காலில் நின்றார். அதற்கு சிதம்பரம் எப்படியாவது ஐம்பதுக்கு முடித்துத் தருவதாக வாக்களித்திருக்கிறார். என்று மாலை பத்திரிகையை புரட்டியவாறு நாற்காலியில் சாய்ந்திருந்தார் செல்வராஜ். வாசல் பக்கம் ஏதோ சந்தடி கேட்டது. 'யாரது' என்றவாறு பார்வையை செலுத்தினார். அது தன் காணியை பார்க்க வந்த மனிதரென்று தெரிந்தது.

"வாங்க வாங்க என்ன இந்தப் பக்கம் திடீரென்று காணி உங்களுக்கு திருப்தியில்லீங்களா" என்றவாறு பேச்சை தொடங்கினார் செல்வராஜ்.



"அட நீங்க ஒன்னுங்க அந்த இடத்தின் பெறுமதி எனக்கு இப்பத்தானுங்க தெரிஞ்சது." விவசாய ஆலோசகரா இருக்கிற என் மகன் அந்த நிலத்தின் மண்ணைப் பாத்திட்டு அருமையானது என்று சொல்லி விட்டான். அதான் ரொம்ப மனத்திருப்தியோட நீங்க சொன்ன ஐம்பதோட சேர்த்து மேலும் ஐந்து சேர்த்து தர்ரதா முடிவு பண்ணிட்டேன். அத சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்று சொல்லி முடித்தார்.

**வட்டகொட-சீ. சிவகுமாரன்**

செல்வராஜிக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. எல்லாம் இறைவன் செயல் என்று மனதிற்குள் நன்றி சொல்லிக் கொண்டார். சரி இனி நடக்க வேண்டியதை கவனிக்க வேண்டியதுதான்.

"அப்ப பணத்தை நான் எப்ப கொடுக்கிறதுன்னு சொன்னிங்கன்னா லேசா இருக்கும்" என்று மௌனத்தை கலைத்தார் அவர். அதற்கு செல்வராஜ் "அதெல்லாம் ஒன்றுமில்லை நீங்க பணத்த என் நண்பன் சிதம்பரம் கிட்ட கொடுங்க அவன் எனக்கு தந்திடுவான்" என்றார். "சரி அப்ப நான் வர்றேன் எல்லாம் நல்லபடியா முடிஞ்சதில எனக்கும் திருப்தி" என்றவாறு அவர் விடை பெற்று சென்றார்.

இரண்டு தினங்கள் சென்றன. வீட்டிற்குள் நுழைந்தார் சிதம்பரம். "என்ன வீட்டிலே யாரும் இல்லையா எங்கே நிஷா?" என்றவாறு நாற்காலியில் உரிமையோடு வந்தமர்ந்தார்.

உள்ளேயிருந்து செல்வராஜ் "யாரு சிதம்பரமா? வாப்பா" என்றவாறு வெற்றிலை தட்டை எடுத்து வந்தார்.

இதப்பாரு செல்வா, எப்படியோ அந்த மனிசன்கிட்ட பேசி காரியத்த முடிச்சிட்டான் இந்த சிதம்பரம். பணத்தையும் கொடுத்திட்டான் அந்த மனிசன் நீ சொன்ன விலைக்கு ஒரு சதம் குறைக்காம் பேசினேன்," என்றவாறு பையிலிருந்து பணத்தை எடுத்து நீட்டினார் சிதம்பரம்.

சொன்ன விலைக்கு ஒரு சதம் குறைக்காமலா? துணுக்குற்றார் செல்வராஜ், "இதப்பாரு இதில ஐம்பதினாயிரம் இருக்கு இனி உனக்கு என்ன கவலை? ஜாம் ஜாம்னு கல்யாணத்த நடாத்து சரி எனக்கு வேலையிருக்கு நா பிறகு வர்றேன்" என்றவாறு நடையை கட்டினார் சிதம்பரம்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கமலம் "என்னங்க இது இப்படி சொல்லிட்டுப் போறாரு சிதம்பரம் அண்ணன் அப்ப அந்த ஐந்தாயிரம் கொடுக்காம நம்மல ஏமாத்திட்டாளே காணிய வாங்கின மனிசன்" என்று கணவனின் முகத்தை நோக்கினாள்.

"அட கமலம் ஊரு உலகம் தெரிஞ்சிகாம இருக்கியே ஏமாத்தினது அவன் இல்ல நம்ம புரோக்கர் ஐயா தான் அவன் செய்யிற தொழில எனக்கு காட்டிட்டுப் போறான். தொழில்னு வரும் போது அந்த இடத்துல நட்பை எதிர்ப்பார்த்தது என் குத்தம் தான், உனக்கு புரியலையா? அதாவது 'புரோக்கர் பீஸ்' ஐந்தாயிரம் அவன் எடுத்துக்கிட்டான் அவ்வளவுதான். சரி அதப்பத்தி கவலைப்படுறதுல பிரயோசனம் இல்ல நாம எதிர்பார்த்த ஐம்பது தான் கிடைச்சிரிச்சே" என்று கூறி முடித்தார் செல்வராஜ்.

இருந்தாலும் மனதின் ஒரு மூலையில் இப்படி செய்திட்டானே என்று வருத்தம் தேங்கியது.

கமலமோ "ம்... நீங்களும் ஒங்க நட்பும்" என்று கேலியாக கூறி விட்டு உள்ளே சென்றாள்!

**அ**ப்பேற்பட்ட துர்க்கா வைத்தான் மதுலதா இன்று ஷூட்டிங் ஃப்ளோரில் அத்தனை பேர் முன்னிலையில் செருப்பால் அடித்தாள்.

காரணம்: மதுலதா வரும் முன் துர்க்காவை அழைத்து யூனிட் ஆட்கள், "மதுலதா எப்படி பந்தாவா ஜூஸ் கேப்பா, செஞ்சி காமி" என்று கேட்க..

துர்க்காவும் மதுலதாவைப் போலவே ஸ்டைலாக நடந்து, மதுலதாவின் பிரத்யேக நாற்காலியில் அமர்ந்து, கையைச் சொடுக்கி அவளைப் போலவே பேசிக் காட்டினபோது...

அத்தனை பேரும் கை தட்டினாலும்... அதில் ஒரு எட்டப்பன் மதுலதா வந்ததும் இதைச் சொல்ல... சுறுசுறுவென்று கோபம் தலைக்கேறின மதுலதா துர்க்காவை அழைத்து, "ஏண்டி, கிண்டல் கேக்குதா உனக்கு, நாயே!" என்று டக்கென்று ஹீல்சைக் கழற்றி சப்பென்று அறைந்துவிட...

யூனிட் முழுக்க அமைதி. பொறி கலங்கின துர்க்கா அழப்போகிறாள், காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கப் போகிறாள் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க...

துர்க்கா மதுலதாவை நெருங்கினாள்.

"செருப்பாலயா அடிக்கிறே? காசுத் திமிராடி உனக்கு? இதை நான் சும்மா விடப் போறதில்லை. எங்களுக்கும் யூனியன் இருக்கு. சப்போர்ட்டுக்கு ஆளுங்களும் இருக்கு. என்ன செய்றேன் பார்."

சவால் விட்டுப் போனவளைத் தனியே சந்தித்தவன் சுதிர்.

> "பிரபலமாகிறதுக்கு கொஞ்சம் முன்னால ரெண்டு வருஷம் என் ஆளா இருந்தா அவ. டிசைன் டிசைனா அனுபவிச்சேன். கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். இதோ பண்ணிக்கலாம்னா, அதோ பண்ணிக்கலாம்னா... நைஸா என்னைக் கழட்டி விட்டுட்டா..."

யையோ, பூகம்பத்தையோ அவ சினிமா வாழ்க்கையில் ஏற்படுத்திடாது."

"அப்ப உங்க ஐடியாவைச் சொல்லுங்க."

"சொல்றேன். ஏம்மா துர்க்கா, உனக்கு மதுலதாவை திமிர் அடக்கணும். அவ்வளவு தானே?"

"ஆமாம்..."

"போதுமா? திமிரையும் அடக்கிட்டு, கூடவே அஞ்சு லட்சம் கிடைச்சா வேணாம்னு சொல்லிடுவியா?"

துர்க்கா நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

"அ... அஞ்சி லட்சமா?"

"அமாம். நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன். அதில ஒத்துழைக்கணும். சஞ்சா உனக்கு அஞ்சு லட்சம் கிடைக்கும்."

ருந்தேன். பார்ட்னஸா நீங்க ரெண்டு பேரும் கிடைச்சிருக்கிங்க..."

சுதிர் ரெஃப்ரிஜிரேடர் திறந்து நான்கு குளிர்பானம் எடுத்து வந்து விஸ்க், விஸ்க் என்று உடைத்து அவர்களுக்கு நீட்டினான். சங்கரதாஸ் மறுத்து டின் பேக்கிங்கில் இருந்து விஸ்கி சரித்துக் கொண்டான்.

சங்கரதாஸ் கணைத்துக் கொண்டான்.

"என்னோட திட்டத்திலே அவசரமே கிடையாது. ரொம்ப நிதானமா செயல்படப் போறேன். உங்க ரெண்டு பேருக்கும் ஆளுக்கு அஞ்சு லட்சம் கிடைக்கும்னு சொன்னேன் இல்லையா, அந்தப் பணத்தை நானே தர்றேன்."

"நீங்களா?" என்றார்கள் கோரஸாக.

"ஏன்? நம்பிக்கை இல்லையா? அட்வான்ஸா ஆளுக்கு ஒரு லட்சம் இப்பவே தர்றேன். சுதிர்."

சுதிர் ட்ரே மேல் இருந்த சூட்கேசைத் திறந்தான். ஐநூ ரூபாய் நோட்டுக் கட்டில் நான்கெடுத்து இரண்டை சேது விடமும், இரண்டை துர்க்காவிடமும் நீட்ட...

இரண்டு பேரும் இதுவரை விளையாட்டாய் நினைத்து வந்தவர்கள் மகா சீரியஸாய் சங்கரதாஸ் பேசுகிறான் என்பதை உணர்ந்து, பிரமித்து, வாங்கிக் கொண்டார்கள்.

"இப்ப நம்புவிங்களா என்னை?"

"நம்பறோம்."

"நீங்க ரெண்டு பேரும் நான் என்ன சொன்னாலும், ஏன், எதுக்குன்னு காரணம் கேக்காம செய்யணும். செய்வீங்களா?"

# கண்ணாமூச்சி ரே... ரே... 5

"நிச்சயமா செய்றோம். இப்ப என்ன செய்யணும் நாங்க?"

"கல்யாணம் பண்ணிக்கணும்."

"என்னது?"

"நடிப்புக்குப்பா! சேது, உன் வீட்ல யார், யார் இருக்கா?"

"யாரும் இல்லை. நான் மட்டும் தான்."

"வீடு எங்கே?"

"பழவந்தாங்கல்ல.."

"குடித்தனம் பண்ண முடியுமில்லே?"

"பண்ணலாம்."

"துர்க்கா நீ உன் கைப்பட ஒரு லெட்டர் எழுதறே. அதாவது சேதுவை நீ காதலிக்கிறே. சேதுவும் உன்னைக் காதலிக்கிறான். ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிறோம். யாருக்கு? உங்கம்மாவுக்கு. அப்படி ஒரு லெட்டரை எழுதி வச்சிட்டு, ஒரு தாலிக் கயித்தை நீயா கழுத்தில கட்டிக்கிட்டு சேதுவோட அவன் வீட்டுக்கு அவன் பொண்டாட்டி மாதிரி வர்றே. வீட்டுக்குள்ளே நீங்க உங்க இஷ்டம் போல இருங்க. சுத்தி உள்ள குடித்தனக்காரங்க பார்வையிலே நீங்க புருஷன்-பொண்டாட்டியா தெரியணும். துர்க்கா, உங்கம்மாவுக்கு கணிசமா ஒரு தொகையை வீட்ல செலவுக்கு விட்டு வச்சிட்டா கிழவி கவலைப்பட மாட்டா. இப்போதைக்கு நாடகத்தில முதல் காட்சி இது தான். எப்ப நடத்தறிங்க இதை?"

"நாளைக்கே வேணாலும் நான் தயார்" என்றாள் துர்க்கா.

"நானும் தயார்" என்றான் சேது பாக்கெட்டுக்குள் பணக் கட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு.

"வெரிகுட். துர்க்கா, நீ இன்னொரு காரியம் செய்யி. மதுலதாவைப் பார்த்து அம்மா தெரியாம அப்படி வீராப்பா பேசிட்டேன்ம்மா... என்னை மன்னிச்சிடுங்க, நான் செஞ்சது தப்புன்னு சொல்லிடு. சினிமா யூனிட்ல உனக்குத் தெரிஞ்சவங்ககிட்டே எல்லாம் நான் கல்யாணம் பண்ணிக்கப்போறேன், இனிமே நடிக்க மாட்டேன்னும் சொல்லிடு. புரிஞ்சுதா?"

"சரிங்க..."

"நீங்க போகலாம்.."

இருவரும் போனதும்...

"தாஸு, மண்டையைப் பிச்சிக்கலாம் மாதிரி இருக்கு. மதுலதாவைப் பழி வாங்கணும்னு சொன்னே. அதுக்கும் இவங்க கல்யாணம் பண்ணிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு? எனக்கு எதுவும் புரியலையே..."

"சுதிர், நான் தான் சொன்னே, மதுலதாவுக்கு ஒரு வித்தியாசமான தண்டனை தரப் போறேன்னு. அதுக்கு அடிப்படையா நிறைய காரியங்கள் இருக்கு. அதிலே இது ஒண்ணு.

"சரி... நாடகத்தில இரண்டாம் காட்சி எப்போ?"

"அவசரமே கிடையாது. பதினஞ்சி நாள் கழிச்சிதான் அடுத்த காட்சி."

"ஒரு எழவும் புரியலை தாஸ்."

சங்கரதாஸ் பதில் சொல்லாமல் கூரை பார்த்து ஹஹ்ஹா, ஹஹ்ஹா என்று சிரித்தான்.

*(கண்ணாமூச்சி தொடரும்)*



## பட்டுக்கோட்டை பிரபாகர்

"யூனியனுக்கெல்லாம் போக வேணாம். சங்கரதாஸ் உங்களைப் பார்க்கணும்னு சொன்னான். என்னோட வாங்க. மதுலதாவோட திமிரை அடக்கணும்... அவ்வளவு தானே? அடக்கிடலாம். நம்பி வாங்க.."

துர்க்கா சுதிரோடு அவன் வந்த காரில் ஏறிப் புறப்பட்டுச் சென்றாள்.

**ச**ங்கரதாஸ் வீட்டின் அந்த அறையில் சதிக் கும்பல் கூடியிருந்தது. தலைமை: சங்கரதாஸ். அருகில் சுதிர். எதிரில் சேதுவும், துர்க்காவும்.

"சேது, அவ எல்லாம் உதிர்த்தவ. எதுக்கும் துணிஞ்சவ. காசு எக்கச்சக்கமா ஏறிடுச்சி. பெரிய மனுஷங்க பழக்கம் நிறைய. பிறந்த நாள் விழாவுக்கு மினிஸ்டர் வர்றாருய்யான்னா பார்த்துக்கயேன். டெல்லி வரைக்கும் கொடி பறக்க விட்ருக்கா.. அதனால இந்த போட்டோவை வச்சிக்கிட்டு பூச்சாண்டி காட்றதெல்லாம் எடுபடாது. நீ இதை வச்சி எவ்வளவு பணம் வாங்கலாம்னு நினைச்சிருந்தே?"

"ஒரு அம்பதாயிரம் கேக்கலாம்னு நினைச்சிருந்தேன்."

"அஞ்சி லட்சத்துக்கு வழி நான் சொல்லித் தர்றேன்."

"இதே போட்டோவை வச்சா?"

"இங்க ட்ரிக் எடுபடாதுன்னுதான் சொல்லிட்டேனே... ஆமாம், ஒரு காலத்தில அப்படி போஸ் கொடுத்தேன்னுகூட சொல்லத் தயங்க மாட்டார். இல்லைன்னா கூலா தலை என்னுது. உடம்பு யாரு தோன்னுடுவா. இது ஒரு பெரிய புரட்சி

"என் ஆயுசு முழுக்க சம்பாரிச்சாலும் அவ்வளவு பணத்தை நான் பார்க்கப் போறதில்லைங்க. என்ன செய்யணும் சொல்லுங்க, செய்றேன்."

"சேது, நீயும் ஒத்துழைக்கிறே தானே?"

"நிச்சயமா. ஒரு சந்தேகம்."

"என்ன?"

"உங்களுக்கு மதுலதா மேல என்ன பகை?"

"பிரபலமாகிறதுக்கு கொஞ்சம் முன்னால ரெண்டு வருஷம் என் ஆளா இருந்தா அவ. டிசைன் டிசைனா அனுபவிச்சேன் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். இதோ பண்ணிக்கலாம்னா, அதோ பண்ணிக்கலாம்னா... நைஸா என்னைக் கழட்டி விட்டுட்டா... இப்ப ஒரு மார் வாடி பையனை சுத்திக்கிட்டிருக்கா.. அவனைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறாளாம்."

"சொத்து பூரா அவனுக்குப் போய்டும்னு பார்க்கறிங்களா?"

"ஷிட்! யாருக்கு வேணும் அவ சொத்து? சிங்கப்பூர்ல மூணு ரப்பர் இண்டஸ்ட்ரி இருக்க எனக்கு இங்கே எங்க குரூப் கம்பெனிசுக்கு மொத்தம் எத்தனை பிராஞ்ச் இருக்குன்னுகூட எனக்குத் தெரியாது. இவ என்ன சுண்டைக்காய்! என்னை அலட்சியப் படுத்திட்டாய்யா. அதை மட்டும் என்னால தாங்க முடியாது. எல்லார்கிட்டேயும் காட்டற புதுத் திமிரை என்கிட்டேயும் காமிச்சிட்டா. பாடம் சொல்லித் தரணும்னு யோசிச்சிக்கிட்டி

# என்ன குழந்தை வேண்டும் என்று கேட்கிறது விஞ்ஞானம்

## கடவுள் எதிர்கொள்ளும் மற்றொரு சவால்!

'**உ**ங்களுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமா? அல்லது பெண் குழந்தை பிறக்க வேண்டுமா? இனி அதை நீங்களே தீர்மானிக்கலாம்! எங்களை அணுகினால் போதும். நீங்கள் விரும்பும் குழந்தையை பெற்றுக் கொள்ள உதவுகிறோம். நாங்கள் தயாரித்துள்ள மருந்துகளைப் பயன்படுத்தினால் 96 சதவீதம் வெற்றி நிச்சயம்!'




'டைம்ஸ் ஆஃப் இந்தியா' போன்ற சில முன்னணிப் பத்திரிகைகளில் இந்த அதிர்ச்சி விளம்பரம் கடந்த சில நாட்களாக கண் சிமிட்டிக் கொண்டிருக்கிறது. விளம்பரத்தைக் கொடுத்தது ஜென்செலக்ட் (Gen-select) எனும் மருத்வமுறையை பிரபலப் படுத்திவரும் ஆரஞ்ச்பெர்க் என்ற அமெரிக்க நிறுவனம். (இந்த நிறுவனம் தெற்கு கரோலினாவில் உள்ளது). விளம்பரத்துக்குக் கீழேயே தங்களை அணுக வேண்டிய இன்டர்நெட் முகவரியையும் கொடுத்திருக்கிறார்கள் அவர்கள்.

ஆண் குழந்தைகளுக்கு இருக்கும் மவுசும், பெண் குழந்தைகளுக்கு இருக்கும் மதிப்பும் நமக்கெல்லாம் தெரிந்ததுதான். பத்து மாதம் சுமந்து பெற்ற பெண் குழந்தைகளையே இரக்கமில்லாமல் கொல்லும் சில காட்டுமிராண்டிகளுக்கு இது எப்படிப்பட்ட வாய்ப்பு! ஜென் செலக்ட் மருந்துகளையும் மருத்துவ உபகரங்களையும் (ஜென் செலக்ட் கிட்) பெற போட்டி போட்டுக் கொண்ட ஆர்டர்களைப் பலர் அனுப்பி வருகிறார்களாம். (ஒரு ஜென் செலக்ட் கிட்டின் விலை (10,000 ரூபாய்)

இப்படியும் நடக்குமா? உயிர்கள் இறைவனின் படைப்பு என்று சொல்லி வரும் நிலையில் வெறும் மருந்துகளால் நம் விருப்பப்படி ஆண் குழந்தையையோ, பெண் குழந்தையையோ பெற்றுக் கொள்ள முடியுமா?

நாம் விரும்பும் குழந்தையைப் பெற உதவுவதாகக் கூறும் ஜென் செலக்ட் நிறுவனத்தினர் கூறுவதைக் கேளுங்கள்:

"உங்கள் குழந்தை ஆணாகவோ, பெண்ணாகவோ பிறப்பதை தீர்மானிக்கும் அடிப்படை விஷயங்கள் நான்கு. எங்கள் ஜென் செலக்ட் கிட்டின் மூலம் இந்த நான்கு விஷயங்களையும் உங்களுக்குச் சாதகமாக்கி நீங்கள் விரும்பும் குழந்தையைப் பெற வைப்போம்" என்று சத்தமாகச் சொல்கிறது நிறுவனம். ஜென் லெக்ட் கூறும் அந்த நான்கு விஷயங்கள்:

1. ஒரு பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறக்குமா அல்லது பெண் குழந்தை பிறக்குமா என்பது அந்தப் பெண் கருவடைவதற்கு முன் கருமுட்டையை சுற்றியுள்ள சில இரசாயனப் பொருட்களின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஜென் செலக்ட் கிட்டில் இரு வகையான மருந்துகளை வைத்துள்ளோம். ஒருவர் ஆண் குழந்தையை விரும்பினால் அதற்கு ஏற்ற இரசாயனங்களைக் கொண்ட மருந்தையும், பெண் குழந்தையைப் பெற விரும்பினால் அதற்கு ஏற்ற ரசாயனங் களைக் கொண்ட மருந்துகளையும் பயன் படுத்தினால் போதும். இதற்கான மருந்துகளை ஒரு பெண் தொடர்ந்து சாப்பிட்டால் விரும்பும் குழந்தையைப் பெறுவதற்கான இரசாயனக்கலவை கருமுட்டையைச் சுற்றி உருவாகும்.

2. ஒரு குறிப்பிட்ட காலங்களில் கருவுற்றால் ஆண் குழந்தையும் வேறு சில குறிப்பிட்ட நேரங்களில் கருவுற்றால் பெண் குழந்தையும் பிறக்கும் என்று மருத்துவ அறிஞர்கள் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். இது விஞ்ஞான உண்மையும் கூட. பெண்களின் உடலில் உள்ள வெப்பத்தின் அளவை வைத்து இந்தக் கால அளவுகள் மாறுகின்றன. 'ஜென் செலக்ட் கிட்'டில் தாங்கள் விரும்பும் குழந்தையைப் பெற ஒரு பெண் எந்த நேரத்தில் கருவுற வேண்டும் என்பதை அறிவிக்கும் 'ஒவலேஷன் பிரடிக்டர்' (ovulation predictor) எனும் கருவியை வழங்குகிறோம்.

3. ஒரு தம்பதியினர் உட்கொள்ளும் உணவைப் பொறுத்தும் அவர்களது குழந்தைகளின் பாலினம் மாறும். குறிப்பிட்ட பாலைச் சேர்ந்த குழந்தை பிறப்பதற்கு தேவையான உணவுக் கட்டுப்பாடு முறை ஜென் செலக்ட் கிட்டுடன் அளிக்கப்படுகிறது.

4. உடலுறவின்போது பிறப்புறுப்பில் சுரக்கும் அமிலத்தன்மை மற்றும் காரத் தன்மையைப் பொறுத்து குழந்தைகளின் பாலினம் மாறுபடும். இதில் நமக்கு வேண்டிய தன்மை கிடைப்பதற்குத் தேவையான மருந்துகளும் ஜென் லெக்ட் கிட்டில் உண்டு.

மேற்கண்ட நான்கு முறைகள் மூலமாக ஒரு தம்பதி தான் விரும்பும் குழந்தையை நிச்சயம் பிறக்க வைக்க முடியும் என்று ஆரஞ்ச்பெர்க் நிறுவனம் அடித்துச் சொல்கிறது.

இதெல்லாம் நடைமுறையில் சாத்தியமா?

"நாங்கள் மருந்து கொடுக்கிறோம் என்று ஜென் செலக்ட் நிறுவனம் மொட்டையாகச் சொல்கிறது. ஆனால் அந்த மருந்துகள் எந்தெந்த இரசாயனங்களால் தயாரிக்கப்பட்டவை என்று சொல்லப்படவில்லை. இதைச் சாப்பிட்டால் பக்கவிளைவு காரணமாக கேன்சர் போன்ற நோய்கள் வரலாம். குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறக்கவும் வாய்ப்புண்டு.

இறை நம்பிக்கையை முறியடிக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளை வரவேற்கும் சில பிரிவினர்கூட இதை வரவேற்பதாக இல்லை.

"சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறக்கும். அதன் மூலம் உயிர்களைப் படைப்பவன் இறைவன் என்ற கருத்து பொய்யாகும்" என்று 50 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார் பெரியார். அது நடந்தது. இப்போது நாம் விரும்பும் குழந்தையைப் பெற உதவும் மருத்துவ வசதிகூட வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இதை வரவேற்பதற்கு முன் அதைத் தயாரித்தவர்கள் தங்கள் கண்டுபிடிப்பை நிரூபிக்க வேண்டும். அதே நேரத்தில் பெண் சிசுக்களைக் கொல்லும் மக்களைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் இந்த மருந்து மார்க்கெட்டுக்கு வருவது மிக ஆபத்தானது என்று எச்சரிக்கை செய்கிறார்கள் பல சமூக நலன் விரும்பிகள்.

எவ்வாறெனினும் இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் இந்தியாவின் முன்னணி மருத்துவர்கள் பலரும் அதிருப்தியே.

"இதுபற்றி இப்போதுதான் கேள்விப் படுகிறேன். ஆண்,பெண் என்பதைத் தீர்மானிப்பது மரபணுக்கள்தானே தவிர, வேறு எதுவுமில்லை. மேலும் மாத்திரை, மருந்துகளால் இதைத் தீர்மானிக்க முடியும் என்பது அபத்தம். 'ஸ்கேன்' செய்து பிறக்கப் போவது ஆணா, பெண்ணா என்பதையே நான் ஏற்றுக் கொள்வதில்லை. அரசாங்கம் இந்த முறைக்குத் தடை விதிக்கும் முன்னரே, நான் எனது பேஷண்ட்டுகளை குழந்தையின் பாலினத்தை அறிவதற்கான ஸ்கேன் செய்ய அனுமதித்ததில்லை. அதை ஒரு கொள்கையாகவே வைத்திருக்கிறேன். இதைப் பற்றி விவாதிப்பதையே நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்." என்றார் டாக்டர் கீதா அர்ஜூன்.

"இது போன்ற 'கிட்'டுகள் மூலம் குழந்தையின் பாலினத்தைத் தீர்மானிக்க முடியாது. முன்பு 'சைனீஸ் முறை' மூலம் பிறக்கப்போவது ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிய முடியும் என்று சொல்வார்கள். ஆனால், அதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஒரு சில வருடங்களுக்கு முன்பு, மேற்கத்திய நாடுகளிலிருந்து இங்கு கொண்டு வந்து பயன்படுத்தப்பட்ட மருந்தின் மூலம் பலருக்கு 'கிட்னி' பிரச்சனைகள் வந்தது. அப்புறம்தான் அது அந்நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்து என்பது தெரிய வந்தது. அதனால் இவற்றையெல்லாம் தடை செய்வதுதான் நல்லது" என்றார் அப்பல்லோ மருத்துவனை டாக்டர் நிர்மலா ஜெயசங்கர்.

தேசிய அளவிலான மாதர் சங்கங்கள் பல இந்த மருத்துவ முறை பற்றி மேலும் விளம்பரம் செய்யக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு கண்டனம் தெரிவித்து அறிக்கைகள் அனுப்பியுள்ளன.

# எஸ்.டி.எஸ். தொடர் 79


# 1956 ஜூன் 5

## இரா.பத்மநாதன்

திரு.இராசதுரை அவர்களின் தேர்தல் வெற்றிக்கு பல இளைஞர்கள் பெரும் பாடுபட்டு உழைத்தனர். இவர்களுள் பள்ளிமாணவர்களும் ஏராளம். "அண்ணன், அண்ணன்" என்று அன்பொழுக அழைத்த வண்ணம் திரு.இராசதுரைக்கு பின்னும் முன்னும் திரிவார்கள்.

மட்டக்களப்பு மத்தியகல்லூரியில் பயின்றவர்களான காசி ஆனந்தன், க.தங்கவடிவேல், செழியன் கே.பேரின்பநாயகம், காரைதீவைச் சேர்ந்த மாணிக்கவாசகர், எஃப்.ஜி.ஜெயசிங்கம், வி.சு.கதிர்காமத்தம்பி, வந்தாறுமூலை மத்திய மாவித்தியாலயத்தில் அப்போது பயின்று கொண்டிருந்த சி.மௌனகுரு இன்று கிழக்குப்பல்கலைக்கழகப் பேராசிரியர், அற்புதராஜா குரூஸ், த.சி.வில்வராஜா போன்றவர்களை முன்னுதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவர்களைத்தவிர 'மூனாரூனா' என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட ச.முருகேஸ், கலைஞர் ம.பி.குமார், 'சட்டர்டே' கந்தசாமி, 'மணி' என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட எஸ்.சுப்பிரமணியம், கே.ஆனந்தராஜா, ஜி.பாலசுப்பிரமணியம், எஸ்.கணேசமூர்த்தி, மாரன் ஆகிய இளைஞர்களும் இராசதுரை அவர்களின் தோழர்கள் பட்டியலில் இடம் பிடித்திருந்தனர்.



திரு. பாலு மகேந்திரா

மட்டக்களப்பு நகரில் உள்ள ஆமென் கோணர் என்ற வீதியில் இராதுரை அவர்கள் 'இளங்கோ அச்சகம்' நிறுவி இருந்தார். மேற்கூறப்பட்ட மாணவர் பட்டாளமும் இளைஞர்களும் இளங்கோ அச்சகத்தில் ஒன்று கூடி பல வகையான கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள். கட்சியின் வளர்ச்சிக்கான பலதிட்டங்களையும் தீட்டுவார்கள்.

இளங்கோ அச்சகத்தின் எதிர்ப்புறமாக 'அஜந்தா போட்டோ'என்ற நிழற்படப்பிடிப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. திரு.தட்புணாமூர்த்தி என்பவர் இதனை நிறுவினார். இந்நிறுவனத்தின் பின்புறமாக ஒரு கீற்றுக் கொட்டகை போடப்பட்டிருந்தது. இக்கொட்டகையை அஜந்தா குகை' என்று பெயரிட்டு அழைப்போம். கலைஞர் குமார் அவர்களின் கலைக்கூடம் இங்கேதான் அமைந்தது. பல வர்த்தக நிறுவனங்களுக்குமான பெயர்ப்பலகைகளை வரைந்து கொடுப்பதுடன் புகைப்படங்களைப் பெரிதாக்கி அவற்றுக்கு பல வர்ணங்களையும் குமார் தீட்டிக் கொடுப்பார்.

இளங்கோ அச்சகத்துக்கும் அஜந்தாக் குகைக்கும் அடிக்கடி பல ஊர்களிலிருந்தும் பல பிரமுகர்கள் வந்து செல்வது வழக்கமாக இருந்து வந்தது.

ஆரையம்பதி கிராம சபைத் தலைவராக பல அரிய தொண்டுகளை ஆற்றிய திரு.க.அமரசிங்கம் அவர்களும் அஜந்தா குகைக்கு அடிக்கடி வருவார். அவருடன் ஆரையம் பதியைச் சேர்ந்த பல இளைஞர்களும் வருவார்கள். 'ஆரையூர் அமரன்' என்ற புனை பெயரில் அரியாபல கவிதைகளை திரு.அமரசிங்கம் எழுதுவார். அவர் ஒரு தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர்; இன்று ஓய்வு பெற்று ஆரையம்பதியிலேயே வாழ்ந்து வருகிறார்.

இன்று தமிழ் நாட்டில் பிரபலமான திரைப்பட இயக்குநராகவும் சிறந்த திரைப்பட ஒளிப்பதிவாளராகவும் தயாரிப்பாளராகவும் சிறப்புப் பெற்று வாழ்ந்து வரும் திரு.பாலு மகேந்திரா அவர்களும் தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை அஜந்தா குகையில் செலவிடுவார். இவர் மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அர்ச் மிக்கேல் கல்லூரியில் படித்தவர். இக்கல்லூரியின் கணிதத் துறைப் பேரராசனாக விளங்கிய திரு.பால நாதன் அவர்களின் மகன்.

திரு.பாலுமகேந்திராவின் இளமைக் கால நினைவுகளை அடியொற்றியே அவர் தயாரித்தளித்த 'அழியாத கோலங்கள்' திரைப்படம் அமைந்திருந்தது. இளமையில் நண்பர்களுடன் மாங்காய் களவெடுத்து உண்பது, அமிர்கழித் தீர்த்தக் குளத்தில் நீச்சலடித்தல் போன்றவை இப்படத்தில் இடம் பெறுகின்றன.

குளத்தில் நீச்சலடிக்கும்போது அக் குளத்திலுள்ள சந்தணச் சேற்றில் புதைந்து மகேந்திராவின் நண்பர் ஒருவர் இறந்து விடுவது போன்ற காட்சியும் படத்தில் இடம் பெறுகிறது. திரு.பி.வி.கணபதிப் பிள்ளை ஆசிரியர் அவர்களின் மகனான ரகுபதி என்பவர்தான் மாமாங்கக் குளத்தில் மூழ்கி இறந்தவர்.

மட்டக்களப்பு பிரதான வீதியில் தேனீர்ச்சாலை வைத்து நடத்திய திரு. நாராயணன் அவர்களின் மூத்த மகள் அகிலாண்டேஸ்வரியை திரு பாலுமகேந்திரா திருமணம் செய்து கொண்டார்.

வட இந்தியாவில் புனே நகரில் அமைந்துள்ள திரைப்படத்துறை பயிற்சிக் கல்லூரியில் படித்து சிறப்புப் பட்டங்களை வென்று திரையுலகில் பல அரிய விருதுகளையும் பாலு மகேந்திரா குவித்துள்ளார்.

பாலு மகேந்திரா பற்றி இச்சந்தர்ப்பத்தில் சிறிது அழுத்தமாகக் குறிப்பிட வேண்டியதற்கு ஒரு காரணமுண்டு. இங்கு வெளியாகும் தினசரி ஒன்றின் வாரப் பதிப்பில் 'யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 'பாலு மகேந்திரா' என்று குறிப்பிடப்பட்டிருந்தமைதான்.

மட்டக்களப்பிலுள்ள அமரச அலுவலகங்களில் பணிபுரிந்த இளைஞர்கள் அனைவரும் திரு.இராசதுரை அவர்களுக்கு துணை நின்றனர். மேல் வகுப்பினர் என்று தம்பட்டமடித்துக் கொள்பவர்கள் தமிழரசுக் கட்சியையோ திரு. இராசதுரை அவர்களையோ ஆதரிக்க முன்வரத் தயங்கினார்கள் என்று ஏற்கனவே இத் தொடரின் பல இடங்களில் சுட்டிக் காட்டியிருந்தேன். இருப்பினும் ஒரு சிலர் தமிழரசுக் கட்சியில் இணைந்து செயற்பட்டனர்.

அப்போது அரச பணியில் இருந்த திரு.மு.மாணிக்கம், முன்னாள் கொழும்பு மாநகர சபை நூலகத்தில் நூலகராக விருந்து ஓய்வு பெற்ற திரு.இ.எல்.தம்பிமுத்து, திரு.பூபாலரத்தினம் (வழக்கறிஞர்.) திரு.உலகசேகரம் (நியாயதுரந்தரர்) போன்ற பலர் தமிழரசுக் கட்சியைப் பகிரங்கமாக ஆதரிக்க முன்வந்தனர்.

பதவியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி பொதுத் தேர்தலில் தோல்வியடைந்து எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பதவியைக் கைப்பற்றியதும், திரு.பண்டாரநாயக்க அவர்கள் "இருபத்துநாலு மணி நேரத்தில் சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவேன்" என்று சூழுரைத்ததன் படியும், ஏற்கனவே ஐ.தே.கட்சி தனது களனி மாநாட்டில் 'சிங்களமே நாட்டின் ஆட்சி மொழி' என்ற தீர்மானத்துக்கமைவாகவும் 'சிங்களம் மட்டும்' பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதியன்று பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா சமர்ப்பிக்கப்பட்டது. இது தமிழ் பேசும் மக்களின் அன்றைய வரையிலான நம்பிக்கைக்கு நாசம் விளைவிக்கும் ஒரு செயலாகவே கருதப்பட்டது.

தமிழரசுக் கட்சி ஜூன் 5ம் திகதியை தமிழ் பேசும் மக்களின் கரிநாள் என்று பிரகடனப்படுத்தியது. தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பைக் காட்டுமுகமாக தலைவர் தந்தை செல்வா அவர்களின் தலைமையில், பாராளுமன்றக் கட்டடத்தின் முன்புறமாக காலிமுகத்திடலில் பல நூற்றுக் கணக்கான தொண்டர்கள் அமர்ந்து சாத்வீகரீதியான சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நாட்டின் வடக்குக் கிழக்கு மற்றும் மலையகம், இலங்கையின் வேறு பல பாகங்களிலுமிருந்து திரண்டு வந்திருந்த ஏராளமான தொண்டர்கள் பங்கேற்றிருந்தனர். பாராளுமன்றத்துக்கு அப்போது வந்திருந்த பிரதமர் பண்டாரநாயக்கா மன்றத்துக்குள் செல்வதற்கு முன்னர், தனது மோட்டாரிலிருந்து இறங்கி, காலிமுகத்திடலில் அமைதியாக அமர்ந்திருந்த சத்தியாக்கிரதிகளை நோட்டமிட்டார். அதன் பின்னரே அவர் மன்றுக்குள் சென்று மறைந்தார்.



சித்ரா ஸ்டூடியோவில் திரு.சிவநாயகம் அவர்களுடன் இணைந்து புகைப்படப் பிடிப்பாளராக கடமையாற்றியவர். திரு.கந்தையா என்று ஏற்கனவே இக்கட்டுரைத் தொடரின் பல இடங்களில் குறிப்பிட்டிருந்தேன். அவருடைய முழுப் பெயர் திரு.பூபாலரெட்ணம் என்பது பின்னரே எமக்குத் தெரியவந்தது. இவர் 1998. மே 4ம் திகதியன்று காலமானார் என்பதும் தெரியவந்தது.

பிரதமர் பாராளுமன்றத்துக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து, பாராளுமன்றக் கட்டடத்தை வளைந்து நின்றிருந்த ஒரு பெரிய காடையர் கூட்டம் திமுதிமுவென்று சத்தியாக்கிரகிகளை நோக்கி முன்னேறியது. தொண்டர்களை அடித்தும் உதைத்தும், அவர்களுடைய ஆடைகளைக் கிழித்தும் இம்சைப் படுத்தினர். ஆனால் சாந்த சொரூபியாக தொண்டர்களின் அணிவரிசையில் நடுநாயகமாக முன்னால் அமர்ந்திருந்த தந்தை செல்வா அவர்களை காடையர்கள் எவரும் தீண்டவில்லை. அவரருகில் அமர்ந்திருந்த திரு.வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன், திரு.அமிர்தலிங்கம் போன்றவர்களை கூட்டத்தினர் நையப்புடைத்துவிட்டனர். சில தொண்டர்களைக் குண்டுகட்டாகத் தூக்கிக்கொண்டு போய் பாராளுமன்றத்தின் தென்பாலுள்ள பேரா ஏரியில் தூக்கி எறிந்தனர்.

காடையரின் தாக்குதல் ஏறத்தாழ முக்கால் மணிநேரம் நீடித்தது. இதனைத் தொடர்ந்து மென்மேலும் காடையர் கூட்டம் பிற இடங்களிலிருந்து சாரிசாரியாக வந்து கொண்டே இருந்ததனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதனால் நிலமை இன்னும் படுமோசமாகக் கூடும் என்பதனை உணர்ந்த தந்தை செல்வா அவர்கள் சத்தியாக்கிரகத்தை உடனே நிறுத்திவைப்பதாக தொண்டர்களுக்கு அறிவித்தார். அமைதியாக அனைவரும் கலைந்து சென்றனர். ஆனால் காடையர்கள் பலர் தொண்டர்களைத் தொடர்ந்து சென்று தாக்கவே செய்தனர்.

மட்டக்களப்பில் இருந்து இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதற்காக திரு.இராஜதுரை அவர்களுடைய தலைமையில் 50 பேர் கொண்ட தொண்டர் படை கொழும்பு சென்றிருந்தது. அன்று மதியம் கோட்டை ரெயில்வே நிலையத்தில் இருந்து புறப்படும் உத்தர தேவி வண்டியில் இவர்கள் அனைவரும் மட்டக்களப்புக்கு திரும்புவதற்காக ரெயில்வே நிலையத்தை கால் நடையாக வந்தடைந்தனர். இவர்களைத் தொடர்ந்தும் பல காடையர்கள் தொண்டர்களைத் தாக்கிய வண்ணம் ரயில் நிலையம் வரை வந்தனர்.

இவ்வாறு திரண்டு வந்த காடையர்கள் புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தையில் அப்போது திறந்திருந்த தமிழர்களுக்குரிய கடைகளைத் தாக்கி கொள்ளையிட ஆரம்பித்தனர். இவ்வாறு தாக்கப்பட்ட கடைகளுள் ஆனந்தபவான், இராஜேஸ்வரி பவான், கந்தையா ஸ்டோர்ஸ், ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இதைத்தவிர ஓர் இந்திய முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான புகாரி ஹோட்டல் மிக மோசமாகத் தாக்கியழிக்கப்பட்டது. இதே ஹொட்டலுக்கு ஒரு கிளைபோன்று மருதானை பஞ்சிகாவத்தையில் இருந்த புகாரி ஹொட்டலும் தாக்கியழிக்கப்பட்டது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து புகாரி ஹொட்டல் உரிமையாளர், பல வருடங்களாக எந்தவிதமான சச்சரவுமின்றி நடத்தி வந்த வியாபாரம் இவ்வாறு சீர்குலைந்ததே என்று மிக்க வேதனைப்பட்டார். இத்தோடு இந்தநாட்டில் வியாபாரம் செய்வது உசிதம் அல்ல என்று விரக்தியுற்று இந்தியா சென்று விட்டார். அங்கு சென்னைமாநகரில் புகாரி ஹொட்டல் என்ற உணவு விடுதிகளைத் தொடங்கினார். இவை இன்றுவரை மிகச் சிறப்புற நடந்துவருகின்றன.

கொழும்பு நகரோடு மட்டும் நின்று விடாமல் தென் இலங்கையில் உள்ள வேறுபல நகரங்களிலும் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் அன்றைய தினமே அடித்து நொறுக்கி சூறையாடப்பட்டன.

மட்டக்களப்பில் இதே ஜூன் 5ம் திகதி அன்றே விரிவான ரீதியில் சத்தியாக்கிரகம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பின் பலபாகங்களிலும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான ஆண் தொண்டர்கள் இந்தச் சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றினர்.

**(வளரும்)**

---

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி - கோ.சுவாமிநாதன்

### 46. படிப்பும்–பண்பாடும்

ஒரு ஊர்லே சோமநாதர் அப்படின்னு ஒரு பெரியவர் இருந்தாராம். ரொம்ப நல்ல மனுஷன்.

அவர் கிட்டே பணம் இருந்தது. அதோட குணமும் இருந்தது அது ரொம்ப அபூர்வம்தானே!

தர்ம சிந்தனை உள்ளவர். நாலு பேருக்கு நம்மாலே முடிஞ்சதை செய்யணும்ன்னு நினைக்கிறவர்.

அவர் என்ன பண்ணினார்ன்னா... ரெண்டு பண்டிதர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு அவங்களை கௌரவிக்கணும்ன்னு நினைச்சார்.

ஞான பண்டிதர்ன்னு ஒருத்தர். ராம பண்டிதர்ன்னு ஒருத்தர். அவங்க ரெண்டு பேரையும் பார்த்து, 'கொஞ்சம் எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போகணும்!'ன்னு கேட்டுக்கிட்டார்.

'சரி'ன்னு ஒத்துக்கிட்டாங்க. ஒரு நாள் ரெண்டு பேருமே வந்து சேர்ந்தாங்க.

இந்தப் பெரியவர் அவங்க ரெண்டு பேரையும் ரொம்ப அன்பா வரவேற்றார். கூப்பிட்டு உட்கார வச்சார். விருந்துக்கு ஏற்பாடு பண்ணினார்.



அதுக்குள்ளே, அந்த ரெண்டு பண்டிதர்கள்லே ஒருத்தர் நான் முதல்லே போய் குளிச்சுட்டு வாரேன்னு புறப்பட்டார். அவரு புறப்பட்டுப் போனதுக்கப்புறம், உட்கார்ந்திருந்த இன்னொருத்தர்கிட்டே சோமநாதர் பேச்சுக் குடுத்தார்.

"இப்ப குளிக்கப் போயிருக்காரே... உங்க கூட்டாளி ஞான பண்டிதர்... அவரு பெரிய வித்துவான்- தத்துவ ஞானி அப்படின்னு ஊர் உலகமெல்லாம் பேசிக்கிறாங்களே!" அப்படின்னார்.

அப்படி அவரைப் புகழ்ந்து பேசினதை இவராலே சகிச்சிக்க முடியலே!

"ஊரு உலகத்துக்கு என்ன தெரியும் அவரைப் பத்தி? அவர் ஒரு பெரிய வித்துவான்னு சொல்லிக்கற அளவுக்கு அவர் கிட்டே என்ன இருக்கு? ஒண்ணுமில்லே! எல்லாம் வெறும் வேஷம்! உண்மையைச் சொல்லப் போனா அது ஒண்ணும் தெரியாத மாடு!" அப்படின்னு பொரிஞ்சி தள்ளிபுட்டார்.

அந்த பெரிய மனுஷன் இவர் இப்படி சொல்வார்ன்னு கொஞ்சம்கூட எதிர் பார்க்கலே!

மனம் நொந்துபோய் பேசாமே உக்கார்ந்திருந்தார்.

கொஞ்ச நேரத்துலே குளிக்கப் போயிருந்த ஞான பண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்ததும் ராமபண்டிதர் குளிக்கப் புறப்பட்டார். இவர் போனதுக்கப்புறம்- ஞான பண்டிதர்கிட்டே பேச்சுக் குடுத்தார் சோமநாதர்.

"ஏங்க.. உங்க கூட்டாளி பெரிய ஞானி போல இருக்கே?" அப்படின்னார்.

இதைக் கேட்டதும் அவர் முகம்வாடிப் போச்சி!

"யாருங்க ஞானி? அவரா-ஞானி? அவரைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது போல இருக்கு! அது ஒரு மோசமான கழுதை!" அப்படின்னார்.

இதைக் கேட்டதும் அந்த பெரிய மனுஷன் இன்னமும் நொந்து போனார். பதில் எதுவும் சொல்லலை! பேசாமே இருந்தார்.

சாப்பாட்டு நேரம் வந்தது!

குளிக்கப் போயிருந்தவரும் வந்து சேர்ந்தார்.

அந்தப் பெரியவர் இவங்க ரெண்டு பேரையும் கூப்பிட்டுக்கிட்டுப் போய் உக்கார வைச்சார். அவங்களுக்கு முன்னாடி ரெண்டு தட்டை வைச்சார். ஒரு தட்டிலே புல்லு... ஒரு தட்டிலே தவிடு... கொண்டாந்து வச்சார்! இதைப் பார்த்தவுடனே அந்தப் பண்டிதர்களுக்கு கோவம் வந்துட்டுது!

"எங்களை என்ன மிருகம்ன்னு நினைச்சுட்டீங்களா? எங்களை இப்படி அவமானப் படுத்தறதுக்கா உங்க வீட்டுக்குக் கூப்பிட்டீங்க?"ன்னு சொல்லி சத்தம் போட ஆரம்பிச்சுட்டாங்க!

"அய்யய்யோ... அப்படியெல்லாம் நினைச்சுடாதீங்க. நீங்க ரெண்டு பேரும் பண்டித மணிகள்... உங்க வார்த்தைக்கு மரியாதை குடுத்தேன்... அவ்வளவுதான்!

நீங்க தான் அவரை மாடு-ன்னீங்க! அவருதான் உங்களை கழுதை-ன்னார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத்தான் உங்க முன்னாடி வச்சேன்! முதல்லே நான் உங்களை பண்டிதர்கள்ன்னு நினைச்சு விருந்துக்கு ஏற்பாடு பண்ணினேன்.

நீங்க இங்கே வந்த பிறகுதான் நீங்க யாருங்கறதை உங்க மூலமாவே புரிஞ்சிக்கிட்டேன்! அதுக்கப்புறம் அதுக்குத் தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு பண்ணினேன்! அவ்வளவுதான்!"னார்!

இந்த உலகத்துலே நாமெல்லாம் அதிகம் படிச்சுட்டா மட்டும் போதாது! பண்பாடு வேணும். அதுதான் முக்கியம். அதை புரிஞ்சிக்கறதுக்குத்தான் இந்தக் கதை.

இப்பவும் நம்மள்ளே பல பேர் அடிக்கடி மிருகங்களைச் சம்பந்தப்படுத்திப் பார்க்காமே இருக்க முடியறதில்லே!

ரெண்டு நண்பர்கள் பேசிக்கிட்டாங்க.

"உன்கிட்டே நான் சிநேகிதம் பண்ணினதுக்குப் பதிலா ஒரு எருமை மாட்டுக் கிட்டே சிநேகிதம் பண்ணியிருக்கலாம்!"ன்னார் ஒருத்தர்.

"பண்ணியிருக்கலாம்! ஆனா அதுக்கு எருமை மாடு சம்மதிக்கணுமே!"ன்னார் அடுத்தவர்!

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## லாரா கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு?



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் 2 முறை சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ள மேற்கு இந்தியத் தீவு அணி தற்போது கிரிக்கெட் தர வரிசையில் பின்வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சோதனையில் தத்தளித்த மேற்கு இந்தியத் தீவு அணிக்கு புத்துணர்வு கொடுக்கும் வகையில் நம்பிக்கை நாயகன் பிரைன் லாரா சமீபத்தில் நடந்த போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்று இலங்கைக்கு எதிராக அதிகமான ஓட்டங்களைப் பெற்றார்.

அத்தப்பத்து இடித்ததில் லாராவின் இடது முழங்கையில் பலத்த அடிபட்டது. இதில் இடது முழங்கை இடம்மாறி உள்ளது. இதற்கான சிகிச்சை தற்போது அளிக்கப்பட்டு வந்தாலும், சிகிச்சை குணம் அடைந்து லாரா அவ்வளவு சீக்கிரத்தில் போட்டிகளில் கலந்து கொள்வது என்பது நடக்காத ஒன்று. குறைந்தபட்சம் இதற்கு 2 மாதங்கள் ஆகும். அப்படியே கையில் ஏற்பட்டுள்ள காயம் குணம் அடைந்து கிரிக்கெட் போட்டிகளில் லாரா கலந்து கொண்டாலும், முன்பு போல் அவரால் வேகமான ஷாட்டுகளை ஆட முடியாது என்று கூறப்படுகிறது. இதனால் இத்தோடு லாராவின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விடுமோ? என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டுள்ளது.

இடது முழங்கை இடம் மாறி உள்ளதால் மேற்கு இந்தியத் தீவு வீரர் லாரா கிரிக்கெட் போட்டிகளில் ஆடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விடுமோ? என்ற அச்சம் உருவாகி உள்ளது.

## ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு நடுவில்
## ஒருநாள் போட்டிகளை நடத்த உத்தேசம்



கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக மிக நீண்டகாலம் நடைபெற்று வரும் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் அடுத்த வருட இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. 5 போட்டிகள் இத்தொடரில் இடம் பெறவுள்ளன.

இவற்றில் மூன்றாவது போட்டிக்கும் நான்காவது போட்டிக்கும் இடையே முக்கோண ஒரு நாள் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இதற்காக 3வது 4வது டெஸ்ட் போட்டிகளுக்கு இடையே 23 நாட்கள் இடைவெளி ஏற்பட்டுள்ளது. ஆஷஸ் கிரிக்கெட் தொடருக்கு இடையே ஒரு நாள் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு நாள் சுற்றுப் போட்டியை முடிப்பதற்கு வசதியாக டெஸ்ட் தொடரை இரண்டாகப் பிரிக்க நேர்ந்தது. "ஆஸி, இங்கிலாந்து அணிகளுடன் இலங்கை அணியும் இந்த ஒரு நாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ளது." இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை யின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லன்ட் கூறினார்.

அடுத்தவருட ஆஷஸ் தொடரின் முதல் போட்டி நவம்பர் 7முதல் 11ஆம் திகதிவரை பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது. 5வது போட்டி ஜனவரி 2 முதல் 6ஆம் திகதிவரை சிட்னியில் நடைபெறும்.

இப்போட்டிகளுக்காக ஒக்டோபர் மாதம் இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

## இலக்கிய நயம்

தருவது முழுடில்யன்

# தவத்தைக் கலைத்த வித்தை!

மல்லாந்து கூரையை வெறித்துப் பார்த்தபடி கிடந்தான் வருணன். இமை வெட்டாத அவன் விழிகளுக்குள் ஆழ்ந்த சிந்தனை படிந்து கிடந்தது.

அருகில் படுத்திருந்த நந்தினி சற்றே ஒருக்களித்து அவன் முகத்தைப் பார்த்தாள். எவ்வித சலனமுமின்றி தீவிரசிந்தனையிலாழ்ந்து கிடக்கும் அவன் விழிகளைத் தன் விழிகளால் திருப்பிக் கவ்விக் கொள்ள முடியாத தோல்வியில் சலிப்புற்றாள்.

"ம்" என்று சற்றே ஒலியெழுப்பவும் செய்தாள். அதற்கும் கலையாத அவன் தவத்தைக் கண்டு துணுக்குற்றவளாய், ஓசையெழும்ப உடலை அசைத்துப் படுக்கையில் புரண்டாள்.

கை வளையல்களும், கால் கொலுசுகளும் தாபத்தோடு சப்தித்தன. கூடவே முனகலும் பிறந்தது.

வருணன் தவம் கலைந்தது.

உடலை அசைக்காது முகத்தைத் திருப்பி அவளைப் பார்த்தான்.

இருவரும் மட்டுமே தனிமையில் படுத்திருக்கும் அலட்சியத்தில் அங்கங்கே கலைந்துகிடந்த சேலையைப் பொருட்படுத்தாது விட்டேற்றியாக எடுத்துப் போடப்பட்ட பொருள்போல அவள் கிடந்தாள். அங்கங்கே தெரிந்தும் முடியும் கிடந்த அழகுகள் அவனைச் சலனப்படுத்தின.

அவன் விழிகளைத் துவம்சம் செய்யும் விதத்தில் நெடிய பெருமூச்சொன்றினால் தன் அழகுகளைத் தாலாட்டினாள்.

தங்கள் சுதந்திரத்தை உணர்ந்து கொண்டு அதைப் பரிபூரணமாக அனுபவித்துக் கொள்ளும் ஆனந்தத்தில் அசைந்த அந்த எழுச்சிகளால் நிலை தடுமாறிய வருணன் தன் கண்களை அங்கேயே காட்டினான்.

இவன் பார்வை சென்ற இடத்தைக் கவனித்தவள், அவனைப் பைத்தியமாக அடிக்கும் முயற்சியில் படுத்திருந்த படியே கைகளைத் தலைக்கு மேலே உயர்த்திச் சோம்பல் முறித்தாள்.

அதிபயங்கரமான ஒரு காட்சிப்பயங்கரத்திற்குத் தன் கண்களை அனுமதித்துவிட்ட அதிர்ச்சியில் அவளை நோக்கித் திரும்பினான். பார்வையை விலக்கிக்கொள்ள மனதை உந்தியும், அது முடியாமற்போக அசட்டுத்தனமான ஓர் இளிப்பை அவனறியாமல் வெளிப்படுத்தினான்.

வெற்றிப் பெருமிதத்தோடு இப்போது அவள் தன் அழகுகளைப் படுக்கையில் சரிய விட்டாள். அவள் கூந்தல் கன்னம் வழியே கறுப்பாகக் கரைந்து ஒழுக, மீந்த இடங்களில் வெண்மை பளீரிட்டது. ஒரு சிவப்புப் பழம்போலக் கவிந்திருந்த உதடுகள் 'மு..' என்று எதையோ சொல்ல ஆரம்பித்த நிலையில் இருப்பதாக வருணனுக்குப் பட்டது.

கண்கள் விஷமம் கொட்டின.

வெளிகொண்டவன் போல் அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

எதற்காகத் திமிறுகிறோம் என்று அவளும்கூட ஆச்சரியப்பட்டாள்.

அவன் பிடியை மேலும் இறுக்கிக் கொண்டே,

"என் உடம்பு முழுவதும் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு பசையாக உன்னை ஆக்கிவிடுகிறேன் பார்!" என்றான்.

"ஹூம்" என்று மேலும் பிரமாதமாகத் திமிறினாள், ஏன் என்று தெரியாமலே.

"ஆ.. வலிக்கிறது!" என்று கத்தவும் செய்தாள்.

"சற்று முன்னர் படுத்துக் கிடந்தபடி அப்படியும் இப்படியுமாக நெளித்து, எனக்குத் தந்த வலிகளை விடவா?" என்று கேட்டபடி மேலும் இறுக்கினான் அந்த உன்மத்தன்.



அவள் பலங்கொண்ட மட்டும் தன் கைகளால் அவனைத் தள்ளினாள்.

அந்த எதிர்ப்பையே சாக்கிட்டு அவளை முழுமையாகப் பரவினான் அவன்.

வெறி அடங்கும் வரை அவளை இம்சைப்படுத்துவதில் திருப்தி கண்டான்.

ஒரு பலத்த பெருமழையின் ஓய்வு போல இருவரும் அடங்கினார்கள்.

இப்போது அவளை விட்டு விலகிக் கிடந்தான் அவன்,

அவள் அவனையே பார்த்தவாறு ஒருக்களித்துக் கிடந்தாள்.

சற்று நேரத்தில் அவன் எழுந்து குளியலறைக்குள் சென்று குளித்துத் திரும்பினான்.

அவள் பார்வையால் அவனையே விழுங்கிக் கொண்டிருந்தாள்.

நிதானமாக உடைமாற்றிக் கொண்டவன் ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மேசையின் முன்சென்று அமர்ந்தான்.

அவன் தன்னிடம் வராதது அவளுக்கு ஏமாற்றமளித்தது. அதைவிட, அவன் கண்களைத் தன் விழிகளால் இழுத்துத் திருப்ப முயன்று தோல்வியடைவதில் சலிப்பானாள்.

கோபம் கொண்டவளாக மறுபுறம் திரும்பிப்படுத்தாள்.

மீண்டும் தலையை மட்டும் திருப்பி அவனைப் பார்த்தாள்.

அவன் மும்முரமாகப் படிப்பில் ஈடுபட்டிருந்தான். தலையணை ஒன்றை எடுத்து அவனை நோக்கி வீசலாமா என்று யோசித்தாள்.

பிறகு மனதை மாற்றிக் கொண்டவளாக அவனையே பார்த்தபடி குப்புறப்படுத்திருந்தாள்.

தன்னை இரு கண்கள் விழுங்கிக் கொண்டிருப்பது அறியாமல் அவன் புத்தகத்தில் மூழ்கியிருந்தான்.

**பேணாது பெட்பவே செய்யினும்**
**-கொண்கனைக்**
**காணா தமையல கண்.**

*(குறள்: 1283)*

## சிந்தியா பதில்கள்

★ **"இனப்பிரச்சனைக்கு நியாயபூர்வமான தீர்வு காணாவிட்டால், தன்மானமுள்ள தமிழன் அடுத்த பாராளுமன்றம் வரமாட்டான்" என்று இரா.சம்பந்தன் எம்.பி.பேசியிருக்கிறாரே?**

சி.ராஜ்மோகன், கொழும்பு-06.

*சம்பந்தருக்கு வயதாகிவிட்டது. தமிழர்களின் தன்மானம் காக்க அடுத்த முறையும் பாராளுமன்றத்திற்கு வரவேண்டியிருக்கும் 'இளைய' கட்சிக்காரர்களை இப்படியொரு சங்கடத்தில் மாட்டி, கொடுப்புக்குள் சிரித்து ரசித்துக் கொள்வது, என்ன தானிருந்தாலும் ஒரு மூத்த தலைவருக்கு அழகல்ல.*

★★

★ **மறைந்த நடிகர் திலகத்திற்கு 'பாரத ரத்னா' கொடுத்துவிட்டார்களா?**

இர்ஷாத், காத்தான்குடி.

*அதெல்லாம் உடனே நடந்தால் சரி. இல்லாவிட்டால் அதைவிட தேசிய அளவில் முக்கியமான வேறொரு நடிகரின் மறைவு, இதைப்பற்றிப் பேச விடாமல் தடுத்துவிடும். ஒரு ஆறுதல் செய்தி, சிவாஜிக்கு அவர் குடும்பத்தினரும் நண்பர்களும் நினைவாலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மகத்தான கலைஞனை வருங்காலத்தினரும் முழுமையாகத் தெரிந்துகொள்ளும் படியான ஆவணங்களையெல்லாம் அங்கே காட்சிக்கு வைக்கப் போகிறார்கள்.*

★★

★ **எப்போதும் சிரியுங்கள். துன்பத்திலும் சிரிக்க வேண்டும் என்கிறார்கள். எப்போதும் சிரிப்பது சாத்தியமா சிந்தியா?**

நஸ்லியா நௌசாட், நிகொள்ள.

*சரி, சாத்தியப்படும் போதெல்லாமாவது சிரியுங்கள். 'சிரிப்பதற்குள்ள சந்தர்ப்பங்களை நான் ஒருபோதும் தவறவிடுவதில்லை. கடவுளின் ஒரு பிரத்யேக அனுக்கிரகமல்லவா சிரிப்பு!'-சொன்னவர் வைக்கம் முகம்மது பஷீர்.*

★★

★ **பிரசாந்தின் 'மஜ்னு' எப்படி?**

அ.ஹரி, காரைதீவு-05.

*பிரசாந்தை விடுங்கள். அவருக்குத் தந்தை மட்டுமே நடிகர். (அவரும் விழிகளை உருட்டி மிரட்டியதேயல்லாமல் நடித்துக் கலவரப்படுத்தியதில்லை.) ஆனால் தந்தை, தாய், தமக்கை, மைத்துனர் என்று முழுக் குடும்பமுமே நடிகர்களாயிருக்கும் பின்னணியிலிருந்து வந்திருக்கும் அந்த வட இந்தியக் குட்டிப் பெண், முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டப் படும் சிரமத்தைப் பார்க்கையில் 'ஐயோ ஐயோ' என்று பரிதாபமே!*

★★

★ **காதல் தோல்வியால் நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். என்னால் இதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. மிகவும் வேதனையிலிருக்கிறேன். உங்களால் எனக்கு உதவ முடியுமா?**

த.பிரபு, அச்சங்குளம்.

*காதல் நோய்க்கு ஒரே ஒரு மருந்துதான் உள்ளது. உடனே திருமணம் செய்து கொள்ளுங்கள். அதன்பிறகு நீங்கள் காதலிக்கவே விரும்ப மாட்டீர்கள்.*

★★

★ **அன்பில்லாதவர்களைப் பற்றி என்ன கூறுவீர்கள்?**

இஸ்மாயில் எம்.அலி, புல்மோட்டை-01.

*அன்பும் சிலசமயம் ஏமாற்றாக இருக்கும் மனிதர்களுக்குத் தேவை பரஸ்பர மதிப்பு.*

★★

★ **பெண்களின் பிடியிலிருந்து தப்ப ஓர் ஆலோசனை சொல்ல முடியுமா?**

கே.ரமேஷ், பொத்துவில் நகர்.

*ஹூம்... உந்த மாதிரிக் கேட்க எனக்கும் தான் ஆசை! நம்மை யாரும் பிடித்துக் கொள்கிறார்களில்லையே என்ற கவலையை வேறு எப்படி ஆற்றுவது!*

★★

★ **ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்...?**

எ.ஃப்.கிறிஸ்டோ, தெகிவளை.

*நம் பிள்ளையை நுவரெலியா வளர்க்குமாக்கும்!*

★★

★ **தலை மன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே தரைப்பாதை வரப் போகிறதாமே?**

வி.மஞ்சுளா, வவுனியா.

*கூடவே வவுனியா-யாழ்ப்பாணம் தரைப்பாதையும் திறக்குமாக இருந்தால்... வரட்டும் நல்லதுதான்.*

★★

★ **சமாதானப் பேச்சுக்கள் முறிந்து மீண்டும் சண்டை தொடங்கிவிட்டால் தமிழ்க் கூட்டமைப்பினரின் நிலை என்னவாக இருக்கும்?**

எம்.மைத்ரேயன், திருகோணமலை.

*ரணில் கெட்டவராகி, சந்திரிகா நல்லவராகி, தன்மானத்துடன் வாழ வேண்டுமானால் தமிழர்கள் எல்லோரும் அரசாங்கத்தை மாற்ற வாக்களிப்பதற்குத் தயாராக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.*

★★



பிரசாந்த்-ரிங்கி கண்ணா (படம்:மஜ்னு)

★ **சில நாடுகளில் நள்ளிரவிலும் சூரியன் தெரியுமாமே, உண்மையா?**

த.மகாலட்சுமி, கொழும்பு-13.

*சூரியன் தெரிந்தால் அது எப்படி இரவாகும்! அந்த நாடுகளில் இரவு குறைவு அவ்வளவுதான்.*

★★

★ **சினிமா உலகில் ஆண்கள் திருமணத்திற்குப்பின்னும் நடித்து வருகிறார்கள். ஆனால் நடிகைகளுக்கு அந்த வாய்ப்பு ஏன் கிடைப்பதில்லை?**

சிவகலா, பதுளை.

*நம்மில் பலர் அவர்களிடம் நடிப்பை எதிர்பார்த்துப் போவதில்லை என்ற காரணத்தால்.*

★★

★ **இனரீதியாக மக்கள் பிளவுபட்டிருப்பதற்கு யார் காரணம்?**

கே.அக்கீத், செட்டிகுளம்.

*மூன்று மனிதர்கள், யாருடைய தொழில் மிகவும் பழமையானது என்று விவாதித்துக்கொண்டிருந்தனர்.*

*மூவரில் ஒருத்தரான மதகுரு கூறினார்:*

*"என்னுடைய தொழில்தான் மிகவும் பழமையானது. மனிதனின் முதல் செயலே கடவுளிடம் பிராத்தனை செய்து தன் நன்றியைத் தெரிவித்ததாகும்!"*

*உடனே இரண்டாவது ஆள் கூறினார்:*

*"இல்லையில்லை. என் தொழில்தான் மிகவும் புராதனமானது. கடவுள் பெண்ணை உருவாக்குவதற்காக ஆணின் உடம்பிலிருந்து ஒரு எலும்பை எடுத்தார். அதுதான் முதலில் நடந்த அறுவைச் சிகிச்சை, அதே தொழிலைச்செய்யும் மருத்துவன் நான். கடவுள் செய்த அந்த அறுவைச் சிகிச்சைக்கு முன்பு உலகில் கலவரம் மட்டும்தான் இருந்தது!"*

*மூன்றாவது மனிதன் சிரித்துக் கொண்டே கூறினான்:*

*"சரியாகச் சொன்னீர்கள். நீங்கள் குறிப்பிட்டபடி என் தொழில்தான் புராதனமானது. ஆதியிலிருந்தே நடந்து வருவது கலவரம் தான்! அதை உருவாக்கியது யார் என்று நினைக்கிறீர்கள்?" என்று பெருமிதத்தோடு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான் அந்த அரசியல்வாதி.* ●

# மன்னாதி மன்னன்

87

## ஆடையில் எழுந்த நறுமணம்


விக்கிரமாதித்த மன்னனுடைய காடாறு மாத வாழ்க்கை ஆரம்பமானதை முன்னிட்டு அமைச்சர் பட்டியையும் அழைத்துக் கொண்டு தேசாந்திரம் புறப்பட்டார். துங்கபாத்ரா நதியைக் கடந்து இருவ்ரும்அம்பாள்புரியை அடைந்தனர்.

நடத்தை கெட்டவள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு, அந்த நகரத்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் சடலம் அழுகிய நிலையில் ஆற்றங்கரையில் கிடந்தது. தண்ணீர் எடுப்பதற்காக நதிக் கரைக்கு வந்த இரு சகோதரிகளான முத்து நாயகியும் அவள் தங்கை பவளக்கொடியும் பிரேதத்தைக் கண்டபோது, அதனைப் பார்த்து மூத்தவளான முத்து நகை அழுவதைக் கண்ட தங்கை பவளக்கொடி, "செய்யத் தெரியாமல் செய்து அகப்பட்டுக் கொண்டமையினால் அவள் கொல்லப்பட்டுள்ளாள். இதற்காக நீ ஏன் அழவேண்டும்?" என்று தமக்கையைத் தேற்றுகிறாள்.

வயதில் சிறியவளான அப்பெண் கூறிய வார்த்தைகள் விக்கிரமாதித்த மன்னனை வியப்புக்குள்ளாக்கியது. 'இப்பெண்ணுக்கு இத்தகைய வார்த்தைகளைக் கூறும் அளவு அறிவு எவ்வாறு கிடைத்திருக்க முடியும்?' என்று எண்ணத் தலைப்பட்டார். அப்பெண்ணின் அழகும் மன்னரைக் கவர்ந்தது. எனவே 'அவளை மணம் முடித்து அவளிடம் மண்டிக்கிடக்கும் இரகசியங்களை அறிய வேண்டும்' என்று எண்ணமிட்டார்.

மாமன்னரும் மந்திரியும் இரத்தின வியாபாரிகள் போல் வேடமிட்டுக் கொண்டு நகருக்குள் சென்று விலையுயர்ந்த இரத்தினங்களை வியாபாரம் செய்தனர். முத்து நாயகி மற்றும் பவளக்கொடி ஆகிய இருவரைப் பற்றியும் அமைச்சர் பட்டி, வழிப்போக்கர் சிலரிடம் விசாரித்து அறிந்தார். அம்பாள்புரியில் நகை வியாபாரம் செய்யும் முத்துமாணிக்கம் செட்டியின் புதல்விகள் என்று அறிந்து கொண்டனர்.

தாங்கள் இருவரும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இரத்தின வியாபாரிகள் என்று முத்த



மாணிக்கம் செட்டியிடம் அறிமுகப்படுத்திக் கொண்டனர். முத்துமாணிக்கம் செட்டி அவர்கள் இருவரையும் தன்னுடைய விருந்தினர் மாளிகையில் வந்து தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டார். அன்றிரவு முத்துமாணிக்கம் செட்டி தன்னுடைய இல்லத்தில் இருவருக்கும் விருந்தளித்தார். முத்துமாணிக்கம் செட்டியின் புதல்விகள் இருவருமே இரத்தின வியாபாரிகளாக வேடம் புனைந்து வந்திருந்த விக்கிரமாதித்தனுக்கும் பட்டிக்கும் உணவு பரிமாறினர்.

உணவு பரிமாறிக் கொண்டிருந்த வேளையில் விக்கிரமாதித்த மன்னரின் கண்கள் தனது மகள் பவளக்கொடி மீது வாஞ்சையுடன் படர்வதை முத்துமாணிக்கம் செட்டி அவதானித்தார். மகளுடைய அபிப்பிராயத்தையும் கேட்டறிந்து கொண்டார்.

பவளக்கொடியும் விக்கிரமாதித்த மன்னனை விரும்புவதை அறிந்து கொண்டதும் இருவருக்கும் முத்துமாணிக்கம் செட்டி ஒரு நல்ல நாளில் திருமணம் முடித்து வைத்தார்.

சில நாட்கள் முத்துமாணிக்கம் செட்டியாரின் விருந்தினர் மாளிகையிலேயே விக்கிரமாதித்தனும் பட்டியும் பவளக்கொடியும் தங்கியிருந்தனர். இரவானதும் படுக்கைக்குச் செல்லும் போது மஞ்சத்தில் பவளக்கொடிக்கு அருகில் விக்கிரமாதித்தனும் பட்டியும் ஒன்றாகவே படுத்திருந்தனர். அவளுடைய நடைமுறைகளைச் சோதிப்பதற்காகவே அவளுக்கு இரு புறமும் எதுவிதமான வார்த்தையும் பேசாமல் இருவரும் படுத்திருப்பார்கள்.

சில நாட்கள் சென்ற பின்னர் பவளக்கொடியையும் அழைத்துக் கொண்டு ஊர் திரும்பப் போவதாகப் புறப்பட்டார்கள். முத்துமாணிக்கம் செட்டி தனது மகளுக்கு ஏராளமான சீர் வரிசைகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவர்கள் வரும் வழியில் ஒரு பாழடைந்த கோட்டை கண்ணில் பட்டது. அக்கோட்டையின் முன்புறமாக ஒரு பெரிய பூட்டுத் தொங்கியது. எதிரே வந்த வழிப்போக்கரிடம் "இந்தக் கோட்டையின் வரலாறு என்ன" என்று கேட்டனர்.

அந்தக் கோட்டையின் வரலாறு இது தான்; இந்த ஊரின் பெயர் காலகண்டபுரம். கார்த்திகை வர்மன் என்ற அரசன் இந்தக் கோட்டையை ஆட்சி செய்து வந்தான். அவனுடைய ஆட்சியின் கீழ் குடிமக்கள் எந்த விதமான துன்பங்களும் இல்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தனர். இருப்பினும், கார்த்திகை வர்மனுக்குப் பின்னர் கால கண்டபுரத்தை ஆட்சி செய்வதற்கு ஒரு வாரிசும் பிறக்கவில்லையென்பதனால் மன்னன் பெரும் கவலையடைந்தான். எத்தனையோ தான தர்மங்கள் செய்தும் மன்னனுக்குப் பிள்ளைகள் எவரும் பிறக்கவில்லை.

வயது முதிர்ந்த பருவமடைந்ததும் கார்திகை வர்மன், இனிமேல் தனக்கு பிள்ளைகள் எவரும் பிறக்கப் போவதில்லை என்பதையறிந்து நாட்டு மக்கள் எல்லோரையும் கோட்டையை விட்டு வெளியேறுமாறு பணித்தான். பின்னர் கோட்டை வாயிலில் ஒரு பெரிய பூட்டை பூட்டி விட்டு மன்னனும் மரணமடைந்தான். கோட்டையைப் பூட்டும் போது "விக்கிரமாதித்த மகாராஜா என்பவரால் மட்டுமே இந்தப் பூட்டைத் திறக்க முடியும்; அவரைத் தவிர வேறு எவர் வந்து பூட்டைத் திறந்தாலும் இந்தப் பூட்டு திறபட மாட்டாது?" என்று சாபமிட்டிருந்தார்.

இராஜகுமாரன்

அக்கோட்டையைப் பற்றி வழிப் போக்கர் மூலம் இக்கதையைத் தெரிந்து கொண்ட விக்கரமாதித்த மன்னனும்அமைச்சர் பட்டியும் வியப்படைந்தனர். விக்கரமாதித்த மன்னன் தான் கேள்விப்பட்ட கதை உண்மையாக இருக்குமா என்பதை பரிசோதித்து அறிய அந்தப் பூட்டைத் தொட்டார். உடனே அப்பூட்டு திறந்து கொண்டது. பவளக் கொடியையும் அழைத்துக் கொண்டு கோட்டையினுள்ளே சென்றனர். கோட்டையின் வாயிலில் வேதாளத்தை அழைத்து காவலுக்கு இருக்கும் படி கூறிவிட்டு மூவரும் உள்ளே சென்று பல இடங்களையும் பார்வையிட்டனர்.

அரண்மனைகள், அந்தப்பரம் ஆகிய அனைத்திலுமே சகல வசதிகளும் நிறைந்து காணப்பட்டன. அங்கெல்லாம் பல ஆண்டுகள் எவரும் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் இல்லாவிட்டாலும் அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் எப்பொழுதுமே அங்கெல்லாம் எவரோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ச்சியடைந்த விக்கிரமாதித்த மன்னன் இம்முறை தன்னுடைய காடாறு மாத வாழ்க்கையை இங்கேயே கழித்துவிடலாம் என்று கருதினார். அமைச்சர் பட்டியும் இதற்குச் சம்மதித்தார்.

காலையில் விக்கிரமாதித்த மன்னனும் அமைச்சர் பட்டியும் கோட்டைக்கு வெளியேயுள்ள காட்டுக்கு வேட்டையாடச் சென்று விடுவார்கள். பவளக் கொடி மட்டும் அந்தப்புரத்தில் தனியாக இருப்பாள். கோட்டைக்குள் வேறு எவரும் உள்ளே வராதபடி வேதாளம் காவல் காக்கும். விக்கிரமாதித்த மன்னனும் அமைச்சர் பட்டியும் வேட்டையாடிவிட்டு மாலை வேளையில் தான் அந்தப்புரம் திரும்புவார்கள். பவளக் கொடி தான் சமைத்த உணவை இருவருக்கும் பரிமாறிவிட்டு தானும் உண்பாள்.

இரவு படுக்கைக்குச் சென்றதும் வழக்கம்போல் மஞ்சத்தின் நடுவே பவளக்கொடி படுத்திருக்க அவளுடைய இருபுறத்திலும் இருவரும் படுத்திருப்பார்கள். ஆனால் மூவரில் எவரும் ஒரு வார்த்தைதானும் பேச மாட்டார்கள்.

மூவருடைய அழுக்குத் துணிகளையும் வெளுத்துக் கொண்டு வருவதற்காக கோட்டைக்கு வெளியே இருந்த ஒரு பெண் சலவைத் தொழிலாளியை அமர்த்தினார்கள். ஒவ்வொருநாள் காலையிலும் அப்பெண் அந்தப்புரத்துக்கு வந்து அழுக்குத் துணிகளை எடுத்துக் கொண்டு போய் கழுவி அழுக்கு நீக்கிவிட்டு மாலையில் அவற்றைக் கொண்டு வந்து கொடுப்பாள்.

ஒருநாள் அப்பெண்ணுக்கு உடல் நலம் குன்றியிருந்தது. அதனால் அழுக்குத் துணிகளை அவளால் கழுவிக் கொண்டுவர முடியவில்லை. தனது வீட்டுக்குக் கொண்டு வந்திருந்த துணிகளை அவளுடைய மகனிடம் கொடுத்து நீரோடைக்குச் சென்று அவற்றை வெளுத்துக் கொண்டு வரும்படி கூறி அனுப்பினாள். அவனும் துணி மூட்டையுடன் ஓடக் கரைக்குச் சென்று அதனுள் இருந்த ஆடைகளை ஒவ்வொன்றாக வெளியிலே எடுத்தான். அவற்றுள் பவளக் கொடியின் ஆடைகளை எடுத்துப் பார்க்கும் போது அவற்றிலிருந்து எழுந்த நறுமணம் அவனை மயக்கமுற வைத்தது.

'இத்தகைய நறுமணத்தை நான் எங்கேயும் அனுபவித்ததில்லையே. இந்தப் புடவையை அணியும் அப் பெண் எத்தனை அழகியாக இருக்க வேண்டும். அவளை ஒரு நாளாவது நான் கண்ணாரக் காண வேண்டும்' என்று விரக தாபம் கொண்டான். இதே எண்ணம் அவனைப் பைத்தியம் போல் ஆக்கிவிட்டது. அப்பெண்ணைப் பற்றி சதா நினைந்து கொண்டிருந்தமையினால் சரியாக உணவு உட்கொள்ளவோ உறங்கவோ அவனால் முடியவில்லை. அவன் உடலும் மெலியத் தொடங்கியது. தன் மகனுடைய உடல் மெலிந்து போவதையும் அவன் பைத்தியம் போல் நடமாடுவதையும் கண்ட அவனுடைய தாய் மனம் வருந்தினாள். இத்தகைய கவலைக்கு என்னதான் காரணம் என்று தன் மகனையே கேட்டாள்.

அவன் உடனடியாக தன் தாயிடம் எதுவும் சொல்லவில்லை. பலமுறை அவள் தெண்டித்துக் கேட்ட பின்னர் உண்மையைக் கூறினான்.

"இத்தகைய நறுமணம் உள்ள ஆடையை அணியும் அப்பெண் எத்தனை அழகுடையவளாக இருப்பாள். அவளை ஒரு தடவையாவது நான் பார்க்க வேண்டும். இதுதான் என்னுடைய ஆசை" என்று தன் தாயிடம் அவன் தனது விருப்பத்தைத் தெரிவித்தான்.

சலவைத் தொழிலாளப் பெண் தன் மகனுடைய விருப்பத்தைக் கேட்டுப் பதறிப் போனாள். "யாரோ ஒரு நாட்டு மன்னன் அவனுடைய மனைவியை அழைத்துக் கொண்டு வந்து கோட்டைக்குள் வைத்திருக்கிறான். அந்தக் கோட்டைக்குள் வேறு எவருமே போக முடியாது. அவ்வாறிருக்கும் போது நீ எவ்வாறு கோட்டைக்குள் சென்று அப்பெண்ணைப் பார்க்க முடியும்? அது நடக்கப் போகும் காரியமல்ல. எனவே உன் கவலையை விட்டு விடு" என்று மகனை வற்புறுத்தினாள். ஆனால் அவனோ "அப்பெண்ணை ஒரு தடவையாவது நான் பார்க்காவிட்டால் என் உயிர் போய்விடும்" என்று மீண்டும் மீண்டும் அடம் பிடித்தான்.

"கோட்டைக்குள் எவருமே நுழைய முடியாது. ஆகவே உன் ஆசையை விட்டு விடுவதே நல்லது. வீணாகக் கவலைப்படாதே. அவளை மறந்து விடு" என்று தாய் மகனிடம் புத்திமதி கூறினாள். ஆனால் அவனோ "எப்படியாவது நான் கோட்டைக்குள்ளே சென்று அந்த அழகியைப் பார்ப்பதற்கு அம்மா நீ தான் வழி காட்ட வேண்டும்" என்று திடமாகக் கூறிவிட்டான். (தொடரும்)

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:..................... ஒப்பம்:...................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

**அபிமான வாசகர் போட்டியில் பதினொராவது:**
**புது வருடத்தில் பொய்யாகப் போகும் முதல் வாக்குறுதி எந்த அரசியல் வாதியின் எந்த வாக்குறுதி? முடிவுத் திகதி ஜனவரி 31**

வருஷம் பிறக்குது. வாழ்த்துக்கள், எங்கட அரசியல் வாதிகளிண்ட வாழ்த்துச் செய்திகளெல்லாம் கட்டாயம் பேப்பரில் வரும். இந்த வருஷமாவது சமாதானத்தைக் கொண்டுவராதா எண்டு வலு ஏக்கமா அறிக்கை விடுவினம். ஆனால் பாருங்கோ, வருஷங்கள் சண்டையையோ சமாதானத்தையோ கொண்டு வாறதில்லை. மனிசர் நாங்கள்தான் அதக் கொண்டு வர வேணும். இதுக்குத் தடையாயிருக்கிறதே இந்த அரசியல் வாதிகள் தான். இதே வாழ்த்தை வருஷா வருஷம் குடுத்து அவைக்கு பழக்கமாய்ப் போயிட்டுது. நான் நினைக்கிறன். இந்த மாதிரி வாழ்த்துக்கள் முன்னதாகவே தங்கட கொம்பியூட்டரில செக்கட்ரிமாரைக் கொண்டு அடிச்சு சேவ் பண்ணி வைச்சிருப்பினம். பிறகு வாழ்த்துக் குடுக்க வேணுமெண்ட உடன திகதிய மட்டும் மாத்திப் போட்டு பிறிண்டெடுத்துப் பத்திரிகைகளுக்குப் போஸ்ட் பண்ணி விட்டுடலாம்.

எல்லாம் சரி, அவை வாழ்த்திறவை வாழ்திட்டு போகட்டும். சமாதானத்தக் கொண்டுவந்து வாசலில் நிப்பாட்டிறதா வாக்குறுதியளிச்சுக்கொண்டு பாராளுமன்றம் வந்தவை இப்ப தங்களுக்குள்ளேயே சமாதானமில்லதாதவையலாத் தங்கள வெளிக்காட்டத் தொடங்கிட்டினம். இந்தக் கூட்டமைப்பாம், அதைப்பற்றித்தான் சொல்லுறன். தாங்கள் நாலுபேர் கூடி நாட்டை வழிக்குக் கொண்டு வரப்போறதா வலு வீரம் கதைச்சவை இப்ப தேர்தல் முடிஞ்சு கதிரைகளில குந்தினப் பிறகு நானோ நீயோவெண்டு சண்டை பிடிக்கிறதப் பார்த்தால் அவை சமாதானம் கொண்டு வாற கதையை விட்டுட்டு முதலில அவைக்குள்ள சமாதானம் கொண்டு வாற வழியத்தான் பாக்க வேணும்போல இருக்குது. அதிலபாருங்கோ இந்தக் கூத்தணிக் கட்சிக்கு எப்பவும் தாங்கள்தான் தலையால பிறந்த தலைவர்கள் எண்ட ஒரு தற்பெருமை! தனிச்சுக் கேட்டால் தேர்தலில தோல்வியத் தான் தாங்கள் தழுவ வேண்டி வரும் எண்டபடியாத்தான் இவை இந்த முறை சேர்ந்து கேக்க ஓமிண்டவை. ஆனால் இப்ப தேர்தலில வெண்டாப்பிறகு, இந்த வெற்றிக்கு கூத்தணியிண்ட வாக்கு வங்கிதான் காரணம், அதால கூட்டில சேர்ந்த மற்றக் கட்சியலெல்லாம் கூத்தணிக்கு நன்றி சொல்ல வேணுமெண்டு திமிரடிச்சிருக்கினம். உண்மையில அவையொண்டும் இங்க வங்கிக் கணக்கா வாக்குகள் வாங்கிச் சேர்த்து வட்டிக்கு வைப்புச் செய்திருக்கேல்ல. அவைகட்டின கூட்டுக்கு விழுந்ததே இரவல் வோட்டுத்தான்.

தாங்கள் ஏதோ ஏகப் பிரதிநிதிகளாப் புலிகள ஏற்றிருக்கிறதாக் காட்டி, தாங்கள் வெண்டால் அவைக்காக வேலை செய்வம், அவையோட பேசி சமாதானத்தக் கொண்டு வரச் செய்வம் எண்ட கதையளச் சொல்லி, அவையிண்ட அனுமதியோட அவையிண்ட கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கயும் போய் பிரசாரம் செய்து, அவையே நேரா இவைக்கு வாக்குப் போடுங்கோவெண்டு சொல்லித்தான் ஒரு மாதிரி இப்பிடி வெண்டு வந்திருக்கினமெண்ட உண்மையத் தாங்களே இப்ப மறந்துபோய் வெற்றிப் பெருமையில தலை கால் புரியாமல் கதைக்கினம். இப்ப தங்கட கூட்டில இருக்கிறவையத் தங்கட வாக்கு வங்கிக்கு நன்றி சொல்ல வேணுமெண்டு சொல்லுற கூத்தணி நாளைக்கு ஒருவேளை ஏதும் சமாதானப் பேச்சுக்களோ, அரசியல் தீர்வோ வந்திட்டால் அதுக்கு புலிகளும் தங்களுக்கு நன்றி சொல்ல வேணுமெண்டு சொன்னாலும் சொல்லுவினம்போல கிடக்குது. மற்றவையல் தங்களுக்கு நன்றி சொல்ல வேணுமெண்ட நினைப்ப விட்டுட்டு தாங்கள் மக்களுக்கு நன்றியுணர்வோட நடக்க வேணும் எண்டதயல்லோ உணரவேணும். அத விட்டுட்டு இப்ப கதிரையில குந்த முன்னமே தங்களுக்க சண்டை பிடிக்கத் துடங்கிட்டினம். டெலோ, ஈபி.ஆர்.எல்.எப். போன்ற கொலைகாரக் குழுக்களோட கூட்டுச் சேர்ந்ததில தங்களுக்கு விருப்பமில்லையெண்டு இப்பதான் அருவருக்கினம் இந்தக் கூத்தணி.

அப்பபாருங்கோ, நாளைக்கு புலிகளையும் இதேமாதிரிச் சொல்ல மாட்டினமெண்டது என்ன நிச்சயம்? அப்ப ஏனாம் புலிகள்தான் ஏக பிரதிநிதிளெண்டும், புலிகளோட மட்டும்தான் பேசவேணுமெண்டும் பிரசாரம் செய்தவை? அவையிண்ட பெயருகளையும் பலங்களையும் பாவிச்சு தாங்கள் எம்பியா வந்திட்டால் போதும், பிறகு அவையத் தூக்கியெறிஞ்சிடலாம் எண்ட உள்ளெண்ணம்தான் உவைக்கிருக்குதெண்டது சனத்துக்குத் தெரியாட்டாலும் தெரிய வேண்டியவைக்குத் தெரியும். இண்டைக்கு டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் எல்லாம் வீக்காப் போன கட்சிகளெண்டதால அவையக் கொலைகாரரெண்டு துணிஞ்சு சொல்ல ஏலுமாயிருக்கிற கூத்தணிக்காரருக்கு தங்கட தலைவர்மாரான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், தங்கதுரை, சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் எண்டவையையெல்லாம் கொலைசெய்தவை கொலைகாரரில்லையெண்டு சொல்ல ஏலுமே? அல்லது, அந்தக் கொலைகளெல்லாம் தங்கட துரோகத்துக்கு விழுந்த சரியான தண்டனைகள் தான் எண்டு ஏற்றுக்கொள்ள முடியுமோ நாளைக்கு புலிகள் வீக்காப்போனால் அவையலப்பாத்துக் கொலைகாரர் எண்டு சொல்லப்போற முதலாவது ஆட்கள் இந்தக் கூத்தணியினராத் தான் இருப்பினமெண்டது இப்ப விளங்குதெல்லே.

கொலைகளைப் பற்றிக் கதைக்கிறவை, முந்தித் தாங்கள் துரோகி, துரோகியெண்டு சொல்லி, துரையப்பா முதல் தங்கட அரசியல் எதிரிகளைக் கொலைசெய்ய வைச்சதை எந்தக் கணக்கில எடுக்கினம்? இது ஒருபக்கமிருக்க, இப்ப மற்றொரு குத்துக்கரணம் அடிக்கவும் வெளிக்கிடினம். தாங்கள் ஒற்றுமையா வந்திருக்கிறம் வாக்குத்தாங்கோவெண்டு பிச்சை கேட்டவை, இப்ப இந்தக் கூட்டுக் கட்சியை ஒரு பொதுக் கட்சியாக்கிற கதை வந்தவுடன பல்டியடிக்கினம். அப்பிடி பொதுக்கட்சியா வந்தால் தங்கட தங்கட சொந்த ஆதரவெல்லாம் போயிடுமாமெண்டு கூத்தணிக்காரரும் கொங்கிரஸ் காரரும் கூச்சல் போடினம். அப்பிடி சொந்த ஆதரவில நம்பிக்கையில்லாததாலதானே கூட்டாக் கேட்டவை. இதுபாருங்கோ, இப்ப கூட்டாக் கேட்டு வெண்டிட்டனமெல்லே, அந்த வெற்றிய தங்கட சொந்தக் கட்சிக்கான வெற்றியா மாத்திப் போடவேணுமெண்ட கடைகெட்ட ஆசையேதவிர வேற ஒண்டுமில்லை. ஏதோ ஒரு பாட்டுச் சொல்லுவினமெல்லே, நந்த வனத்திலோராண்டி, அவன் நாலாறுமாதமாய்க் குயவனை வேண்டி, கொண்டு வந்தானொரு தோண்டி, அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி! யெண்டு. அந்தக் கதிதான் இந்தக் கூட்டுக்கும் வரப்போகுதெண்டது நிச்சயமாப் போட்டுது. சரி நடக்கிறதப் பாப்பம்.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657

உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவர் பற்றி அறியாத ஆசிய நாட்டவர் இருக்க முடியாது! சிதறியிருந்த சிறிய குடியரசுகளை ஐக்கியப்படுத்த ஆட்சி செய்த முதலாவது மன்னனான கின் ஷிஹுவாங்தி யினால் கி.மு.220ம் ஆண்டுகளிலேயே சீனப்பெருஞ்சுவர் முதலில் நிர்மாணிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. மொங்கோலிய படையெடுப்புகளில் இருந்து சீனாவை பாதுகாக்க வடமேற்கு திசையில் நிர்மாணிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவரின் கட்டடப் பணிகளுக்காக சுமார் மூன்று இலட்சம் பேர் பயன்படுத்தப்பட்டனர். சிறு, சிறு பகுதிகளாகவிருந்த சுவரை பிற்காலத்தில் தோன்றிய இரண்டு மன்னர்கள் ஒன்றிணைத்து நிர்மாணித்தனர். கி.பி.607ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பாரிய திருத்த வேலைகளின் பின்னர் தற்போதைய நிலைக்கு சுவர் கட்டியெழுப்பப்பட்டது. இதனை கண்ணீர் சுவர் என்றும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் நிர்மாணப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட சிறைக்கைதிகள், இராணுவ வீரர்கள் என்று பல்லாயிரக் கணக்கானவர்கள் இறந்த போது அவர்களது உடலும் இந்த சுவருக்கு கீழே புதைக்கப்பட்டு செப்பனிடப்பட்டது. சீமெந்துடன் பகோது எழும்புக் கூட்டு எச்சங்களும் சேர்ந்துதான் சுவரை தாங்கி நிற்கின்றன.

ஆனால் இந்த கண்ணீர் கதைகளை விடுத்து இந்த சுவர் தற்போதைய சீன அரசாங்கத்துக்கு சிறந்ததோர் வருமான மார்க்கமாக உள்ளது. ஆபத்தான நிலைமை ஒன்றின் போது நாடு முழுவதுக்கும் சில விநாடிகளில் தகவல் அனுப்பக்கூடியவாறு புகை மற்றும் வெளிச்சக் கோபுரங்களை இடை இடையே கொண்டு ஒரு மாபெரும் பாதுகாப்புக் கவசமாக அமைக்கப்பட்டிருக்கும் சீனப் பெருஞ்சுவரை பார்வையிட நாளாந்தம் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகிறார்கள். இதனால் சீன அரசுக்கு கணிசமான வருமானம் கிடைக்கிறது.



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.


கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

Website: www.lapik.com/atul

436331

## சுற்றுலா



நமது நாட்டில் தேர்தல் என்பது மற்றொரு உள்நாட்டு யுத்தம் போல் தான் நடந்து முடிவது வழக்கம். தேர்தல் தினத்தில் காலையிலேயே சென்று வாக்களிக்குமாறு தேர்தலுக்கு முந்திய தினம் அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் சம்பிரதாயபூர்வமாக வேண்டுகோள் விடுப்பதுண்டு. காரணம் என்னவெனில் காலையில் செல்லாது தாமதித்துப் போனால் எமது வாக்குரிமை பறிபோயிருக்கும் வாய்ப்பிருக்கிறது என்பதுதான். சுதந்திரமான வாக்களிப்பு என்ற சொல் பெரும்பாலும் அர்த்தமுடையதாக இருப்பதில்லை. படத்தில் காணப்படும் அவுஸ்திரேலிய வாக்காளர்கள் சிலர் வாக்களிக்கும் காட்சி. சமீபத்தில் அந்நாட்டில் நடந்த பொதுத் தேர்தலில் வாக்களிக்க முன்னர் கடற்கரையில் சென்று குளித்துவிட்டு, அந்த நீச்சல் உடைகளுடனேயே வாக்குச் சாவடிக்குள் பிரவேசித்து தமது ஜனநாயக உரிமையை பிரயோகிக்கும் கொடுத்து வைத்த மக்கள்தான் இவர்கள்! சிக்கனமான ஆடைகளுடன் சுதந்திரமாக புள்ளடிவிடுகிறார்கள். 'பூரண சுதந்திரமான' வாக்களிப்பு என்று இதனை அழைக்கலாமா...?

## சுதந்திரமான வாக்களிப்பு



ஒட்டகங்களும் ஒட்டகச் சிவிங்கிகளும் முட்செடிகளை தமது ஆகாரமாக உட்கொள்வது பற்றி அறிந்திருந்திருப்பீர்கள். காடுகளிலும், பாலைவனங்களிலும் வளரும் சில வகை முட்செடிகளில் மூன்று முதல் 6 அங்குலம் நீளமான முட்கள் காணப்படும். மனித உறுப்புகளில் தைத்தால் அதிக எரிவையும் வலியையும் உண்டுபண்ணும் இவ்வகை முட்களை ஒட்டகங்கள் லாவகமாக மென்று உண்ணும் சக்தி கொண்டவை. ஒட்டகங்களின் நாவில் உள்ள செல்களும் அவற்றில் சுரக்கும் ஒரு வகை அமிலமும்தான் இதற்கு துணை புரிகின்றன. நாவில் உள்ள செல்கள் காயமடைந்து சிறிய வலி ஏற்படுகின்ற போதும் அவை விரைவாகவே புதிய செல்கள் மூலம் பிரதியீடு செய்யப்படுகின்றன. ஒட்டகச் சிவிங்கி ஒன்று முட்செடியொன்றை உண்ணுவதைத் தான் இங்கு காண்கிறீர்கள்.

## முள் ஆகாரம்



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 01.01.2002



### செல்வன் மதுஜன் குணபாலன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குணபாலன் - வாணிஸ்ரீ தம்பதிகளின் செல்வப் புதல்வன் மதுஜன் தனது முதலாவது பிறந்தநாளை 01-01-2002 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், தம்பி, தங்கை, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மதுஜனை வல்லை முத்துமாரி அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் அப்பா, இரா.குணபாலன்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் 12.23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.